கல்கி



KALKI ஆகஸ்ட் 7, 1955 4 அணா

"எவ்வளவு மனோகரமானது" என்கிறார் ஷீலா ரமானி



"லக்ஸ் டாய்லட் சோப்பின் புது மணத்தை



நான் விரும்புகிறேன்."

"எனக்கும் பிடித்த மலர்களை அது நினைவூட்டுகிறது — அது மிகவும் கவர்ச்சியுடையது — இனிமையானது! லக்ஸ் டாய்லட் சோப்பின் உத்தமமான, மிருதுவான நுரையின், தங்கி வீசும் அந்த நறுமணத்தை நான் மிகவும் விரும்புகிறேன்."

தலைமுதல் கால் வரை கவர்ச்சி அளிக்க பெரிய சைஸிலும் கிடைக்கிறது.



லக்ஸ் டாய்லட் சோப்



சினிமா நட்சத்திரங்களின் சுத்தமான, வெண்மையான, அழகு தரும் சோப்

LTS. 612-50 TM

மலர் 15
இதழ் 1

கல்கி
பொருளடக்கம்

மன்மத ௵
ஆடி 22

1955 ஆகஸ்டு 7

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 15 | இதழ் 1

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵ | ஆடி 22

'கல்கி' அன்பர்களுக்கு

தமிழ் நாட்டு மக்களின் பத்திரிகையான 'கல்கி'க்கு இந்த ஆகஸ்ட் மாதத்தில் பதினைந்தாவது ஆண்டு ஆரம்பமாகிறது என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 'கல்கி' பத்திரிகையின் விநியோகத்தைப் பற்றி நேயர்களுக்கு நமது நன்றியைச் செலுத்த விரும்புகிறோம். பாரத நாட்டில் தமிழிலும் மற்ற மொழிகளிலும் வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளையும் விடத் தமிழ் மக்களின் பத்திரிகையான 'கல்கி', இந்தியாவிலேயே விநியோகத்தில் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. இப்பொழுது எண்பத்திரண்டாயிரம் பிரதிகளுக்கு மேல் செலவாகிறது. இந்தப் பெருமை தமிழ் மக்களையும் தமிழ் மொழியையும் சாரும்.

ஆரம்பித்த நாளிலிருந்து தமிழ் அன்பர்களின் ஆதரவு எல்லா வகையிலும் இந்தப் பத்திரிகையை வளர்த்து வந்தது. காலஞ் சென்ற பேராசிரியர் திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சலியாத உழைப்பும், அவருடைய ஆற்றல் மிக்க எழுத்தும் இந்தப் பத்திரிகையின் ஜீவநாடியாக நின்றன. ரசிகமணி டி. கே. சி. அவர்களுடைய அன்பும் ராஜாஜி அவர்களின் ஆசியும் இந்தப் பத்திரிகையைப் பேணி வளர்த்து வந்துள்ளன.

கடந்த ஆறு மாதத்தில் நமது பத்திரிகையின் விற்பனையும் பன்னிரண்டாயிரம் பிரதிகள் அதிகரிக்கும் வகையில், தமிழ் மக்கள் தங்கள் ஆதரவையும் ஊக்கத்தையும் தொடர்ந்து வழங்கி யிருக்கிறார்கள்.

இதை யெல்லாம் எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

பதினைந்தாம் ஆண்டு தொடங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் அனைவரையும் நமது ஸ்தாபனத்தின் சார்பில் ஒன்று கேட்டுக் கொள்கிறோம்: தமிழ் அன்பர்களின் ஊக்கம் மேலும் மேலும் அதிகரித்து, நமது முன்னேற்றத்துக்கு எப்பொழுதும் துணை செய்ய வேண்டும். இதுவே எங்கள் ஆசை. இந்த ஆசையின் வெளியீடாக நமது ஓவியர் மணியம் அவர்களின் அட்டைப்படம் அமைந்திருக்கிறது. பதினான்கு மலர்கள் சூழ்ந்த வட்டத்தின் நடுவே தமிழ் மக்களின் அன்புப் பீடத்தில் பதினைந்தாவது மலரைச் சமர்ப்பிக்கிறோம்.

நேருவும் ருஷ்யாவும் ஆட்கொண்ட ரகசியம்

ராஜாஜி

நேரு அவர்களின் ருஷ்யச் சுற்றுப் பிரயாணம் இவ்வளவு வெற்றிகரமாக நடந்தேறியதின் இரகசியம் என்ன?

உலகத்தில் தற்போது எல்லா நாட்டு மக்களும் பரிசுத்த உணர்ச்சியோடு சாந்தியை விரும்புகிறார்கள். எப்போதுமே எல்லா மக்களிடமும் இந்த மனப்பான்மை இருந்து வருகிறது என்பது உண்மையாயினும், தற்போது அது ஒரு மிகத் தீவிர ஆவலாக முற்றி இருக்கிறது. இந்த விசேஷச் சூழ்நிலையில் நேருஜியின் ருஷ்யப் பிரயாணம் அமைந்தது. பொதுவாகவே, சரியான சந்தர்ப்பத்தில் ஒரு நல்ல நிகழ்ச்சி நிகழ்ந்தால், அதற்கு இருமடங்கு வெற்றி வந்து சேருகிறது. இது ஒரு காரணம். இதையே நேரு அவர்கள் தம்முடைய ருஷ்யப் பிரயாணத்தின் வெற்றிக்குக் காரணம் என்று அடக்கத்தோடு சொல்லுவார்.

இரண்டாவதாக ஒரு முக்கியமான விஷயம். இதுவரையில் 'கம்யூனிஸ்ட் நாடுகளில் உள்ள மக்களுக்கு உலகத்தில் நண்பர்களே இல்லாமல் இருந்தது. எப்பொழுதுமே மனிதப் பிறவிக்கு நட்பு என்பது ஒரு அவசியமான மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியை நாடுவதும், அது இல்லாவிடில் சங்கடப்படுவதும், மனித இயற்கை' மேற்கு உலகத்தில் இதுவரை எவருமே ருஷ்ய அரசாட்சியையும் மக்களையும் சந்தேகித்து வந்தார்கள். விரோதித்தும் வந்தார்கள். இப்பொழுது அந்த மேற்கு உலகத்தோடு அரசியல் முறைகளிலும் பண்பாட்டிலும் நெருங்கிய தொடர்பு கொண்ட புகழ் பெற்ற ஒருவர், உலக மதிப்புக்கு உரிய ஒருவர், அந்தரங்க சுத்தியோடு ருஷ்ய மக்களுக்குப் பரிசாகக் கொடுக்க நட்புப் பெருஞ் செல்வத்தைக் கொண்டு சென்றார். அவருடைய ஒவ்வொரு செயலிலும் முகத்திலும் களங்கமற்ற அன்பு பிரகாசித்தது. இது ருஷ்ய மக்களின் மனத்தை, அவர்களையும் அறியாமல், கவர்ந்தது. சென்ற வாரத்தில் சென்னை மக்கள் பார்த்த சினிமாப் படத்தில் ருஷ்ய ஆண்பெண்பாலர் சிசுக்கள் இவர்களின் முகங்களிலெல்லாம் இந்த மகிழ்ச்சி பொங்கியதைக் கண்டோம். இதுவே விஜயத்தின் இரண்டாவது இரகசியம்.

உலகத்து மக்கள் ஆராய வேண்டிய விஷயம் என்ன வென்றால், உண்மை அன்பைக் காட்டினால் எத்தகைய சிக்கலும் கரைந்து தீர்ந்து விடும். பயந்தும் ஐயப்பட்டும் சமாதான நிபந்தனைகளை எழுதி உலக சாந்தியை உண்டாக்கலாம் என்பது முடியாத காரியம். நம்முடைய நேருஜியைப் போல், அமெரிக்கப் பெரியார் ஒருவர் ருஷ்யாவுக்குப் போய்க் களங்கமற்ற அன்பைக் காட்டினாரானால், அவரும் இதே வெற்றியை அடைவார். ஆனால் களங்கமற்ற அன்பைக் காட்டுவது எளிதல்ல. உள்ளத்தில் அந்த நிலை அமைந்து தோன்ற வேண்டும்.

அன்பின் சக்தியை இன்னும் நாம் முற்றிலும் உணரவில்லை. ஏசுநாதர், காந்தி அடிகள், இவர்களுடைய பேச்சை ஆழ்ந்து படித்தோமானால், அரசியலை மறந்து விட்டுப் படித்தோமானால், அந்த சக்தியை நன்றாக உணர்வோம்.

மலாய் நாட்டில் தேர்தல் முடிவு

ஒரு தேச மக்களிடையே, அவர்கள் எச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயினும், ஒற்றுமை நிலவுமாயின், அவர்கள் எவ்வளவு மகத்தான வெற்றி பெறலாம் என்பதற்குச் சமீபத்தில் மலாயா நாட்டில் நடந்த தேர்தலே நல்ல சான்றாகும். மலாய் நாட்டில் வாழும் சீனர், மலாயர், இந்தியர் இந்த மூன்று சமூகத்தினரும் அமைத்த முக்கூட்டு அணிக்கு இந்தத் தேர்தலில் தொண்ணூற்று ஐந்து சத விகிதத்துக்கு மேற்பட்ட ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன.

நாட்டுக் கட்சி என்ற போர்வையில் தேர்தலில் கலந்து கொண்ட வகுப்புவாதக் கட்சிக்கு ஒரு ஸ்தானம் கூடக் கிடைக்கவில்லை. அக்கட்சியின் தலைவர் கூடத் தேர்தலில் தோல்வியடைந்தார். முக்கூட்டு அணியால் அமைக்கப்பட்ட இரண்டு இந்தியர்கள் வெற்றி பெற்றுள்ளனர். பெரும்பான்மையோர் அடங்கிய சமூகங்களுடன் ஒத்துழைக்க இந்தியர்கள் முன்வந்தது புத்திசாலித்தனமாகும். முக்கூட்டு அணிக்குப் பெருவாரியான ஸ்தானங்கள் கிடைத்ததாலேயே, அதன் தலைவர் 1959-ம் ஆண்டில் மலேயாவுக்குப் பூரண சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் சர்க்காரை வற்புறுத்தும் ஆற்றல் பெற்றிருக்கிறார். அக்கட்சியின் மாபெரும் வெற்றி ஜனநாயக ஆட்சியில் மலாய் நாட்டு மக்களுக்குள்ள ஆர்வத்தை உலகத்துக்கு நிரூபணம் செய்திருக்கிறது.

நாணய முறையில் தசாம்சம்

சென்ற வெள்ளிக்கிழமை டில்லி லோக சபையில் மிக முக்கியமான சீர்திருத்த மசோதா ஒன்று நிறைவேறியிருக்கிறது.

பாரததேசம் சுதந்திரம் பெற்றதிலிருந்து எத்தனையோ முக்கியமான சீர்திருத்தங்கள் சட்ட பூர்வமாக்கப்பட்டிருக்கின்றன. எத்தனையோ முக்கியமான சீர்திருத்தங்கள் ஏற்பட்டு, மக்கள் அதன் பயனை அனுபவித்து வருகிறார்கள். அன்னிய ஆதிக்கத்தில் ஏற்பட்டிருந்த பல சிக்கல்கள் இப்பொழுது நீங்கியிருக்கின்றன.

இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள நாணயச் சீர்திருத்தச் சட்டம் வேறொரு வகையானது. ரூபாய், மணங்கு, கஜம் முதலியவற்றைப் புது முறையில்வகுத்து அமைப்பது இது. மேம்போக்காகப் பார்த்தால் இதனால் ஏதொரு புது நன்மையும் இல்லையே என்று தோன்றும். ஆனால் ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் வாழ்க்கை முறையில் இதனால் அநேக சௌகரியங்கள் உண்டாகும் என்பதைக் காணலாம். பத்தில் ஒரு பங்கு என்கிற முறை எல்லாக் கணக்கு வழக்குக்கும் மிக வசதியாகப் போகும். 'சரித்திர பூர்வமாக வந்த நம் நாட்டு முறைகளை விட்டு விட்டு இந்த மேனாட்டுத் தசாம்ச முறையை இப்போது புகுத்துவதற்கு என்ன அவசியம் வந்துவிட்டது!' என்று சிலர் கேட்பார்கள். உண்மையில் தசாம்ச முறையானது பாரத நாட்டு அறிஞர்களின் மேதையில் தோன்றிய கணிதச் செல்வம். பாரத நாட்டிலிருந்துதான் அது உலகம் எல்லாம் பரவிற்று.

ரூபாய்க்கு 192 பைசா என்றிருப்பதை மாற்றி ரூபாய்க்கு 100 பைசா என்று அமைக்கப் போகிறார்கள். அதாவது புதும் பைசாவானது கிட்டத்தட்ட இரண்டு பழைய பைசாவின் மதிப்பாகும்.

ஒரு ரூபாய்க்குப் பத்து அணா என்றும், ஒரு அணாவுக்குப் பத்துப் பைசா என்றும் பிரிப்பார்கள். ஐம்பது பைசா கொண்டது அரை ரூபாயாகவும், இருபத்தைந்து பைசா கொண்டது கால் ரூபாயாகவும் அமையும். கூட்டல், கழித்தல், பெருக்கல்—இவை வெகு சுலபமாகப் போகும்.

தேசத்தில் யாவருக்கும் கணக்கு வைத்துக் கொள்ளவும் வழங்கவும் சௌகரியமாக இருக்கும் என்பதனாலேயே தசாம்ச முறை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நாணயத்தில் தசாம்ச முறை இலங்கை, பர்மா, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய நாடுகளில் வழங்குகிறது. நம் நாட்டிலும் கூடிய விரைவில் வருவதற்கான சட்டம் இப்பொழுது இயற்றியாகி விட்டது!

இன்னொரு விஷயம். சென்னையில் வழங்கும் பட்டணம் படி ஒரு அளவு, தெற்கே தமிழகத்தில் வழங்கும் படி சென்னைப் படியை விடச் சிறிது. இப்படி முகத்தல், நிறுத்தல் ஆகிய எல்லா அளவுகளிலும் ஜில்லாவுக்கு ஜில்லா ராஜ்யத்துக்கு ராஜ்யம் வேறுபாடுகள் காண்கிறோம்.

இந்த வேறுபாடுகள் நீங்கித் தேசம் பூராவிலும் ஒரே விதமான கணக்கு வைத்துக் கொள்வதற்கு எளிதாக இருக்கும் தசாம்ச முறையானது அனைவரும் வரவேற்கத் தகுந்தது.

ஓவியர் 'சந்திரா' மறைவு

ஓவியர் 'சந்திரா' மறைந்தது குறித்து நமது காரியாலயத்துக்குப் பல அன்பர்களிடமிருந்து அனுதாபக் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நமது நேயர்களின் அபிமானத்தை ஸ்ரீ 'சந்திரா' எவ்வளவு தூரம் கவர்ந்திருந்தார் என்பது இந்தக் கடிதங்களிலிருந்து தெளிவாகப் புலனாகிறது. கலை உலகுக்கே நேர்ந்த இந்தப் பெரு நஷ்டத்திலே நமது நேயர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம். மறைந்த கலைஞரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பது ஒன்றே இப்பொழுது நமது கடமை. மறைந்த வண்ண ஓவியர் சந்திரா சித்திரங்களாகவும், வர்ணங்களாகவும் நம்மிடையே நின்று நிலவுவாராக!

★★★ [பி. ஸி. ஜி ஊசி குத்துவது சம்பந்தமாகச் சென்ற இதழில் சில முக்கியமான கடிதங்கள் வெளியிட்டிருந்தோம். கீழே வரும் கடிதம் ராஜாஜி அவர்களுக்குத் தஞ்சாவூரிலிருந்து சென்ற வாரம் வந்தது. மறைந்த குழந்தை புஷ்பவல்லியின் தந்தையே நடப்புக்களை விவரமாக எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்திலுள்ள வாசகங்களை அப்படியே கீழே தருகிறோம். —ஆசிரியர்]

பி. ஸி. ஜி

கோ. ஷண்முகக் கண்டியார்,
பலசரக்கு வியாபாரம், கீழ்வாசல்
மார்க்கெட், தஞ்சாவூர்.

ம-ள-ள-ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு,

தஞ்சையில், சுகாதார இலாகா டைரக்டர் அவர்கள் பி. ஸி. ஜி ஊசி குத்தியதால் புகார் ஏதும் கிடையாது என்றும், என் குழந்தை இறந்ததற்குக் காரணம் மேற்படி ஊசி குத்தியதால் அல்ல என்றும், நேரில் சென்று விசாரித்ததாகவும், அறிக்கை ஒன்று இன்றைய 'தினமணி' வெளியூர் பதிப்பில் (29-7-55) படித்தேன்.

சுகாதார இலாகா டைரக்டர் எங்களிடமோ அல்லது எங்கள் தெருவிலோ வந்து விசாரிக்கவில்லை. சென்ற இரண்டு தினங்களுக்கு முன்பு மேற்படியார் எங்களை விசாரிக்க வருவதாக, முனிசிபல் சானிடரி இன்ஸ்பெக்டர் என் வீட்டுக்கு வந்து சொன்னாரே தவிர யாரும் வரவில்லை. வந்து விசாரித்திருந்தால் நடந்த உண்மைகளைக் கூறி இருப்பேன். ஆனால் யாரும் வந்து விசாரிக்கவில்லை.

"என் மகள் புஷ்பவல்லி, வயது 11, குறை ஏதும் இல்லாமல் நலமான உடலோடு துள்ளி விளையாடிக் கொண்டிருந்த பள்ளிச் சிறுமி. சென்ற ஜூன் மாதம் எட்டாந் தேதி காலை ஒன்பது மணிக்கு எங்கள் தெருவிலிருக்கும், இந்து மாடல் பள்ளிக்கூடத்தில், பி. ஸி. ஜி டெஸ்ட்டிங் ஊசி போடுவதாக வந்து குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு போனார்கள். சுறுசுறுப்போடு ஓடிய என் மகள், ஊசி போட்டுக் கொண்டு வரும்போது சோர்ந்து போய் வந்தாள். சுரமும் கூட இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தது. கால் நடக்க முடியவில்லை என்று முடங்கிப் படுத்துக் கொண்டாள். கால் நீட்ட முடியவில்லை என்று ரொம்பவும் கஷ்டப்பட்டாள். இவ்வளவும் மிகக் குறுகிய நேரத்தில்.

பயந்துபோன நாங்கள், உடனே மேற்படி ஊசி குத்தும் அதிகாரியிடம் போய் விஷயத்தைச் சொன்னோம். அதற்கு அவர், என் மகளை வந்து கூடப் பார்க்க விரும்பாமல், இருந்த இடத்தில் இருந்தபடியே "வெள்ளைத் துணியைப் பச்சைத் தண்ணீரில் நனைத்து ஊசி குத்திய இடத்தில் போட்டால் போதும்" என்று பதில் சொல்லி அனுப்பி விட்டார்.

அதற்குள் என் குழந்தைக்குச் சுரம் முன்னிலும் அதிகமாகி விட்டது. மேற்படி அதிகாரி கூறிய சிகிச்சையைச் செய்தோம். பலன் இல்லை. கை கால் முடக்கலும் அதிகமாகி விட்டது. துடித்துப் போன நாங்கள் உடனே பக்கத்தில் உள்ள முனிசிபல் ஆஸ்பத்திரிக்குக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனோம். மேற்படி டாக்டர் மாத்திரை ஒன்று எழுதிக் கொடுத்தார். அதையும் வாங்கிக் கொடுத்தோம். மேற்படி மருந்து கொடுத்த சில மணி நேரம் சுரம் தணிந்திருந்தது. அன்று இரவு ஒன்பது மணிக்கு இரண்டு தடவை மலமும், பல தடவை வாந்தியும் ஆனது. மறுநாள் (9-6-55) காலை ஐந்து மணிக்குக் குழந்தையின் உடல் நிலை மிகவும் மோசமாக இருப்பது கண்டு, வண்டி கொண்டு வந்து, பெரிய ஆஸ்பத்திரி டாக்டரிடம் கொண்டு செல்லும்போது வழியிலே, வண்டியிலே, இரண்டு தடவைகள் இழுப்பு ஏற்பட்டது. அவ்வளவுதான்; என் அருமைக் குழந்தையின் உயிர் நின்று விட்டது. நடந்தது இதுதான்."

அருமை மகளைப் பறி கொடுத்து ஆறாத் துயரில் மூழ்கி இருக்கும் எங்களை மேற்படி அதிகாரிகள் வேறு கிளறிவருகிறார்கள். 29-7-55 'தினமணி'யைப் பார்த்தேன். உண்மைக்கு மாறாக எழுதப்பட்டிருப்பதைப் படித்தேன். உங்களுக்காவது தெரியப்படுத்துவோம் என்று தான் இதை எழுதுகிறேன்.

என்னைப் போன்ற இந்த நாட்டில் உள்ள பெற்றோர்களுக்கும், அரசாங்கத்துக்கும் இந்த உண்மையைச் சொல்லுங்கள். பத்திரிகைகளில் எழுதிப் பொது மக்களுக்கும், முக்கியமாக பி. ஸி. ஜி அதிகாரிகளுக்கும் தெரியப் படுத்துங்கள்.

பி. ஸி. ஜி ஊசி போடுபவரோ, மேற்படி சுகாதார டைரக்டரோ என்னை வந்து விசாரிக்கவில்லை. என் குழந்தைக்கு பி. ஸி. ஜி ஊசி குத்துவதற்கு முன்னால் எந்தவிதமான நலக் குறைவும், வியாதியும் கிடையாது. இது உண்மை; உறுதி.

அரசாங்க அதிகாரிகள் உண்மையை விசாரித்து அறிக்கை வெளியிடாமல், அவர்கள் தம் இஷ்டப்படி அறிக்கை வெளியிடாதிருக்கும் படியாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

[illegible] வணக்கங்களுடன்
கோ. ஷண்முகக் கண்டியார்
29-7-55

15-வது அகில இந்திய காதி, கைத்தறி, சுதேசி &

கைத்தொழில் பொருட்காட்சி, சேலம் 1955

(சேலம், நகரசபையால் நடத்தப்படுவது)

இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் - கலை அரங்கில் தினசரி மாலை 6-30 மணிக்கு


★

நிகழ்ச்சி விவரம்

7-8-55	ஞாயிறு	குமாரிகள் B. ராஜலக்ஷ்மி, B.A., B. மீனாக்ஷி	பாட்டு
8-8-55	திங்கள்	குமாரி கஸ்தூரி, கமலகுமாரி	நடனம்
9-8-55	செவ்வாய்	காரைக்குடி M. K. லட்சுமி	பாட்டு
10-8-55	புதன்	சாயி - சுப்புலட்சுமி (மஞ்சக்கள்வன் புகழ்) ... ... (பின்னணி திருமதி P. A. பெரியநாயகி)	நடனம்
11-8-55	வியாழன்	திரு M. K. தியாகராஜ பாகவதர், S. D. சுப்புலக்ஷ்மி பார்ட்டியார் ... (ஹார்மோனியம் திரு G. ராமநாதன்)	நவீன சாரங்கதாரா (நாடகம்)
12-8-55	வெள்ளி	திருமதி கமலா லக்ஷ்மணன் (குமாரி கமலா)	நடனம்
13-8-55	சனி	குமாரி அபயம் சகோதரிகள்	நடனம்
14-8-55	ஞாயிறு	திரு N.S. கிருஷ்ணன், T.A. மதுரம் பார்ட்டியார்...	தளபதி (நாடகம்)
15-8-55	திங்கள்	திருமதி K. B. சுந்தராம்பாள்	பாட்டு
16-8-55	செவ்வாய்	திரு M. G. ராமச்சந்திரன் பார்ட்டியார் ...	இன்பக்கனவு (நாடகம்)
17-8-55	புதன்	ஷை ஷை ...	பகைவனின் காதலி (நாடகம்)
18-8-55	வியாழன்	ஷை ஷை ...	ஆசைக்கனவு (நாடகம்)
19-8-55	வெள்ளி	கோச்சின் சகோதரிகள்	நடனம்
20-8-55	சனி	சிவாஜி நாடக மன்றம் ... (சிவாஜி கணேசன், S. V. சகஸ்ரநாமம், மைனாவதி, A. ரத்னமாலா)	தோழன் (நாடகம்)
21-8-55	ஞாயிறு	ஷை ஷை ...	நாடோடி (நாடகம்)
22-8-55	திங்கள்	ஷை ஷை ...	விதி (நாடகம்)
23-8-55	செவ்வாய்	சேவா ஸ்டேஜ் சர்வீஸ் ... (சிவாஜி கணேசன், S.V. சகஸ்ரநாமம், A. ரத்னமாலா)	வானவில் (நாடகம்)
24-8-55	புதன்	ஷை ஷை ...	வானவில் (நாடகம்)
25-8-55	வியாழன்	குமாரி கமலா (போர் வயல் புகழ்) ... ... (நடன ஆசிரியர் திரு P. S. கோபாலகிருஷ்ணன்)	நடனம்
26-8-55	வெள்ளி	குமாரி ராஜேஸ்வரி	நடனம்
27-8-55	சனி	குமாரி R. தங்கமணி	நடனம்
28-8-55	ஞாயிறு	குமாரி நீலா (அம்பேலா புகழ்)	நடனம்
29-8-55	திங்கள்	முத்தமிழ்க் கலா வித்வ ரத்ன T. K. S. சகோதரர்கள்...	எது வாழ்வு? (நாடகம்)
30-8-55	செவ்வாய்	ஷை ஷை ...	ராஜராஜ சோழன் (நாடகம்)
31-8-55	புதன்	ஷை ஷை ...	ராஜராஜ சோழன் (நாடகம்)

பொருட்காட்சிக் கமிட்டியார்

பிடிவாதம்!




பி. ஸி. ஜி விஷ(ய)ம்!




"அரை வைத்தியம் ஆயிரம்பேரைக் கொல்லும்; வைத்தியம் வீட்டைக் காக்கும்."—ராஜாஜி.

கீழே இறங்கியது!



இந்திய ரூபாய்க்குச் சமமாக, பாகிஸ்தான் ரூபாயின் மதிப்பும் குறைக்கப்பட்டிருக்கிறது.

புதிய கிரகம்!




பூமியைச் சுழன்று சுற்றக்கூடிய செயற்கை கிரகங்களைத் தயாரிக்கும் திட்டத்துக்கு அமெரிக்கா ஆதரவு அளித்திருக்கிறது. — செய்தி

என்ன சேதி?

பாகிஸ்தானின் நாணய மதிப்பு

ஆறு ஆண்டுகளுக்கு முன் பிரிட்டனும் பிரிட்டனைப் பின்பற்றி இந்தியா முதலிய பல நாடுகளும் பொருளாதார நிலைமையைச் சமாளிப்பதற்காகத் தங்கள் நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அப்போது பாகிஸ்தானும் அம்முறையைக் கைக்கொண்டிருக்க வேண்டும். காமன்வெல்த் தொடர்புள்ள நாடுகள் எல்லாம் நாணய மதிப்பைக் குறைத்துக் கொண்டிருக்கும் போது பாகிஸ்தானும் அவ்வழியைப் பின்பற்றுவதுதான் விவேகம் ஆகும் என்று நிதி நிபுணர்கள் கூறினர். ஆனால், பாகிஸ்தான் அவ்விதம் செய்யாததுடன், தான் எக்காலத்திலும் தன் நாணய மதிப்பைக் குறைக்கப் போவதில்லை என்று வீம்பு பேசியது. அப்போது கொரியா யுத்தம் மூண்டதால், விலைவாசிகள் அதிகமாயின. பாகிஸ்தானில் உற்பத்தியாகும் முக்கியப் பொருளான சணலையும் பருத்தியையும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் பாகிஸ்தான் சில வருஷங்கள் வரையில் நிலைமையைச் சமாளிக்க முடிந்தது. ஆனால், சென்ற சில வருஷங்களாக அதன் பொருளாதார நிலைமை மோசமாகி விட்டதால், பாகிஸ்தான் இப்போது மற்ற நாடுகளைப் போலவே நாணய மதிப்பைக் குறைத்துக் கொள்ளும்படி நேர்ந்திருக்கிறது. பொருளாதார நிலைமை மேலும் சீர்கெட்டு நிலைமை சமாளிக்க முடியாமல் முற்றுவதற்கு முன் பாகிஸ்தான் தன் நாணய மதிப்பைக் குறைத்துக் கொண்டது மிகவும் நல்ல காரியமே.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇



நாகர்கோவிலை யடுத்த ஆல்வாய்மொழி திருவாளர் C. N. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் குமாரன் செல்வன் **க. அன்புமலர்,** B. A. (Hons.)க்கும் சாத்தான்குளம் திருவாளர் G. S. கணபதியா பிள்ளை அவர்கள் குமாரி செல்வி **விசாலாட்சிக்கும்** சாத்தான்குளம் மணமகள் இல்லத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. அன்று இரவு திருமதி K. B. சுந்தராம்பாள் அவர்களின் இன்னிசை விருந்து நடைபெற்றது.

மணமக்கள் நீடு வாழ்க!

ருஷ்யாவில் பண்டித நேரு

பாரதப் பிரதமர் பண்டித நேருவுக்கு ருஷிய மக்கள் அளித்த உள்ளார்ந்த அன்பு வரவேற்பைப் பாரத சர்க்காரும் ருஷ்ய சர்க்காரும் செய்திப் படமாக எடுத்திருக்கிறார்கள். ருஷ்யப் படம் வர்ணப் படம்.

இப் படங்களைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றவர்கள். 'ஆகா! நாம் எப்படிப்பட்ட யுகத்தில் இருக்கிறோம்! நேரு யுகத்தில் அல்லவா இருக்கிறோம்!' என்று பெருமையால் பூரித்துப் போகாமல் இருக்க முடியாது.

ருஷ்யாவில் எங்கே சென்றாலும் வழியெல்லாம் ருஷ்ய மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று, மலர்ச் செண்டுகள் தூவி வரவேற்ற காட்சிகளைப் பார்க்கும் போது நெஞ்சம் நெகிழ்ந்து விடுகிறது. அங்கெல்லாம் பண்டித நேரு பேசுகையில், 'பாரத மக்களின் நல் வாழ்த்துக்களை உங்களுக்கு வழங்க வந்திருக்கிறேன்' என்று கூறும்போது மெய் சிலிர்க்கிறது.

பண்டித நேரு இன்று உலகில் மகத்தான பெருந் தலைவராக விளங்குகிறார். ஆசி வழங்க எல்லாத் தகுதியும் பெற்றவர் அவர். ஆயினும் 'பாரத மக்களின் நல் வாழ்த்துக்கள், நல்லெண்ணங்களை ஏந்திவரும் தூதன்' என்றே அவர் தம்மைக் கூறிக் கொள்ளும் பண்பைக் கேட்டு எந்த இந்தியருடைய உள்ளந்தான் நெகிழாமல் இருக்க முடியும்!

ருஷ்யாக் குழந்தைகளின் வரவேற்பு. ருஷ்ய எஞ்ஜின் சாலைகள், புல்கானினுடன்

மாஸ்கோ ஸ்டேடியத்தில் கை குலுக்கும் நேயக்காட்சி — இப்படிப் பலப்பல உள்ளத்தை நெகிழ்விக்கும் காட்சிகள், பெருமை கொள்ளச் செய்யும் காட்சிகள், காண்கின்றோம்.

கைத்தறி உதவிப் பணம் : தவறான புகார்

சேலத்தில் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் பேசும் போது 1953—54-ம் வருஷத்தில் இந்த ராஜ்யத்துக்கு ரூ. 33 லட்சம் கைத்தறி ஸெஸ் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டதென்றும், அதில் சென்னை ராஜ்ய சர்க்கார் ரூ. 4 லட்சமே கைத்தறி நெசவாளர்களுக்காகச் செலவழித்திருக்கிறார்கள் என்றும் கூறியிருப்பதாக ஒரு செய்தி ஜுலை 8-ம் தேதி தினப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. இந்தக் கணக்குத் தவறு.

1953-54ம் வருஷத் திட்டப்படி பொது மக்களுக்கு 'ரிபேட்' வழங்குவதற்காகக் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நியாய விலைக் கடைகளுக்கும் அளித்த மான்யத்தைப் பற்றித் தான் இந்தச் செய்தி. இந்த உதவிப் பணம் (ரிபேட்) சம்பந்தமாகச் சென்னை ராஜ்ய சர்க்காரின் சரியான புள்ளி விவரம் அடியிற் கொடுக்கப்பட்டிருக்கிறது :

கைத்தறித் துணிகள் வாங்குவோருக்கு 'ரிபேட்' வழங்குவதற்கென்று இந்திய சர்க்கார், ரூ. 33.10 லட்சம் ஒதுக்கினார்கள். இந்தத் தொகையில் ரூ. 27.6 லட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 'ரிபேட்' வழங்க ராஜ்ய சர்க்கார் ஒதுக்கினார்கள். மிகுதியுள்ள ரூபாய் 5.5 லட்சம் நியாய விலைக் கடைகள் மூலம் 'ரிபேட்' வழங்கத் தொழில் வர்த்தக இலாகாவிடம் கொடுக்கப்பட்டது. 31-3-55 முடிய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ரூ. 22.62 லட்சமும், நியாய விலைக் கடைகள் மூலம் ரூ. 1.79 லட்சமும் செலவழிக்கப் பட்டிருக்கின்றன. மார்ச்சு மாதத்துக்குப் பிறகு மீதியுள்ள தொகையும் செலவழிக்கப்பட்டு விட்டது. சேலம் ஜில்லாவிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு உதவுவதற்கு என்று 'ரிபேட்' வழங்கிய தொகை ரூ. 4.14 லட்சமாகும்.


இந்தத் தகவல்கள் எல்லாம் சென்னை ராஜ்ய சர்க்கார் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இதிலிருந்து ஸ்ரீ டி. டி. கே.யின் புகாருக்கு இடமில்லை என்பது தெளிவாகும்.

சட்டசபையில் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 29

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான ஸ்ரீ எஸ். வன்னியசிங்கம் இவ்வாரம் பார்லிமெண்டில் பட்ஜட் விவாதத்தின்போது பேசுகையில் நாட்டில் சர்வசிங்கள ஆதிக்கம் படிப்படியாக அதிகரித்து வருவதில் தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் கவலையும் கலக்கமும் அடைந்திருக்கிறார்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். தமிழுக்கும் சிங்களத்துக்கும் சரிசம அந்தஸ்து அளிப்பதாகப் பிரதம மந்திரியும் இதர மந்திரிகளும் அடிக்கடி சொல்லி வந்த பொழுதிலும் அதற்கு நேர்மாறாகக் காரியங்கள் நடப்பதாயும் தமிழ் ஊர்ப் பெயர்களெல்லாம் சிங்களப் பெயர்களாக மாற்றப்படுவதாயும் எடுத்துச் சொன்னார். இந்த நிலைமை தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு போதும் நிம்மதியை அளிக்க முடியாதென்றும் அவர் கூறினார்.

தமிழுக்குச் சம அந்தஸ்து அளிக்க அரசியல் அமைப்பு விதியைத் திருத்துவது பற்றி அவர் குறிப்பிடுகையில், ஒரு வகுப்பாருக்கு இல்லாத வில்லங்கங்களை இன்னொரு வகுப்பாருக்கு ஏற்படுத்தக் கூடாதென்று அரசியல் அமைப்புச் சட்டத்தின் 29 வது ஷரத்திலிருக்கிறது. அப்படியிருந்தும் லட்சக்கணக்கான இந்தியத் தமிழர்களின் ஓட்டுரிமையையும் பிரஜாவுரிமையையும் அரசாங்கம் பறித்து விடவில்லையா! அரசாங்கத்தின் மனம் மாறாத வரையில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதினால் மட்டும் தமிழுக்கும் தமிழர்களுக்கும் பாதுகாப்பு ஏற்பட்டு விட முடியாது. தமிழ் மக்கள் தங்கள் மொழியின் வருங்காலத்தைப் பாதுகாக்க எவ்விதமான தியாகங்கள் செய்யவும் சித்தமாயிருக்கிறார்களென்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ வன்னியசிங்கம் அழுத்தம் திருத்தமாகக் கூறினார். தேசிய மொழிகளில் உயர்தரக் கல்வி போதிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளபடியினால் தமிழ் மாணவர்கள் தமிழில் கல்வி பயிலத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவ வேண்டுமென்றும், தமிழ் மாணவர்கள் இந்தியாவுக்குச் சென்று கல்வி பயிலுவதைத் தடை செய்யக் கூடாதென்றும் அவர் மேலும் பேசுகையில் வற்புறுத்தினார்.



ராவ்சாஹேப் டாக்டர் பி. சீனிவாசன் அவர்கள் புதல்வன் திரு என். டி. ராஜ் B. E.-க்கும், திரு என். பாஸ்கரன் B. E., அவர்களின் புதல்வி சௌ. மைதிலிக்கும் ஜூலை 8-ம் தேதி சென்னை தியாகராயநகரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

சினிமா விஷயம்

சிங்கள சினிமாப் படங்களை இந்திய ஸ்டுடியோக்களில் தயாரிப்பதினால் ஏராளமான பணம் இலங்கையை விட்டுப் போகிறதென்றும் சிங்களப் படங்களை இலங்கையிலேயே தயாரிக்க வேண்டுமென்றும் ஜனாப் மரைக்காயர் இவ்வாரம் பார்லிமெண்டில் வற்புறுத்தினார். தமிழ் இந்தி மெட்டுகளுடன் சிங்களப் பாட்டுகள் சிங்கள சினிமாப் படங்களில் இடம் பெறுவதால் அவை இலங்கையைத் தமிழ்மயமாக்குகிறதாம். இந்த நிலைமை மிகவும் ஆபத்தானதென்று ஜனாப் மரைக்காயர் பலமாக எச்சரித்தார். பிரபல சினிமா ஸ்தாபன அதிபரும் சிங்களப்பட உற்பத்தியாளருமான ஸ்ரீ குணரத்னம் இதைப்பற்றி அபிப்பிராயம் கூறுகையில் சிங்கள சினிமாப் படப் பிடிப்புத் தொழிலை இலங்கையர் மயமாக்குவது வரவேற்கத் தகுந்ததென்றாலும் இலங்கையில் ஸ்டுடியோ வசதிகளில்லாதவரை இந்தியாவுக்குச் சென்று சிங்களப் படங்களை எடுப்பது தவிர்க்க முடியாதென்றார். இலங்கையில் இரண்டே இரண்டு ஸ்டுடியோக்கள் மட்டும் தானிருக்கின்றன. அவற்றில் கொஞ்சம் சுமாரென்று சொல்லக் கூடிய ஸ்டுடியோவின் அதிபரே இந்தியாவுக்குச் சென்று சிங்களப் படங்களைப் பிடிப்பதைச் சுட்டிக் காட்டிய ஸ்ரீ குணரத்னம், "படம் பிடிக்கப் பணமும் அழகுமிக்க இயற்கைக் காட்சிகளும் மட்டுமிருந்தால் போதாது. தொழில் நுட்ப சாதனங்களும் நிபுணர்களும் தேவை" என்று தெரிவித்தார்.

சிறு சலுகை

கொழும்பு முனிசிபல் சபை சுகாதார சேவையில் ஈடுபட்டிருக்கும் இந்தியத் தொழிலாளர்களில் சுமார் 90 பேர்களுக்கு இலங்கையை விட்டு வெளியேறும்படி இமிகிரேஷன் காரியாலயம் நோட்டீஸ் பிறப்பித்திருந்தது. இவர்கள் இலங்கையில் பல வருட காலம் சேவை புரிந்த பொழுதிலும் ஓய்வு பெறும் வயதை அடைந்தால்தான் முனிசிபல் சபையிடமிருந்து நஷ்ட ஈடு பெற்று நான்கு காசுடன் இந்தியாவுக்குத் திரும்ப முடியும். ஓய்வு பெறும் வயதுக்குமுன்னால் இலங்கையை விட்டுப் போக நேரிட்டால் இவர்கள் வெறுங் கையுடன் போக வேண்டியதுதான். இந்த நிலைமையை நகர மேயர் டாக்டர் என். எம். பெரைராவும் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ வி. கே. வெள்ளையனும் இமிகிரேஷன் கண்ட்ரோலரிடம் எடுத்துச் சொல்லியதற்கு இணங்க, மேற்படி இந்தியத் தொழிலாளர்களுக்கு மேலும் இரண்டு வருட காலம் வாசபர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது. —ரஜனி



சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

80. விபீஷணன்

சபையில் ராவணனுடைய தம்பி கும்பகர்ணன் எழுந்து பேசினான் :

"மகாராஜனே! நீதி சாஸ்திரம் அறியாதவனைப் போல் நடந்து கொண்டபடியால் பெரும் அபாயத்தைத் தருவித்துக் கொண்டிருக்கிறீர். ராம லக்ஷ்மணர்கள் பேரில் உமக்கு விரோதம் இருந்தால் முந்தி அவர்களை எதிர்த்து அவர்களைத் தோற்கடித்து வதம் செய்துவிட்டு, பிறகு அல்லவோ சீதையைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தீரானால் சீதையும் உம்மை விரும்பியே ஒப்புக்கொண்டிருப்பாள். மலையைத் தொடர்ந்து தழுவி நதி ஓடுவது போல் வெற்றி பெற்ற வீரனை அவள் தொடர்ந்திருப்பாள். அப்படி நீர் செய்ய வில்லை. யாரையும் யோசனை கேட்காமல் பாப காரியம் செய்து விட்டு விரோதம் சம்பாதித்துக் கொண்டு இப்போது காலம் தாண்டிய பின் ஆலோசனை சொல்லும்படி கேட்கிறீர். இது அரசனுக்குரிய உத்தம வழியல்ல. ஏன், மத்திம வழியுமல்ல."

இவ்வளவும் தைரியமாகச் சொல்லி விட்டு கும்பகர்ணன் அண்ணன் முகத்தைப் பார்த்தான். தான் சொன்ன கடினமான மொழிகளைக் கேட்ட ராவணன் முகம் வாடியதைப் பார்த்து அவனால் பொறுக்க முடியவில்லை. சூரன் கும்பகர்ணனுக்கும் ராவணனுக்கும் அளவு கடந்த அன்பு. நடந்தது நடந்து போயிற்று. இனி அதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. அண்ணனை விட்டு விடுவதற்கில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

ராமன் நிகரற்ற வில்லாளி என்பது கும்பகர்ணனுக்குத் தெரியும். ராவணன் பெற்றிருக்கும் வரங்களின் வரம்பும் குறையும் கும்பகர்ணன் அறிவான். ஆயினும் இப்போது ராவணனைக் கைவிடுவதற்கு இல்லை. அதைரியப்படுத்துவதில் பயனில்லை என்று எண்ணி கும்பகர்ணனும் மந்திராலோசனை சபையில் மற்றவர்கள் பேசியது போலவே தைரியம் பேச ஆரம்பித்தான் :

"நீர் செய்தது தவறு. கையாண்ட முறையும் தவறு. முன்னால் செய்ய வேண்டியதைப் பின்னால் செய்கிறீர். பின்னால் செய்ய வேண்டியதை முன்னால் செய்து விட்டீர். ஆயினும் இந்த

ராமனை நான் வதம் செய்வேன். பயப்பட வேண்டாம். அவன் பாணங்கள் ஒன்றிரண்டு என்மேல் படும். ஆயினும் அவனைக் கொன்று அவன் ரத்தத்தைக் குடித்துவிட்டு உமக்கு நான் வெற்றி சம்பாதித்துத் தருவேன். அண்ணா! கவலையற்றுச் செய்யவேண்டியதைச் செய்வீர்" என்றான்.

• • •

கும்பகர்ணன் ஏதோ முன்னுக்கும் பின்னுக்கும் முரணாகப் பேசினான் என்றும், அதற்குக் காரணம் அவனுடைய மந்த புத்தி என்றும் சிலர் வியாக்கியானம் செய்வது உண்டு. சாபத்தால் ஆறு மாதம் தூங்கினாலும் விழித்தபோது அவன் அறிவுக்குக் குறைவில்லை. முதலில் உண்மையை பயப்படாமல் பேசினான். பிறகு ராவணனுடைய நிலையைப் பார்த்து அன்பு மேலிட்டுப் பேசினான். குடும்பக் காப்புக்கு வேண்டிய நற்குணங்களை நன்றாகப் பெற்ற வீரன்.

ராவணனுடைய பிரதான ஆலோசனைக்காரன் பிரஹஸ்தன். இவன் ராவணனுடைய பலத்தை எடுத்துக் காட்டி, அவனை யாராலும் வெல்ல முடியாது என்றும் கவலைப்பட வேண்டியதில்லையென்றும் சொல்லி ராவணனைச் சந்தோஷப் படுத்தினான்.

ராவணனும் உற்சாகமடைந்து பேசினான். "குபேரனை ஜெயித்தவன் அல்லவா நான்? அவனை விரட்டியடித்து இந்த லங்கையைப் பற்றிக் கொண்ட என்னை யார் இங்கே வந்து எதிர்ப்பார்கள், பார்க்கலாம்!" என்றான். சபை ஆரவாரித்தது.

• • •

இந்த ஆரவாரத்தில் சபையிலிருந்த விபீஷணன் சேரவில்லை. அரசனும் தமயனுமான ராவணன் எவ்வளவு கோபமாக இருந்தாலும் அபாயத்தை எடுத்துக் காட்டி அவன் போகும் தவறான வழியிலிருந்து அவனை மீட்டி ராஜ்யத்தையும் ராக்ஷச குலத்தையும் காப்பாற்ற வேண்டியது தன்னுடைய கடமை என்று உணர்ந்து மற்றவர்கள் பேசியதை ஒப்புக்கொள்ளாமல் எழுந்து நின்று பேசினான்.



"சீதை ஒரு கொல்லும் விஷப் பாம்பு. அவளை ஏன் எடுத்து வந்தீர்? இப்போது உம்முடைய முதல் கடமை அவளைத் திருப்பி ராமனிடம் சமர்ப்பித்து விடுவதுதான். இதைச் செய்யாவிட்டால் எல்லாரும் அழிந்து நாசமாகப் போவோம். இது நிச்சயம்" என்றான்.



ராமனுடைய சாமர்த்தியம், பலம், ஆயுதப் பயிற்சி எல்லாவற்றையும் எடுத்து மறைக்காமல் தைரியமாகச் சொன்னான்.

"ராமனை எதிர்த்தால் தோல்வி நிச்சயம். நம்முடைய அதிர்ஷ்டம் க்ஷீணித்து வருகிறது. சீதையைத் திருப்பிக் கொடுத்து ராமனிடம் சரணம் புகுந்து சுகமாக ராஜ்யம், சம்பத்து, மானம் எல்லாம் காப்பாற்றிக் கொள்வோம்" என்றான்.

இப்படி விபீஷணன் விடாமல் மன்றாடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த இந்திரஜித்து பொறுமையிழந்தான்.

"சிற்றப்பர் பேசும் பேச்சுக்கள் கேட்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. நம்முடைய குலம் என்ன? நம்முடைய சக்தி என்ன? பௌலஸ்திய குலத்தில் பிறந்த ஒருவர் இப்படிப் பேசுவதும், சபையோர் அதைச் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருப்பதும் எனக்கு வியப்பாக இருக்கிறது. சிறுமை குணத்தைக் காட்டி விட்டார் சிற்றப்பனார். அவருடைய பேச்சை ஒரு நாளும் நாம் அங்கீகரிக்க முடியாது. இரண்டு மானிடர்களைக் கண்டு யாராவது இப்படிப் பயப்படுவார்களா? இந்திரனையும் அவன் தேவ கணங்களையும் அடித்துத் தள்ளி நான் வெற்றி பெறவில்லையா? நம்மைக் கண்டு உலகம் இப்போதும் நடுங்கிக் கொண்டிருக்கவில்லையா? விபீஷணர் இந்த யோசனை சொல்லுகிறார். இது நமக்கு அவமானமாக இருக்கிறது" என்றான்.

இதைக் கேட்டு விபீஷணன், "பாலனே! உனக்கு அனுபவம் போதாது. இப்படித்தான் பேசுவாய். நீ அரசனுக்கு மகனாகவிருந்தாலும் அவனைக் கெடுக்க வந்த சத்துரு என்றே நான் நினைக்கிறேன். அரசனுக்கு ஹிதம் சொல்லுவதற்கென்று இருக்கும் மந்திரிகளே! அரசனுக்கு அழிவைத் தரும் யோசனை சொல்லுகிறீர்கள். லங்கேசனே! நான் சொல்லுவதைப் புறக்கணிக்க வேண்டாம். ஜானகியைக் கவுரவமாகத் திருப்பி ராமனிடம் கொண்டு சேர்த்து விட்டு, நடந்து போன குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும்படி பிரார்த்தித்துக் கொள்வீர். இதுவே வழி. வேறில்லை. இல்லாவிடில் அனைவரும் அழிந்து போவோம்" என்றான்.

* * *

ராவணனுடைய கோபம் கரை புரண்டு போயிற்று.

"தம்பியாயிற்றே என்று நீ சொன்னதை யெல்லாம் இதுவரையில் பொறுத்து வந்தேன். இல்லாவிடில் இங்கேயே உன் உயிர் மாய்ந்திருக்கும். ஒருவனைக் கெடுப்பதற்கு உடன் பிறந்த சத்துருவைப் போல் வேறொருவருமில்லை. பொறுமைப் பட்ட தம்பிகளும் தாயாதிகளுமே

சூரர்களுக்கு அவமானமும் தோல்வியும் தருபவர்கள் என்பது உலகமறிந்த உண்மை. அவர்கள் தங்களுடைய எண்ணத்தை மறைத்து வைத்துக் கொண்டு சமயத்தில் துரோகம் செய்வார்கள். கதையில் காட்டு யானைகள் சொல்லவில்லையா? 'நெருப்பையும் நாம் கண்டு பயப்படவில்லை. வேடர்களுடைய ஈட்டியையும் நாம் பொருட்படுத்தவில்லை. சுருக்குப் போட்டு இழுக்கும் கயிறும் சங்கிலியும் நம்மை ஒன்றும்செய்ய இயலாது. இந்தப் பாவி தாயாதி யானைகள் வேடர்களோடு சேர்ந்து கொண்டு நம்மைத் துன்புறுத்துகின்றனவே, அவை தாம் நம்முடைய பெரும் பயம்!' யானைகள் கதையில் சொன்னது எவ்வளவு உண்மை! சுகமாக இருக்கும் வரையில் தம்பி சிரித்து சந்தோஷமாக இருப்பான். அபாயம் வந்த போது கைவிடுவான். பூவிலிருக்கும் தேனைக் குடித்து விட்ட பிறகு தேனீ அந்தப் பூவில் தங்காது. வேறு பூவைத் தேடிப் போய்விடும். அவ்வளவுதான் தாயாதிகள் சங்கதியும். எனக்குக் கஷ்டம் வந்த காலத்தில் நீ உதவவில்லை. வேறு யாராவது உன்னைப் போல் பேசியிருந்தால் இங்கேயே அவனை வதம் செய்து விட்டிருப்பேன். நீசனே! குலத்தை அவமானப்படுத்தப் பிறந்தவனே!" என்று ராவணன் சீறி அதட்டித் திட்டினான்.

• • •

இப்படி அவமானப் படுத்தியதைப் பொறுக்க முடியாமல் விபீஷணன் எழுந்து, "அண்ணா! நீர் எதை வேணுமானாலும் சொல்லலாம்! தருமத்தினின்று தவறிய நீர் எனக்கு அண்ணன் ஆவீர். சபையில் எனக்கு நீர் செய்த அவமானத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. கால பாசத்தால் தூண்டப்பட்டு விநாசம் தரும் வழியில் போகிறீர். நான் சொன்ன ஹிதம் உமக்குப் பிடிக்கவில்லை. காதுக்கு இனிமையாகப் பேசுவது சுலபம். உம்முடைய மந்திரிகள் அதைச் செய்து வருகிறார்கள். உம்முடைய க்ஷேமத்தைக் கோரியே நான் சொன்னேன். அது உமக்குப் பிடிக்கவில்லை. உமக்குக் கோபத்தை உண்டாக்கிற்று. ராமனுடைய பாணங்கள் உம்மை எரிப்பதை நான் விரும்பவில்லை; அதனால் அல்லவோ நான் சொன்னது.

"என்னை நீர் பகைவன் என்கிறீர். நீர் க்ஷேமமாக இருப்பீராக! நகரத்தையும் உம் உயிரையும் காப்பாற்றிக் கொள்வீராக, மங்களம்! நான் போகிறேன். சுகமாக இருப்பீராக! ஆபத்துக்கு உதவலாம் என்று பார்த்தேன், முடியவில்லை. உம்முடைய பெருமையைக் கண்டு பொறாமைப் படுகிறேன் என்று எண்ணுகிறீர். அழிந்து போக வேண்டிய காலத்தில் நல்ல யோசனை விஷமாகத் தோன்றும்."

இவ்வாறு சொல்லி விட்டு ராவணனுடைய தம்பி விபீஷணன் இனி லங்கையில் தனக்கு இடமில்லை என்று தீர்மானித்து எல்லாவற்றையும் துறந்து அங்கிருந்தே அப்போதே ஆகாயத்தில் கிளம்பி ராம லக்ஷ்மணர்கள் இருந்த இடம் நோக்கிச் சென்றான். அவனுடன் நான்கு ராக்ஷச நண்பர்களும் கூடச் சென்றார்கள்.



வட இந்திய யாத்திரை

புது தில்லியில் இருந்து பரேலி என்ற ஊருக்கு ரயில் ஒரு இரவு முழுவதும் ஓடுகிறது. அங்கே போய்ச் சேர்ந்ததும் எங்களுடன் வந்த இந்திய சர்க்கார் தகவல் அதிகாரி திரு ஜி. திருவேதி அவர்கள் சாரதா ஆற்றங்கரைக்கு இங்கிருந்து சுமார் எழுபது மைல் பஸ்ஸில் போக வேணும் என்றார். "இரவு முழுவதும் ரயிலில் வந்து விட்டு இன்னும் எழுபது மைல் பஸ்ஸில் போக வேண்டுமா!" என்று யாரோ கேட்டார்கள். "காலை ஆகாரமே சாரதா ஆற்றங்கரையில் உள்ள 'ரெஸ்ட் ஹவுஸி'ல் தானே" என்று பதில் கிடைத்தது.

குமரி முனையிலிருந்து காஷ்மீரம் வரையில் உள்ள பல மொழிகளைச் சேர்ந்த பதினைந்து பத்திரிகையாளர்கள் இந்த வட இந்திய யாத்திரையில் கலந்து கொண்டிருந்தார்கள்.

"சாரதா ஆற்றங்கரையில்தானா காலை ஆகாரம்!" என்று அவர்கள் அடிக்கடி சொல்லிப் பார்த்துக் கொண்டார்கள். அதில் அவர்களுக்குக் காலை ஆகாரமே சாப்பிட்டது போல் பரம திருப்தி போலும். காரணம் பலர் இரவில் சாப்பிடாமல் வந்திருந்தார்கள் என்பதைப் பின்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. இதைத் தெரிந்து கொண்டவுடன் இரவு பட்டினி கிடந்தவர்களை நினைந்து அவர்களுக்காக அனுதாபப்படாமல் வேறு என்ன செய்வது!

இந்த அனுதாபம் தீர்வதற்குள்ளாகவே எங்கள் பஸ் கிளம்பி விட்டது.

"போகிறபோது எங்கு போகிறோம் என்று கேட்கக்கூடாது. இருந்தாலும் நாம் இப்போது எங்கே போகிறோம்!" என்று கேட்டு வைத்தார் ஒரு பத்திரிகைப் பிரதிநிதி.

"சரியாய்ப் போச்சு! பரேலி நகரம் வந்தவுடனேயே நீங்கள் இப்படி ஆகிவிட்டீர்களே!" என்று சொல்லி ஸ்ரீ திருவேதி விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தார்.

"பரேலியில் அப்படி என்ன விசேஷம்!" என்று கேட்டேன்.

"விசேஷம் ஒன்றுமில்லை. பரேலி பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் பெயர் போனது" என்று மேலும் மேலும் சிரித்தார்.

"பரேலி வாசனை உங்களையும் பிடித்துக் கொண்டது போலிருக்கிறதே!" என்று நானும் சிரிக்க ஆரம்பித்தேன்.

"ஆமாம்! நீரும் மேம்பாக்கத்திலிருந்து தானே வருகிறீர்!" என்று சொல்லி விட்டு என்னுடன் வந்த சென்னைப் பத்திரிகையாளர் சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

மேம்பாக்கத்தின் மகிமையைத் தெரிந்து கொண்டதும் பஸ்ஸில் இருந்த அத்தனை பேரும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

மேம்பாக்கத்துக்கும் பரேலிக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். மேம்பாக்கத்தில் ஒரு தனி இடத்தில் பைத்தியக்கார ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால் பரேலியைப் பற்றி அப்படி நினைக்க முடியவில்லை. அதற்குக் காரணமாயிருந்தது அந்த ஊரில் ஒரு இடத்தில் எழுதியிருந்த வாசகம்தான். "ஆண்களும் பெண்களும் பிரசவிக்கும் இடம்" என்று ஹிந்தி எழுத்தில் எழுதியிருந்தது. அதைப் படித்தவுடன் "ஆண்கள் பிரசவிக்கும் இடம் என்பது சரிதான். பெண்களும் என்று ஏன் எழுதியிருக்கிறது!" என்று கேட்டார் ஒரு ரஸிகர். "அதுதான் பரேலியின் மகிமை" என்றதும் பஸ்ஸில் இருந்த அத்தனை பேரும் 'இடி இடி' யென்று விடாமல் சிரித்தார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள பதினொரு பெரிய நகரங்களில் ஒன்று பரேலி நகரம். திரு முன்ஷி கவர்னராக வந்தவுடன் உத்தரப் பிரதேசத்துக்கும், பரேலிக்கும் ஒரு விசேஷப் பெருமையே வந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். பரேலி மர வியாபாரத்துக்குப் பெயர் போன இடமாம். சௌகரியமான விமான நிலையம் இருக்கிறது. இந்த விவரங்களையெல்லாம் ஒருவாறு கேட்டுத்தெரிந்துகொண்டு பரேலியின் பெயர் பெற்ற சாலைகளின் வழியாக நாங்கள் சாரதா ஆற்றங்கரையை நோக்கிப் பிரயாணமானோம்.



நானும் எத்தனையோ ஊர் பஸ்களில் பிரயாணம் செய்திருக்கிறேன். ஆனால் உத்தரப் பிரதேச சர்க்கார் ரோட்வேஸ் பஸ்ஸைப் போல் பார்த்த தில்லை. அந்தப் பஸ்ஸில் ஒரு தரம் பிரயாணம் செய்து விட்டால் உடலில் உள்ள அத்தனை அவயவங்களும் இடம் மாறி நின்று வேதனைப் படாமல் இருக்க முடியாது.

பஸ் அவ்வளவு மோசமாக இருந்ததில் ஒரு சௌகரியமும் இருந்தது. எல்லாரும் பசியை மறந்து இருந்தார்கள். அந்தப் பஸ்ஸின் ஆட்டத்திலும் பாட்டத்திலும் குலுங்கிப் பசி தான் இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போய் விட்டதே! நன்றாய் ஓடட்டும். பசி பாரத நாட்டை விட்டே ஓட வேண்டியது தானே!

** ** **

இந்த மாதிரி இடிபாடுகளில் மோதி நாங்கள் தனியாய்த் தவித்துக் கொண்டிருந்தாலும் பஸ் என்னமோ இரு புறமும் இனிய இயற்கைக் காட்சிகள் நிரம்பிய சாலை வழியாக விரைந்து சென்று கொண்டுதான் இருந்தது. சில இடங்களில் கனிகள் குலுங்கும் மா மரங்கள் அடர்ந்த தோப்புகள் காணப்பட்டு

சாரதா நதிக்கரையில்





பகீரதன்

கின்றன. சில இடங்களில் நெடுந் தூரத்துக்கு நெடுந் தூரம் வெற்று நிலம் காணப்படுகிறது. மழைக் காலங்களில் அங்கெல்லாம் ஒரே பசுமையாகப் பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் கண் கொள்ளாக் காட்சியாக இருக்குமாம். பேஷாக இருக்கட்டும்!

வழியில் நம் பக்கத்தில் இருப்பதைவிட மோசமான பல கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களின் பெயர்கள் விசித்திரமாக இருந்தன. ஆபீஸ் கஞ்ச், நவாப் கஞ்ச் என்று 'கஞ்ச்' என்று கடைசியில் முடியும் பெயருடைய பல கிராமங்களைக் கடந்து வந்தோம்.

அந்தச் சாலையில் சில இடங்களில் தமிழ் நாட்டில் காணாத காட்சிகளை எல்லாம் பார்க்க முடிகிறது. அதாவது குரங்குக் கூட்டங்கள் இயற்கை நிலையில் மந்தை மந்தையாகத் திரிவதைப் பார்க்கலாம். பஸ் சத்தத்தை அவைகள் லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை. "மண்ணில் உள்ள உயிர்களில் எல்லாம் மனிதர்கள் உயர்ந்தவர்கள். அந்த மனிதர்களோ குரங்கில் இருந்து வந்தவர்கள்" என்று ஆராய்ச்சியாளர் சொன்னது நினைவுக்கு வந்தது. அந்த நினைவுடனே குரங்குக் கூட்டத்தைக் கவனித்தேன். அதன் மேனியழகும், கூனியிருக்கும் கொலு நேர்த்தியும், அடிக்குதிக்கும் அதிசயமும், மா மரங்களில் தாவித் தாவி ஏறும் நேர்த்தியும், சைவசுத்த போசனம் சாப்பிடுவதால் ஏற்பட்ட அதன் சாதுரியப் பார்வையும் இப்பொழுது நினைத்தால்கூட உலகில் அதற்கு இணையாக வேறு ஒன்றையும் சொல்ல முடியாது என்றே தோன்றுகிறது. நீளமான வாலைத் தொங்க விட்டுக் கொண்டு எங்களை உற்றுப் பார்த்தன. அடுத்த கணம் எங்கள் பஸ்ஸை நோக்கி வேகமாகப் பாய்ந்து வந்தன. ஆனால் பஸ்ஸின் அபாரமான ஓட்டத்தை அவைகளால் பிடிக்க முடியுமா!

இப்படிப்பட்ட அதிசயக் குரங்கு மந்தைகளையும், எமதரும ராஜனே தம் குடும்பத்துடன் வந்து விட்டாரோ என்று எண்ணி வியக்கும் ஒரு விந்தைக் காட்சியையும் பார்த்தேன். பெரிய கருத்த எருமைமீது கணவன் மனைவி குழந்தைகள் சகிதம் கையில் நீளமான குச்சியை வைத்துக் கொண்டு சென்ற குடும்ப சவாரியைப் பார்த்தேன். இதுபோல இன்னும் பல விசித்திரக் காட்சிகளையும் கடந்து கடைசியாகக் 'காதிமா' என்ற கிராமத்துக்கு வந்தோம்.

அந்தக் கிராமத்தைக் கடந்ததும் பெரிய காட்டுக்குள் பஸ் புகுந்தது. காடு என்றால் இரு பக்கத்திலும் கண்ணுக்கு எட்டிய தூரம் மரங்கள், மரங்கள், மரங்கள்தான். சுமார் எழுபதடி எண்பதடி உயரத்தில் 'சால்' மரங்களும், 'சிடு' மரங்களும் கம்பீரமாக வளர்ந்து நிற்கின்றன. பகல் பொழுது திடீர் என்று மறைந்து இருட்டி விட்டதோ என்று நினைக்கும்படி அந்த வட்டாரத்தில் இருள் சூழ்ந்து விட்டது. இந்த மாதிரியான காட்டுக்குள் புகுந்து சாரதா ஆற்றங்கரைக்கு வருகிறோம்.

பிறகு நெஞ்சு பதைபதைக்க, ஆவல் துடிதுடிக்க சாரதா ஆற்றங்கரையில் வந்து நின்று சாரதா நதியைப் பார்க்கிறோம். ஆற்றின் கரையில் நின்று ஆற்றைப் பார்த்ததும் இத்தனை தூரம் வந்த களைப்புத் தீர்ந்து விடுகிறது. சாரதா நதியின் அழகில் சொக்கி மேலே என்ன செய்வது என்று தெரியாமல் அங்கேயே நின்று சாரதா ஆற்றையும் அதன் கம்பீரத்தையும் பார்க்கிறோம். பார்க்கப் பார்க்க ஒரே வியப்பும் திகைப்புமாயிருக்கிறது.



நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் செங்குத்தாக வளர்ந்திருக்கும் சீடு மரக் காட்டுக்கு மத்தியில் சாரதா நதி ஓடி வருகிறது. அந்த நதி காட்டையே பிளந்துகொண்டு உல்லாசமாக வருவதாகத் தோன்றுகிறது.

சாரதா ஆற்றைத் தோண்டுவதற்காக இன்ஜினீயர்கள் முதன் முதலில் இந்த இடத்துக்கு எப்படித்தான் வந்தார்களோ! இந்த அதிசயமான இடத்தை எப்படித்தான் தேர்ந்தெடுத்தார்களோ! அதை மனத்தால் கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை!

“முதலில் சாரதா ஆற்றை வெட்டிய கதையைத் தெரிந்து கொள்ளுங்கள்” என்றார் காதிமா ஜல மின்சாரநிலைய சூப்ரின்டென்டிங் இன்ஜினீயர் திரு ஓ. பி. குப்தா. எல்லாரும்



அவர் சொல்லப் போவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நின்றோம்.

அருகில் இருந்த 'ஜீப்' கார்களில் ஏறிக் கொள்ளச் சொன்னார். “டக்” கென்று ஏறி உட்கார்ந்து கொண்டோம். ஜீப் கார்கள் சாரதா ஆற்றங் கரையோரமாகவே அதிசயமாக அமைந்திருக்கும் அருமையான சாலையோடு விரைந்து செல்லத் தொடங்கின.

சுமார் எட்டு மைல் தூரம் சாரதா ஆற்றின் கரையோடு செல்லும்போது ஒருபுறம் சாரதா நதியும் இன்னொருபுறம் சீடுமரக் காடுகளும் அடர்ந்து படர்ந்து விரிந்து கிடப்பதைக் காண்கிறோம். அதில் பயங்கரப் புலிகளும் இன்னும் பல கொடிய மிருகங்களும் இருப்பதாக இன்ஜினீயர் சொன்னார். பிரிட்டிஷார் இந்தியாவை ஆண்ட அந்த காலில் வேட்டைக்காரர்கள் இந்தப் பிரதேசத்தில் புலி வேட்டையாட வருவார்களாம். ஆனால் நல்ல வேளையாக எங்களுக்கு எதிரில் எந்தப் புலியும் வர வில்லை. ஆனால் காட்டுக்குள்ளிருந்து புலிகளின் உருமல் சத்தம் மட்டும் கேட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்ட போதே எங்களில் பலருக்கு உயிர் நின்று விடும் போலிருந்தது.

இந்த மாதிரி காணக் கிடைக்காத காட்சியைப் பார்த்துக்கொண்டே சாரதா ஆற்றின் மூல நதியில் இருந்து புதிதாக வெட்டிய சாரதா ஆறு பிரியும் இடத்துக்குச் சென்றோம். சாரதா மூல நதியில் நீளமான அணை கட்டித் தேக்கி வைத்திருந்தது. அந்தப் பாலம்தான் நேபாள தேசத்துக்கு எல்லைக் கோடாம். அதைத் தாண்டி அடுத்த கரைக்குச் சென்றால் அதுதான் நேபாள நாடு என்று சொன்னார்கள்.

பத்திரிகை நிருபர்கள் பலர் விழுந்தடித்துக் கொண்டு பாலத்தைக் கடந்து சென்று நேபாள நாட்டின் மண்ணில் போய் நின்று மகிழ்ந்தார்கள். ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டது போல வரிசையாக நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

பாரதநாட்டுக்கும் நேபாளநாட்டுக்கும் இருக்கும் நேயம், அந்த இடத்தில் நன்றாகத் தெரிந்தது. ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையில் உள்ள சுங்கச் சாவடி முதலிய சங்கடங்கள் ஒன்றும் அந்த இடத்தில் இல்லை.

இந்த அதிசயத்தைப் பேசிப் பேசி ஆச்சரியப் பட்டார்கள். இந்தச் சமயத்தில் அந்தக் காட்டுக்குள் இருந்து இரண்டு நேப்பாளிகள் வந்தனர். அவர்கள் தோளில் காவடிபோல ஒரு குச்சியில் பெரிய மூட்டைகளைச் சுமந்து கொண்டிருந்தனர். அந்த மூட்டையில்தான் அவர்களுக்கு வேண்டிய ஆகாரமும் இதர சாமான்களும் வைத்துக் கொள்கிறார்கள். அவர்களைக் கூப்பிட்டு விசாரித்தோம்.

ஐந்து நாள் காட்டுக்குள் புகுந்து வந்தார்களாம். “ஏதாவது வேலை கிடைக்குமா என்று பார்க்க வந்தோம்” என்றார்கள். அவர்கள் வாழ்க்கையையும் சுக சௌகரியங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்ட போது இங்கு ஏழை என்று சொல்லக் கூடிய சாதாரணத் தொழிலாளியின் வாழ்க்கையை ராஜ வாழ்க்கைக்கு ஒப்பிட வேண்டும்.

ஆள் பஞ்சத்தில் அடிபட்டிருந்தாலும் “நான் க்ஷத்திரியன், என் பெயர் சாலிவாகனன்” என்று அந்த நேப்பாளியில் ஒருவர் கம்பீரமாகச் சொன்னார். அதைப் பார்த்த போது அவர் நெஞ்சு உறுதியை ஒருவாறு உணர்ந்து கொள்ள முடிந்தது.


அப்படிப்பட்ட நெஞ்சு உறுதி இல்லாவிட்டால் அந்தப் பகுதியில் எப்படி வாழ முடியும்!

அந்த நேப்பாளிகளை அனுப்பிவிட்டு இன்னும் கொஞ்சதூரம் நடந்து காட்டுக்கு மத்தியில் புகுந்து சென்றோம்.

அடாடா! அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தபொழுது மனத்தில் ஏற்பட்ட இன்ப உணர்ச்சிகளை எப்படி எழுதிக் காட்டுவேன். கம்பீரமான பெரிய மலையையும், அதைச் சுற்றி யிருந்த அடர்ந்த காடுகளைப் பற்றியும் எவ்வாறு சொல்லுவேன்! பெரிய பெரிய மரங்களையும் மலைகளையும் பெயர்த்துக் கொண்டு ஓடிவரும் சாரதா நதியை எப்படி வர்ணிப்பது என்று தெரியவில்லையே!

சாரதாவின் சரித்திரம்

இமயமலையின் சிகரங்களில் ஒன்றான கைலாசத்தில் உற்பத்தியாகி, அந்த மலைப் பிரதேசத்தில் உள்ள சுமார் 5,800 சதுர மைல் விஸ்தீரணத்தில் வருஷத்துக்கு எழுபது அங்குலம் பெய்யும் பெரு மழையை அப்படியே எடுத்துக் கொண்டு வரும் சாரதா நதிக்கு ஈடு கிடையாது என்பது யாவரும்



அறிந்தேன். அதிலும் நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்தில் சாரதா நதி கங்கை நதியை விட அதிக அகலம் கொண்டு செல்கிறது. அது ஒரு நிமிஷத்துக்கு ஆறு லட்சம் கன அடி தண்ணீரைக் கொண்டு வருகிறது என்பது நினைவிலிருக்க வேண்டும். இன்னும் இமய மலைப் பிரதேசத்திலேயே நூற்று ஐம்பது மைல் காட்டிலும் மலையிலும் ஓடிவந்து நாங்கள் நின்று கொண்டிருந்த நேபாளத்தின் எல்லையாகிய கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் உள்ள பன்பாசா என்னும் இடத்திற்கு வருகிறது. இங்கிருந்துதான் அது சமவெளியில் ஓட ஆரம்பித்து விவசாயத்துக்குப் பயன்பட்டு வருகிறது என்று ஆச்சரியத்துடன் கூறினார் இன்ஜினீயர்.

"இதில் என்ன அதிசயம்! இமயமலையிலிருந்து உற்பத்தியாகும் நதி பின் எப்படித்தான் இருக்கும்!" என்றேன்.

இன்ஜினீயர் ஒரு கணம் திகைத்து, "இல்லை; இதில் வரும் தண்ணீரும், அந்தத் தண்ணீரின் வேகமும் வேறு எந்த இந்திய நதியிலும் இருப்பதில்லை" என்று தெரிவித்தார்.

சாரதா நதியும் அதில் வரும் தண்ணீரும் தான் வியப்பளிக்கும் விஷயம் என்பதல்ல. அந்த நதியில் பன்பாஸா என்ற இடத்தில் கட்டியிருக்கும் அணையும், அதிலிருந்து புதிதாக வெட்டியிருக்கும் சாரதா ஆறும் பிரமாண்டமாய்த்தானிருக்கின்றன. சுமார் இரண்டாயிரம் அடி நீளத்துக்கு சாரதா நதியில் அணை கட்டியிருக்கிறார்கள். அதில் இருந்து தண்ணீரை வெளியில் விடுவதற்கு முப்பத்து நாலு மதகுகள் இருக்கின்றன. அந்த மதகுகளை மூடித் திறப்பதற்குப் பெரிய பெரிய இரும்புக் கதவுகள் வைத்திருக்கின்றனர். ஒவ்வொரு இரும்புக் கதவும் ஐம்பதடி அகலம், பதினோரடி உயரம், பன்னிரண்டு டன் நிறையும் கொண்டவை என்றால் அதைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்.


"ஏன் இவ்வளவு கனமான கதவு! விவசாயத்துக்காகத் தண்ணீரை யாரும் திறந்துவிடக் கூடாது என்பதற்காகவா!" என்றேன்.

ஒரு கணம் புன்முறுவல் செய்து விட்டு, "அடிக்கடி திறந்து மூடுவதற்கு வசதியாகவே இந்தக் கதவுக்கு மேலே ஒரு இயந்திரம் இருக்கிறது. அந்த இயந்திரத்துக் கைப்பிடியை ஒரே ஆள் சுழற்றினால் போதும். அந்த இரும்புக் கதவு ஏதோ மந்திர சக்தியினால் திறப்பது போல் திறக்கும்" என்று தெரிவித்தார்.

** ** **

பன்பாஸா அணையைக்கட்டுவதற்கு, சாரதா ஆற்றை வெட்டுவதற்கு சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே திட்டம் இருந்ததாம். ஆனால் அக் காலத்து சர்க்கார் நாட்டின் முன்னேற்றத்துக்காக அணைகள் கட்டுவதற்கு அவ்வளவு விரைவில் இசைந்து விடுவார்களா! எத்தனையோ முறையீடுகளுக்குப் பிறகு சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் பன்பாஸா அணையையும் சாரதா ஆற்றையும் கட்டி முடித்திருக்கிறார்கள். சாதாரணமாகச் சிலர் ஆற்றை வெட்டுவதைப் பற்றியும் அணையைக் கட்டுவதைப்பற்றியும் திட்டங்கள் வகுப்பதைப் பற்றியும் பொறுப்பில்லாமல் பேசுவதையும் கேலி செய்வதையும் பலர் கேட்டிருக்கலாம். அதெல்லாம் எவ்வளவு தவறானவைகள் என்பதைச் சாரதாவின் சரித்திரத்தைக் கேட்டபோது தெரிந்துகொண்டேன். ஆற்றை ஒரு முறை வெட்டினால் வெட்டியதுதானே! அது சரியில்லை யென்று தூர்த்து விட்டு வேறு இடத்தில் மீண்டும் வெட்ட முடியுமா! அணை கட்டினால் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு இருப்பதற்கு மட்டும் தாற்காலிகமாகக் கட்ட முடியுமா! எத்தனையோ நூறு ஆண்டுகள் நிலையாக இருக்க வேண்டியவைகள் அல்லவா!

அந்தக் காலத்திலேயே சாரதா ஆற்றை வெட்டுவதற்கும், பன்பாஸா அணையைக் கட்டுவதற்கும் எடுத்துக் கொண்டிருக்கும்



சிரமம், அதற்காகப் பட்டிருக்கும் கஷ்டம் மனத்தினாலும் நினைக்க முடியாது. காட்டுக்கு மத்தியில் சுமார் நானூறு ஏக்கர் காட்டை அழித்து அணை கட்டுவதற்காக நிலத்தைச் சுத்தப்படுத்தியிருக்கிறார்கள். அப்படிக் காட்டை அழித்ததால் அந்த இடத்தில் விழுந்த மரங்களில் இலைகள் அழுகி உண்டான நாற்றம் போவதற்கே இரண்டு வருஷம் பிடித்ததாம். பிறகு இரண்டாயிரம் அடி நீளம் அணை

கட்டுவதற்கும், 5,813 மைல் நீளம் சாரதா கால்வாய் அமைப்பை நிறுவுவதற்கும் எவ்வளவு ஆட்கள் வேண்டியிருக்கும்! எவ்வளவு தளவாட சாமான் அந்தக் காட்டுக்குள் கொண்டு வந்திருக்க வேண்டும்! எல்லாவற்றையும் அறுபது மைல், எழுபது மைல்களுக்கு அப்பால் உள்ள நகரங்களில் இருந்துதானே கொண்டு வந்திருக்க வேண்டும்!

தளவாட சாமான்கள் மட்டும் வந்தால் போதுமா! வேலை செய்வதற்கு ஆட்கள் வேண்டாமா! அந்தக் காட்டில் மனிதர்கள் ஏது! மரங்களும் பயங்கர மிருகங்களும் நிறைந்த இடம்தானே! அதற்காகப் பல கண்டிராக்டர்களைப் பிடித்து ஆயிரக் கணக்கான தொழிலாளரைக் கொண்டு வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கண்டிராக்டர்கள் தொழிலாளிகளுக்கு ஏராளமான ரூபாய்கள் கொடுத்து அவர்களை அந்தக் காட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆட்களும் தளவாடங்களும் வந்து என்ன செய்வது! அந்தப் பக்கத்தில் உள்ள சீதோஷ்ண நிலைமை மனிதர்களை உயிரோடு வாழ முடியாதபடி செய்யக் கூடிய தன்மை வாய்ந்தது. விரைவில் கைலாசம் போக எண்ணுபவர்கள் அந்தப் பகுதியில் சில தினங்கள் வசித்தால் போதுமாம். எப்படியோ மனிதனின் ஆயுளைக் குறைத்துக் கொன்று விடக் கூடிய சீதோஷ்ணம் அங்கு இருக்கிறதாம். அத்துடன் புலி, காட்டு யானை முதலியவைகளின் தொல்லைகள் இவைகளுக்கும் மேலே கொள்ளைக் கூட்டத்தாரின் அட்டூழியம். திடீரென்று ஒரு கொள்ளைக் கூட்டத்தார் வந்து தொழிலாளர்கள் கையிலிருந்த பணத்தையும், உணவு தானியங்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டார்களாம். பயங்கரப் புலியையும், கொள்ளைக் கூட்டத்தையும் விடக் கொடிய ஜந்து ஒன்று அங்கே இருக்கிறது. அதுதான் கொசு. அதன் உபத்திரவத்தால் அணை கட்டும் வேலையில், ஆற்றை வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களில் எழுபது சத விகிதம் பேர் மலேரியா நோயினாலேயே மடிந்து விட்டார்களாம்.


இவ்வாறு கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத பல கஷ்டங்களையும், எண்ணற்ற தொழிலாளர்களின் தியாகத்தையும் கொண்டு பன்பாஸா அணையும், புதிய சாரதா ஆறும் உண்டாகியிருக்கின்றன. பல நிபுணர்களின் இடைவிடா உழைப்பும், விடா முயற்சியும், கோடிக்கணக்கான ரூபாய்கள் விரயமும், ஆயிரக்கணக்கான உழைப்பாளிகளின் தியாகம் வீண் போகவில்லை. சாரதா ஆற்றின் தண்ணீரினால் ஒன்றுக்குப் பல நூறு மடங்கு உணவு உற்பத்தி உத்தரப் பிரதேசத்தில் அதிகம் ஆகியிருக்கிறது. உத்தரப் பிரதேசம் வளமுள்ள பிரதேசமாக இருப்பதற்கு அப் புதிய சாரதா ஆறுதான் வகை செய்திருக்கிறது.

காட்டில் ஒரு கைலாசம்

ஆற்றை வெட்டி அணையைக் கட்டினால் மட்டும் போதுமா! அதைக் கண்ணை இமை காப்பதுபோல் காப்பாற்ற வேண்டுமே! அதற்காகக் காட்டின் மத்தியில் 'யூகலிப்டஸ் நகரம்' ஒன்று கட்டியிருக்கிறார்கள். யூகலிப்டஸ் மரங்களுக்கு மத்தியில் எல்லாவித நவீன நாகரிக வசதிகளுடன் கூடிய வீடுகள் இருநூறுக்கு மேல் இருக்கின்றன. பச்சைப் பசேல் என்ற மரங்களுக்கு மத்தியில் செக்கச் செவேல் என்று வெப்பு வர்ணம் பூசிய அந்த வீடுகளைப் பார்த்தால் ஏதோ கனவு உலகம் போலிருக்கிறது. அதில்தான் பன்பாஸா அணையைப் பாதுகாக்கும் இன்ஜினீயர்களும், இதர தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஒருகாலத்தில் பயங்கரப் புலிகளும், விஷப் பாம்புகளும், அவைகளை யெல்லாம் விடக் கொடிய கொசுவும் வாழ்ந்த அந்த இடம் இப்பொழுது கைலாசம் போல இருக்கிறது. பன்பாஸா நகரை, 'காட்டில் ஒரு கைலாசம்' என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி மாற்றி விட்டார்கள். மனிதன் உழைப்பின் பெருமையை அங்கு நன்றாக உணர முடிகிறது: உழைப்புச் சக்தியின் உயர்வை உலகுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது சாரதா நதி.

கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டி, பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்த அந்த அற்புத சாதனைகளை இன்றையதினம் அங்குள்ள இன்ஜினீயர்கள்தான் காப்பாற்றி வருகிறார்கள். கடிகாரம்போல கடமை தவறாது தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பன்பாசா அணையில் சென்ற வருஷம் நடந்த சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள். சாரதா நதி அதிசயமான நதியாம். அதில் திடீர் திடீரென்று பெரும் வெள்ளம் வருமாம். அப்படி ஒரு சமயம் வெள்ளம் வந்தபோது பதினைந்து



உடனே—
'டெட்டாலை' எடு!

உங்களுடைய சருமத்தில் வெட்டுக்காயமோ சிராய்ப்போ ஏற்பட்டால் நீங்கள் கொடிய விஷக் கிருமிகளால் தாக்கப் படுவீர்கள். வெட்டுக் காயம் பட்டசிறிய துவாரத்தின் மூலம் விஷக் கிருமிகள் உங்கள் சரீரத்தில் உட்புகும். கொடிய வியாதிகளை உண்டாக்கக்கூடிய கோடிக்கணக் கான விஷக்கிருமிகள் நீங்கள் சுவாசிக்கும் காற்றிலும் நீங்கள் கையாளும் ஒவ்வொரு வஸ்துக்களின் மேலும், உங்கள் உடல் மீதும் நிரம்பியிருக்கின்றன. விஷக்கிருமி களிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள உங்களு டைய வெட்டுக்காயங்களின் மேல் 'டெட்டால்' தடவுங் கள். 'டெட்டால்' ஓர் ஒப்பற்ற கிருமிநாசினியாகையால் டாக்டர்கள் அதை சிபார்சு செய்கிறார்கள். 'டெட்டால்' இனிமையான வாசனையுள்ளது. இன்றே ஒரு பாட்டில் 'டெட்டால்' வாங்குங்கள்.

நோய் வரும் முன்பே பாதுகாத்துக் கொள்ள

'DETTOL'

Regd.

டாக்டர்கள் உபயோகிக்கும் கிருமிநாசினி

'டெட்டாலை' வீட்டில் கையிருப்பாக வைத்திருங்கள்



சொந்த சுகாதார உபயோகத்திற்கும், மேலும் துணிமணிகளை சுத்தம் செய்வதற்காகவும் 'டெட்டாலை' உபயோகியுங்கள். நோயாளிகள் இருக்கும் அறையில் 'டெட்டாலைத்' தெளியுங்கள் வியாதி நோய்களும் துர்நாற்றமும் ஏற்படும் பாகங்களில் தரை மேலும் சாக்கடையிலும் டெட்டாலைத் தெளியுங்கள்

'டெட்டால்' மிகவும் அபாயமற்றதாகையால் ஸ்திரீகளின் சொந்த சுகாதார உபயோகத்திற்கு உகந்தது. பிரசவ சமயத்தில் டாக்டர்கள் 'டெட்டால்' உபயோகிக்கும்படி சிபார்சு செய்கிறார்கள். ஏனெனில் இச்சமயத்தில் கர்ப்பாசய மார்க்கத்தில் ஓர் சிறிய வெட்டுக் காயம் ஏற்பட்டாலும் பெரிய துன்பங்கள் நேரிட்டு கர்ப்பஜ்வரமும் உண்டாக்கக் கூடும்




குழந்தைகளுக்கு வெட்டுக் காயங்களோ சிராய்ப்புகளோ ஏற்பட்டால் வெட்டுபட்ட இடத்தில் உடனேயே 'டெட்டாலை' உபயோகியுங்கள் 'டெட்டால்' மிகவும் பத்திரமான இனிமையான வாசனையுள்ள கிருமிநாசினி 'டெட்டாலை' உபயோகித்து ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் நல்ல பழக்கத்தை சிறுவர்கள் வெகு சீக்கிரத்தில் அடைவார்கள்.



"நோய்களுக்கும் சிகிச்சை தேடுவதை விட நோய்வராமல் தடுத்துக் கொள்வதே நல்லது" என்ற இலவச புத்தகத் தைப் பெற இலாகா ந 1 தபால் பெட்டி நெ. 664 கல்கத்தா-1 விலாசத்திற்கு எழுதுங்கள்

ATL 190

காட்டு யானைகள் அந்த வெள்ளத்தில் வந்து அணையில் மாட்டிக் கொண்டனவாம். பதினைந்து யானைகளும் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு செல்வதற்குத் தங்கள் பலங்கொண்ட மட்டும் அணையை மோதி உடைக்க ஆரம்பித்து விட்டனவாம். இதை எப்படியோ தெரிந்து கொண்ட இன்ஜினீயர்கள் அவசரம் அவசரமாக ஓடி வந்து அணையின் கதவைத் திறந்து யானைகளைக் காப்பாற்றியதுடன், அணையையும் காப்பாற்றினார்களாம். அந்த மாதிரி செய்திரா விட்டால் அணை உடைந்து பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கும். உத்தரப் பிரதேசத்தில் உள்ள பதினொரு ஜில்லாக்கள் சாகுபடிக்குத் தண்ணீர் இல்லாமல் திணறிப் போயிருக்கும். இந்தமாதிரி சமயோசிதமாக, கடமையை உணர்ந்து காரியத்தை நிறைவேற்றிய இன்ஜினீயர்களை மனதாரப் புகழ்ந்து பாராட்டினோம்.



தமிழர்கள் பெருமைப் படக்கூடிய ஸ்தாபனங்கள் எத்தனையோ இருக்கின்றன. அதில் ஒன்று இந்தியன் பாங்கு. இதன் புகழ் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது என்பது கல்கத்தாவில் இதன் கிளைக் காரியாலயம் சென்ற ஜூலை மாதம் 16-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது என்பதிலிருந்தே தெரிகிறதல்லவா? இந்த விழாவில் கலந்துகொண்ட இந்தியன் பாங்கி காரியதரிசி ஸ்ரீ கோபாலய்யர், சர் ஏ. ராமசாமி முதலியார், சர் பிரேஜாய்பிரசாத் சிங்ராய், கே.ஸி.ஐ.இ. முதலியவர்களைமேலே படத்தில் காணலாம்.

உலகிலேயே புதிதாகத் தோண்டிய ஆறுகளுக்குள் விவசாயிகளுக்கு அதிகமாக உபயோகமாகக் கூடிய ஆறு சாரதா ஆறுதான். இந்தியாவிலேயே பெரிய 'பாரேஜ்', அதாவது தடுப்பு அணை பன்பாஸா அணைதான்.

இந்த ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு நமது சுதந்திர சர்க்கார் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டம் போட்டு அதில் மிகச் சிறந்த முறையில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். சுதந்திர சர்க்கார் செய்துள்ள அதிசயமான சாதனைகளில் ஒன்று. நமது இந்திய இன்ஜினீயர்கள் தயாரித்து வெற்றி கொண்ட அருமையான திட்டம். நாம் எல்லாரும் பெருமைப்பட வேண்டிய காரியம்.

"சாரதா ஆற்றின் இயற்கை சுபாவத்தைப் பயன்படுத்திக் கொண்டு காதிமா என்ற இடத்தில் ஜல மின்சார நிலயம் கட்டியிருக்கிறார்கள். மின்சாரத்தின் சக்திகளில்தான் இன்றைய தேச முன்னேற்றம் இருக்கிறது. அப்படிப்பட்ட அதிமுக்கியமான ஜல மின்சார நிலயத்தைப் பார்க்க வேண்டாமா!" என்று கேட்டார் இன்ஜினீயர்.

"ஆகா! கட்டாயம் பார்க்க வேண்டியதுதான்" என்றார்கள் பத்திரிகை நிருபர்கள்.

இதுவரையில் அமைதியாக இருந்த அந்தக் காட்டுப் பிரதேசத்தில் 'ஜில்'லென்று காற்று அடிக்கத் தொடங்கியது! அதில் ஏதோ ஒரு மாதிரியான வாசனை 'கம கம' வென்று வீசியது. வாருங்கள் இந்த மணத்தை அனுபவித்துக் கொண்டே காதிமா ஜல மின்சார நிலயத்துக்குப் போவோம். (தொடரும்)



இலங்கை, களுக்கொல்லை, தோட்ட முதலாளியும், வடக்கு சிறுப்பத்தூர் மிராசுதாரருமான ஸ்ரீ வ. ந. மாரியா பிள்ளை அவர்களின் குமாரன் திரு மா. தங்கவேலு, B. Com. அவர்களுக்கும், சேலம் R.S. தர்மலிங்கம் பிள்ளை & கோ. பங்காளியான T. M. தர்மலிங்கம் பிள்ளை அவர்களின் புதல்வி சௌ. கமலாவுக்கும் வடக்கு சிறுப்பத்தூர் மணமகன் இல்லத்தில் ஜூன் 30-ம் தேதி விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு இலங்கை, மலேயா, இந்தியா பிரமுகர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன.

வாழ்க, கமலா. — தங்கவேலு!

இருமலுக்கு வீட்டிலேயே குணம் அளிப்பது!



Alembic

க்ளோகோடின்-டெர்ப்-வசாகா

அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ் கம்பெனி லிமிடெட், பரோடா - 3.

●

நீங்கள் அலெம்பிக்கின் மேல் பூரண நம்பிக்கை வைக்கலாம்.

காட்டுத்தீ

புராணம் சுப்பிரமணிய சர்மா

தெலுங்குக் கதை

மொழிபெயர்ப்பு : ஜெயமணி

அப்பப்பா ! எவ்வளவு கோரமான காட்சி !

பிரம்மாண்டமான அந்த அடர்ந்த காடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. எனவே, சிங்கம், கரடி, புலி, சிறுத்தை, கழுதைப் புலி, காட்டெருமை முதலிய கொடிய மிருகங்கள் பயங்கரமான குரலில் வீறிட்டுக் கொண்டு அங்கு மிங்கும் ஓடின. ஸர்ப்பங்களும், மலைப் பாம்புகளும் தீயில் வெந்து மடிந்தன. காட்டுத் தீயினால் மலைப்பாறைகள் படார் படார் என்று வெடித்துக் கீழே உருண்டன. அவற்றிலிருந்து சிதறிய கற்கள் வெகு தூரத்துக்கு அப்பால் போய் விழுந்தன. மலைப் பாறைகளின் கதியே அவ்விதமெனில், மரம், செடி, கொடிகளையும், அந்த வனத்தில் வாழும் பலவிதமான பட்சிகளையும் மற்ற ஜீவராசிகளையும் பற்றிக் கேட்கவா வேண்டும் !

எரியும் மரங்களிலிருந்து சீறிக் கொண்டு எழுந்த ஜ்வாலைகளும் மேக மண்டலங்களைப் போல் அலை அலையாக எழுந்த புகை மண்டலங்களும் சீற்றம் கொண்ட ஒரு கொடிய ராட்சதனைப் போல் காட்சி அளித்தன.

அச்சமயம் அந்த ஊழித் தீயின் பயங்கரமான சப்தத்தையும் கொடிய விலங்குகளின் அலறல்களையும் கிழித்துக் கொண்டு ஒரு மனிதக் குரல் கேட்டது. அத்தகைய சூழ்நிலையில் ஒரு மனிதக் குரல் கேட்பது ஆச்சரியமான, திடுக்கிடத் தக்க விஷயம் அல்லவா !

காட்டுத் தீக்குப் பயந்து ஓர் அழகிய யுவதி அலறிக் கொண்டு ஓடினாள். செந்தாமரை இதழ் போன்ற அவளது கால்களிலிருந்து உதிரம் வழிந்து கொண்டிருந்தது. எவர் மனத்தையும் திடுக்கிடச் செய்யும் அந்த வெப்பு ஜ்வாலைக்கும் பச்சைச் சேலை உடுத்தியிருந்த அந்தப் பெண்ணின் மோகன உருவத்துக்கும் எவ்வளவுக் கெவ்வளவு தூரம்! ஜ்வாலை உருவத்தில் ஒரு கொடிய அரக்கன் அந்த அழகியை விரட்டுவது போல் தோன்றியது!

அந்த நிலைமையில் நான் என்ன செய்ய முடியும் ! அந்தக் கட்டழகியை அப்படியே தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் பறந்து செல்லும் சக்தியை அச்சமயம் ஆண்டவன் எனக்குக் கொடுக்கக் கூடாதா என்று எண்ணினேன். ஜ்வாலையின் பயங்கரமான சத்தம், என்னைப் பார்த்துப் பூமியும் வானமும் அதிரும்படி சிரிப்பது போல் இருந்தது.

அவள் அலறிக் கொண்டே ஓடினாள். கந்தர்வ கன்னிகையைப் போல் தோன்றிய அவளது கனிவான உடலை ஜ்வாலை தீண்டும்படி விடுவதா ! அதனால் என் உயிருக்கு ஆபத்து நேர்ந்தாலும் கவலையில்லை என்று எண்ணி, ஜ்வாலையைக் கிழித்துக் கொண்டு சென்று, அவளை அணைத்துக் கொண்டேன்.

அதே சமயம் ஜ்வாலை என் உடலைத் தகிக்கத் தொடங்கியது. உடனே பதறிப் போய் விழித்துக் கொண்டேன்.

அது வரையில் நான் கண்டதெல்லாம் பயங்கரமான கனவு என்பதை உணர்ந்து கொள்ளச் சிறிது நேரம் ஆயிற்று. பட்டப் பகலில் எத்தகைய விசித்திரமான கனவு !

எனினும் கனவில் தோன்றிய கட்டழகியை நான் மறக்கவே முடியவில்லை. அவள் என் அறையில், எனக்கு அருகில் இருப்பது போலவே தோன்றியது.

நான் அறையைப் பூட்டிக் கொண்டு கீழே சென்றேன். ஹோட்டலில் ஏராளமானவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கிருந்த யார்மீதும் என் கவனம் செல்லவில்லை. ஒரு நாற்காலியில் போய் உட்கார்ந்தேன். அங்கிருந்து பார்த்தால் எப்போதும் ஜ்வாலை விட்டு எரியும் அடுப்பு தெரியும். வழக்கம்போல் அதற்கு அருகில் ஹோட்டல் வேலைக்காரக் கிழவி என்னவோ செய்து கொண்டிருந்தாள். புகையேறி அந்த இடம் எல்லாம் ஒரே கறுப்பாக இருந்தது. அந்தக் காட்சிதான் என் கனவில் விசுவரூபத்துடன் தோன்றியதோ, என்னவோ !

நான் காப்பி சாப்பிட்டு விட்டு வெளியே செல்லுகையில் "இரவு உங்கள் அறையிலேயே சாப்பாட்டைக் கொண்டு வந்து வைத்து விடட்டுமா !" என்று மிகுந்த அக்கறையுடன் கேட்டாள் வேலைக்காரக் கிழவி.

"வேண்டாம். இன்றிரவு நான் திரும்பி வர மாட்டேன். எனக்கு வேலை இருக்கிறது". என்று வெறுப்புடன் கூறினேன்.

"நான் கிழவிதானே! நீங்கள் இரவு எப்போது எழுப்பினாலும், நான் எழுந்து விடுவேன் ; அலுத்துக் கொள்ள மாட்டேன். என்னை எழுப்பத் தவறாதீர்கள். எவ்வளவு நாழிகையானாலும், பட்டினியாக எதற்குப் படுத்துக் கொள்ள வேண்டும் !" என்றாள் கிழவி.

நல்ல கிழவி இவள்! இவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்! அப்படியிருந்தும் அவளுக்கு என்னிடத்தில் எவ்வளவு பரிவு !

நான் தெரு வழியாக மனம் போனபடி நடந்து சென்றேன். கனவில் தோன்றிய கன்னிகையை நான் மறக்கவே முடியவில்லை. எவ்வளவு கோரமான கனவு கடைசியில் எவ்வளவு இன்பமாக முடிந்தது !

தெருவின் ஓரத்தில் வந்து கொண்டிருந்த ஒரு நொண்டிப் பெண் என்னையே வெறிக்கப் பார்த்தாள். அவளைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட வெறுப்புக்கு எல்லையே இல்லை. கனவில் கண்ட இணையற்ற அற்புத அழகிக்கும் அவலட்சணமான அந்த நொண்டிப் பெண்ணுக்கும் எவ்வளவு வேற்றுமை !

அந்த நொண்டிப் பெண் ஒரு பிச்சைக்காரி யாகத்தான் இருக்க வேண்டும். எனவே, அவள் கையில் இரண்டணாவைப் போட்டு விட்டு, "ஏன் இப்படி என்னைப் பார்க்கிறாய்! இங் கிருந்து தொலைந்து போ" என்றேன்.

அவள் உடனே, "நான் பிச்சைக்காரி இல்லை" என்று கோபத்துடன் கூறினாள்.

பேஷ்! அவலட்சணமே உருவான ஒரு நொண்டிப் பெண்ணுக்கு இவ்வளவு கோபமா!

அவளுடன் மேற்கொண்டு ஏதாவது பேசும் படி நேர்ந்து விடுமோ என்று பயந்து கொண்டு அங்கிருந்து நடையைக் கட்டினேன்.

என்ன விபரீதம்! நொண்டிப் பெண்ணைப் பார்த்ததிலிருந்து கனவில் தோன்றிய அழகி யின் முகம் மறைந்து விட்டது! அந்தப்



பாழும் நொண்டிப் பெண்ணின் அவலட்சண மான முகமே என் எதிரில் வந்து நின்றது.

* * *

மறு நாள் காலை பத்து மணிக்கு முன் எழுந்திருக்கக் கூடாது என்ற தீர்மானத்துடன் அன்றிரவு ஹோட்டலில் உள்ள என் அறையில் படுத்துக் கொண்டேன். எனவே, என் அறை யைச் சுத்தம் செய்வதற்காக அதிகாலையில் ஹோட்டல் பையன் வந்து கதவைத் தட்டிய போது, எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அந்தப் பையன் காலையில் என் அறையைச் சுத்தம் செய்து விட்டு, பிறகு ஒரு மண் கூஜா வில் தண்ணீர் கொண்டு வைப்பது வழக்கம்.

அன்று நான் அந்தப் பையனுடன் பேசிக் கொண்டிருந்தபோது, 'டக்' 'டக்' என்று சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அது என்ன சப்தம் என்று பையனைக் கேட்டேன். "அறைகளை யெல்லாம் இன்று நீலி சுத்தம் செய்கிறாள்!" என்று கூறிவிட்டு அவன் போய் விட்டான். அறைகளை நீலி சுத்தம் செய்தால் சப்தம் கேட்பானேன்! எனக்கு ஒன்றும் புரியவில்லை. வெளியே வந்து பார்த்தேன்.

அங்கு நான் தெருவில் பார்த்த நொண்டிப் பெண் தனக்கு உதவியான மரக் கால்களுடன் நின்று கொண்டிருந்தாள். ஹோட்டலில் வேலை செய்யும் நீலி இவள்தானா! அதுவரையில் அவள் ஹோட்டலில் என்னுடைய கண்களுக் குத் தென்பட்டதே இல்லை.

கால் ஊனமாக உள்ள அவளுக்குக் கடவுள் கடுகளவாவது அழகைக் கொடுத்திருக்கக் கூடாதா! முதலில் அவளைக் கண்டதும் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் சில விநாடி நேரத்தில் என் வெறுப்பு அப்படியே அனுதாபமாக மாறி விட்டது.

"நான் தங்கள் அறையைச் சுத்தம் செய்யட் டுமா!" என்று கேட்டாள் நீலி.

அவளது உடல் ஒட்டி உலர்ந்திருந்தாலும், அவளது முகத்தில் இளமை ததும்பியது. அவளுக்குப் பதினாறு பதினேழு வயதுதான் இருக்கும். அவள் பருவ வயதை அடைந்து விட்டாள் என்பதை அவளது உடலும் உள்ள மும் கூடப் பிரகடனப் படுத்தின.

அவளது வருகை என் மன அமைதியைக் குலைப்பது போல் எனக்குத் தோன்றியது. எனவே, "என் அறையை நீ சுத்தம் செய்ய வேண்டாம். இங்கிருந்து போய் விடு. இனி நீ இந்த அறைப் பக்கம் வராதே" என்று உரக்கக் கத்தினேன்.

உடனே நீலியின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. அவள் பதில் எதுவும் பேசாமல் திரும்பிச் சென்றுவிட்டாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு ஹோட்டல் வேலைக்காரியான கிழவி தயங்கித் தயங்கி என் அறைக்கு வந்தாள்.

"ஏன் என் குழந்தையை அப்படி விரட்டி யடித்து விட்டீர்கள்! இந்த உலகில் எல்லோ ரும் அழகாகவே இருந்து விடுகிறார்களா! சிருஷ்டியில் அழகு, விகாரம், வறுமை, செம்மை எல்லாம்தான் கலந்து இருக்கும். நான் இப்படி வறுமையால் கஷ்டப்படாவிடில், நீலியின் கால் களுக்குச் சிகிச்சை செய்திருப்பேன். அவள் கால்களைச் சரிப்படுத்தி விடமுடியும் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். ஆபரேஷன் செய்ய வேண்டுமாம். அதற்குப் பெரும் தொகை வேண்டுமே. அதற்கு நான் எங்கு போவது!"


இவ்விதம் கூறிய வண்ணம் கிழவி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். நான் ஓட்டலுக்கு வந்ததிலிருந்து கிழவி என் னிடம் தாயைப் போல் அன்பு காட்டி என் தேவைகளை யெல்லாம் கவனித்து வந்ததால், அவளிடம் நான் அனுதாபம் கொள்ளாமல் இருக்க முடிய வில்லை.

நீலி அந்தக் கிழவியின் மகள் என்பது அப் போதுதான் எனக்குத் தெரிந்தது.

அதிலிருந்து நீலி அடிக்கடி என் அறைக்கு வந்தால்கூட நான் தடுப்பதில்லை.

"பாவம்! நொண்டியும் அழகில்லாதவளு மான நீலியை எவன் கல்யாணம் செய்து கொள் வான்!" என்று நான் அடிக்கடி எண்ணுவது உண்டு. அவளுக்கும் மற்றவர்களைப் போல் ஆசாபாசங்கள் இருக்கத்தானே செய்யும்.

எனினும் யாரும் தன்னிடம் சேஷ்டை செய்ய நீலி இடம் கொடுப்பதில்லை. ஹோட்டல்


ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2


உங்கள் பற்களை சுத்தம் செய்ய
இதோ ஒரு புதிய சிறப்பான
முறை!
Kolynos
Chlorophyll
'கோலினாஸ்' புன்னகையில்
ஆரோக்கியம் ததும்புகிறது
GK. 1170

சொந்தக்காரர் மல்லய்யாவின் மகன் அவளிடம் காதல் பேச்சுப் பேசி சேஷ்டை செய்ததற்காக நீலி தன் மரக்கால் கட்டையால் அவனை அடித்துக் காயப்படுத்தி விட்டாள்.

ஒரு நாள் நீலி என் அருகில் வந்து தயங்கிக் கொண்டு நின்றாள். கடைசியாக அவள் ஒரு விதமாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "எனக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கிறீர்களா!" என்றாள்.

எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. அவள் இருக்கும் அவல நிலையில்கூட, அவள் உள்ளத்தில் எத்தனை ஆசைகள்!

அவளது கோரிக்கைக்கு நான் சம்மதித்தேன். ஒரு கரிக் கட்டியை எடுத்துத் தரையில் சில எழுத்துக்களை வரிசையாக எழுதினேன். அந்த எழுத்துக்களை அவள் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக் கொண்டாள்.

ஒரு நாள், "டாக்டரிடம் கால்களைச் சரிப்படுத்திக் கொள்ள விரும்புகிறாயா!" என்று நீலியைக் கேட்டேன்.

இதைக் கேட்டதும் அவளது முகத்தில் மகிழ்ச்சி பொங்கித் ததும்பியது.







"உண்மையாகவா! நான் மறுபடியும் கால்களால் எல்லோரையும் போல் நடக்க முடியுமா!" என்றாள்.

"ஏன் முடியாது! மகா சூரர்களான எத்தனை டாக்டர்கள் இருக்கிறார்கள், தெரியுமா! அவர்கள் ஒருவருடைய தலையைக்கூட வெட்டிவிட்டு, மறுபடியும் ஒட்ட வைத்து விடுவார்கள்!" என்றேன்.


நீலியின் சிகிச்சைக்காக ஆகும் செலவு முழுவதையும் நானே ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தேன்.

நீலியும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள். அவளுக்குத் தேகம் சற்று புஷ்டியான பிறகுதான் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். எனவே, நீலிக்கு இஷ்டப்படி பழங்கள், பால், ரொட்டி முதலியவை கொடுக்கப் பட்டன.

நீலியின் வாழ்க்கையிலே சில வாரங்களுக்குள் ஆச்சரியகரமான மாறுதல்கள் ஏற்படத் துவங்கின. ஒட்டி உலர்ந்திருந்த அவளது உடலில் சதைப் பற்று உண்டாயிற்று. தேகத்தில் புஷ்டி ஏற்படுவதற்குத்தவாறு முகத்தில் பிரகாசமும் அழகும் உண்டாயின.

ஆஹா! எவ்வளவு அழகுள்ளவராயினும் வறுமை எவ்விதம் அழகை மறைத்து உடலை உருக்குலைத்து விடுகிறது! ஆம், உடலுக்குள் இருக்கும் எலும்புக் கூடு சகலருக்கும் ஒரே விதமாகத்தான் இருக்கிறது. அது போலவே, போக போக்கியங்களும் வாழ்க்கை வசதிகளும் உடலையும் முகத்தையும் எவ்வளவு வசீகரமானவையாகச் செய்கின்றன!

நீலியிடம் தென்பட்ட மேற்படி மாறுதல்கள் என்னையறியாமல் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. நான் ஒவ்வொரு நாளும் ஆஸ்பத்திரிக்குப் போகும்போது, நீலிக்கு ஏதாவது ஒரு சாமான் வாங்கிச் செல்லாமல் இருப்பதில்லை. ஒருநாள் நான் நீலியுடன் பேசிக் கொண்டிருந்தபோது டாக்டர் வந்தார். "இவர்



வேட்டைக்காரன்புதூர் திரு வி. கே. பழனிசாமிக் கவுண்டர் எம்.எல்.ஏ., அவர்களின் குமாரன் செல்வன் சபாபதிக்கும், மோடக்குறிச்சி திரு எஸ்.பி. சுப்பராயக் கவுண்டர் குமாரத்தி செல்வி சாந்தாவுக்கும் ஜூலை மீ ஏழாம் தேதி மோடக்குறிச்சி மணமகன் இல்லத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் வந்திருந்தனர். முதல் மந்திரி திரு காமராஜ நாடார், நிதி மந்திரி திரு சுப்பிரமணியம் ஆகியவர்கள் விஜயம் செய்து சிறப்பித்ததுடன் மணமக்களுக்கு நல்லாசியும் கூறினார்கள். வாழ்க மணமக்கள்!

யார்! இவர் உனக்கு என்ன உறவு வேண்டும்!'' என்று அவளைக் கேட்டார்.

அக் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவதென்று நீலிக்குத் தோன்றவில்லை. அவள் மௌனமாகத் தலை குனிந்தாள். எனது நிலைமையும் தர்ம சங்கடமாகியது.

ரண சிகிச்சை செய்ய வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

கடைசியாக ரண சிகிச்சை செய்யப்பட்ட போது இரண்டு டாக்டர்களைத் தவிர பல நர்ஸ்களும் உள்ளே இருந்தனர். மூன்று மணி நேரம் சிகிச்சை நடந்தது.

என் மனம் நடுங்கிக் கொண்டிருந்தது. நீலியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்ததற்கு முற்றிலும் நான் பொறுப்பாளி அல்லவா!

அன்றிரவு நானும் நீலியின் தாயாரும் ஆஸ்பத்திரியிலேயே படுத்துக் கொண்டிருந்தோம். நீலி முனகும் சப்தம் எனக்குக் கேட்டது. நான் விரைந்து அவள் அருகில் சென்றேன்.

நீலி என்னைப்பார்த்து, ''என் கால்கள் சொஸ்தமாகி விடுமா!'' என்று கேட்டாள்.

அவளுக்கு நான் மீண்டும் மீண்டும் நம்பிக்கை ஊட்டினேன்.

மறுபடியும் அவள் ஏதோ சொல்ல வாய்எடுத்தாள். ஆனால், அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை.

''நீலி, என்ன தயங்குகிறாய்! எதுவாயிருந்தாலும் என்னிடம் சொல்லு'' என்றேன்.

அவள் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''எனக்குக் கல்யாணம் ஆகுமா! என்னை யார் கல்யாணம் செய்து கொள்வார்!'' என்றாள்.

''நிச்சயமாக உனக்குக் கல்யாணம் ஆகும்'' என்று சொன்னேன்.

அவள் என்னையே உற்றுப் பார்த்தாள்.

ஒரு சமயம் நீலியைப் பிச்சைக்காரி என்று எண்ணி, மிகுந்த வெறுப்புடன் அவள் முன் இரண்டு அணாவை வீசி எறிந்தேன். ஆனால் இன்றோ, நீலியின் வாழ்க்கை என் வாழ்க்கையுடன் பின்னிக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றியது!

அன்று நீலியைப் பரிசோதித்து விட்டு வந்த டாக்டரின் முகத்தைப் பார்த்த போது நான் திடுக்கிட்டேன். என்னைக் கண்டதும் அவர், ''ஆபரேஷனில் அதிக ரத்தம் செலவழிந்து விட்டதால், அவள் நிலைமை கவலைக்கிடமாயிருக்கிறது. இனி அவள் பிழைப்பது அரிது'' என்று வருத்தத்துடன் கூறினார்.

இதைக் கேட்டதும் என் உயிர் இதயம் நின்று விடும் போல் இருந்தது. நீலியை இழந்து விடும்படி நேருமோ என்ற கலக்கம் என்னை ஆட்கொண்டது.

நான் மறுபடியும் நீலியின் அறைக்குள் சென்றேன். நீலியின் கண்கள் மூடிய வண்ணமிருந்தன. நான் அவள் அருகில் உட்கார்ந்து விம்மினேன்.

அவள் கண்களைத் திறந்து, என் மேல் கையைப் போட்டுக் கொண்டாள். ''என்னை யார் கல்யாணம் செய்துகொள்வார்!'' என்ற அதே கேள்வியை மறுபடியும் கேட்டாள்.

அதற்கு மேல் தாமதிக்கக் கூடாது என்று என் மனம் அடித்துக் கொண்டது. ஒரு நல்ல ஆத்மாவுக்கு ஏற்படக் கூடிய மனச் சாந்தியை நாம் ஏன் கெடுக்க வேண்டும்! நான் கூறுவது பொய்யாக இருந்தால்கூட இருக்கட்டும். அந்த ஆத்மாவுக்குச் சாந்தி ஏற்பட்டால் போதுமானது.

மறுபடியும் நீலி கண்களைத் திறந்தாள். ''நான் பிழைப்பேனா!'' என்று கேட்டாள்.

நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன். ''சந்தேகம் என்ன! நிச்சயமாகப் பிழைத்து விடுவாய்'' என்றேன்.

''நிச்சயமாகவா!''

''ஆமாம். எனக்காகவாவது நீ பிழைத்துத்தான் ஆகவேண்டும்.''

நீலியின் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டது.

''அப்படியானால்......''

''நான்தான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்!''

''நீங்களா! நீங்களா!''

நீலியின் முகமும் அகமும் மலர்ந்தன. அவள் முகத்தின் அழகு பன்மடங்கு அதிகமாகியது.

அச்சமயம் எனக்கு, நான் கனவில் கண்ட கந்தர்வ கன்னிகைக்கும் நீலிக்கும் அதிக வேற்றுமை இல்லையோ என்று தோன்றியது!

''நான் உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். இல்லாவிடில் உனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்வேனா! இவ்வளவு தொகை செலவு செய்வேனா!''

''உண்மையாகவா! அல்லது இது கனவா!''

''கனவு இல்லை, நீலி; உண்மைதான்'' என்று கூறி அவளது இரு கைகளையும் அன்புடன் பிடித்துக் கொண்டேன்.

அன்று நான் கண்ட காட்டுத் தீ கனவில் தோன்றிய காட்சியாகும். இன்றோ, அதைக் காட்டிலும் கொடிய தீ என் உடலையும் உள்ளத்தையும் உருக்கியது.

கடைசியாக நீலியின் கண்கள் மூடிக் கொண்டன. எனினும் அவளது அழகிய இளம் முகத்தில் புன்முறுவலும் நம்பிக்கை உணர்ச்சியும் தவழ்ந்து கொண்டிருந்தன.


குடும்பத்தில்
எல்லோரும் விரும்புவது...
Glaxo
கிளாக்ஸோ பிஸ்கோத்துகள்
சிறந்த பிஸ்கோத்துகள்
பிரிட்டானியா



"நான் உங்கள் கண்களில் ஜலம் வரும்படி அவ்வளவு உணர்ச்சியுடன் பேசி விட்டேனா என்ன?" என்று கேட்டேன்.

"விமலா! நீ இவ்வளவு தூரம் என்னை நம்புகிறாய். ஆனால் உனக்கு நான் செய்த துரோகத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் கூட என் மனம் சாந்தியடையாது. என்னை நீ மன்னித்து விடுகிறாயா?" என்று உருக்கமாகக் கேட்டார் ராஜாராம்.

"இது என்ன பேச்சு ராஜாராம்? நீங்கள் எனக்கு ஒரு துரோகமும் செய்யவில்லையே. ஏதோ சற்றுப் பயமுறுத்தினீர்கள். அதைத்தான் நான் மறந்து விட்டேனே" என்றேன்.

அத்தியாயம் 37

தாபம் தணியுமா?

"அது இல்லை, இந்து! இன்னொரு விஷயம். இதைப் பற்றி உனக்குத் தெரிந்திருக்கவே முடியாது. உன்னிடம் சொல்லி விடுகிறேன். குங்குமத்துறையிலிருந்தபோது உனக்கு ரங்கதுரை எழுதிய கடிதங்களையெல்லாம் நான் தபாலாபீஸிலேயே வாங்கி நெருப்பு வைத்து விட்டேன். இந்து! என்னை மன்னித்து விடு. அப்படிச் செய்து விட்டதற்காக நான் ரொம்பவும் மனவேதனைப் படுகிறேன்."

எனக்குக் கூரை இடிந்து தலைமீது விழுந்த மாதிரி இருந்தது. 'கால்ஷியம்' ஊசி கருப்பு ரத்தக் குழாயில் போட்டுக் கொண்டால், உடல் முழுதும் உஷ்ணம் பரவுமே அதைப் போல் உடம்பு சூடேறிற்று. கூடவே ஒரு நடுக்கமும் உண்டாயிற்று. நிமிர்ந்து உட்கார்ந்திருந்தவள் தடாலென்று படுக்கையில் சாய்ந்தேன்.

ராஜாராம் பதற்றத்துடன் எழுந்து நின்றார். நான் மறுபடியும் மூர்ச்சையாகிவிட்டேன் என்று அவர் எண்ணினார் போலிருக்கிறது.

நான் உட்காரச் சொல்லிச் சமிக்ஞை செய்தேன். "இந்து! உன்னிடம் இந்த நிலையில் இதை நான் சொல்லியிருக்கக்கூடாது. என்ன முட்டாள்தனம் செய்து விட்டேன்!" என்று உண்மையான இரக்க உணர்ச்சியுடன் கூறினார். அவருடைய முகம் பரிதாபகரமாக இருந்தது.

"எனக்கு ஒன்றுமில்லை. முழுதும் சொல்லுங்கள். உண்மையில் இந்த ஆனந்தமான விஷயத்தைச் சொன்னதற்காக நான் வந்தனம்தான் தெரிவிக்க வேண்டும். என் நெஞ்சம் இன்றுதான் குளிர்ந்தது."

ராஜாராம் விழித்தார். "சந்தோஷமான விஷயமா? எது?" என்று அர்த்தமில்லாமல் கேட்டார்.

"நீங்கள் கூறியதுதான். ரங்கதுரை என்னை அடியோடு மறந்து விட்டார் என்ற எண்ணம் என்னைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தது. அவருடைய கடிதங்களை நான் படிக்காமல் நீங்கள் எரித்து விட்ட போதிலும் அந்தத் தகவலை இப்போதாவது சொன்னீர்களே! இது என்ன ஆறுதலாக இருக்கிறது, தெரியுமா? நீங்கள்



இதைச் சொன்னதே போதும். வேறொன்றும் சொல்ல வேண்டாம். மன்னிப்புக் கேட்கவும் வேண்டாம். இந்தமாதிரி ஒரு உதவியை நீங்கள் எனக்குச் செய்ததே இல்லை."

கடின இதயம் படைத்தவர் என்று நான் எண்ணிக்கொண்டிருந்த ராஜாராமின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. "இந்துமதி! உன்னுடைய புனிதமான அன்பை நான் அறிந்து போற்றாமல் கெடுக்க முயற்சித்தேனே? நீ ஒரு ரத்தினம். உன்னை ஏமாற்றிய நான்தான் மகா பாவி!" என்று கூறினார் அவர்.

"இப்படியெல்லாம் தயவு செய்து சொல்லவே வேண்டாம். உங்கள் மனம் மாறி விட்டது என்று எனக்கு உள்ளுணர்ச்சியில் முன்பே தெரிந்து விட்டது. ஆனால் இன்றுதான் அதற்கு அத்தாட்சி கிடைத்தது. உங்கள் மனமாற்றமே எனக்குப் பெரிய பலமென்று நான் கருதுகிறேன். அதுவே போதும்" என்றேன்.

"இந்து! இப்படிச் சொல்வதன் மூலம் நீ என் மனவேதனையை அதிகரிக்கச் செய்கிறாய். நீ என்னிடம் சண்டை பிடித்திருந்தால் பாரம் குறைந்திருக்கும்" என்று கரகரத்த குரலில் கூறினார் ராஜாராம்.

"இன்று இதைச் சொல்லவேண்டுமென்று உங்களுக்கு ஏன் தோன்றியது?" என்று கேட்டேன்.

ராஜாராம் ரங்கதுரையின் கடிதத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார். "இதை நான் படிக்கவில்லை, இந்து. ஆனால் நீ எவ்வளவு தூரம் அவருக்காக ஏங்குகிறாய் என்று இன்று இந்தக் கடிதத்துடன் நீ கீழே விழுந்து கிடந்தபோதுதான் எனக்குத் தெரிந்தது. நான் மனமுருகிப்போய் விட்டேன். உடனேயே எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு பிராயச்சித்தம் செய்து விடுவது என்று தீர்மானித்து விட்டேன்."

எனக்கு ராஜாராம் சொன்னதைக் கேட்டு மனம் இளகிற்று. ஏன் அவர் அப்படிச் செய்தார் என்று கேட்க ஆவலாக இருந்த போதிலும் அவர் மனத்தைப் புண்படுத்த வேண்டாமென்று நான் தூண்டிக் கேட்கவில்லை.

ஆனால் அவராகவே, "இந்து! நான் செய்தது பெரிய துரோகம். ஆனால் அந்த சமயத்தில் என் கண் குருடாகி இருந்தது. மந்திரமூர்த்தியைத் தேடி வந்தபோது அவருடைய சொத்தில் எனக்கும் ஏதாவது பங்கு கிடைக்குமென்ற எண்ணத்துடன் தான் வந்தேன். அவருடைய அன்புக்குப் பாத்திரமாக நீ இருந்ததே எனக்குப் பிடிக்கவில்லை. உன்னைக் கல்யாணம் செய்து கொண்டால் உன் மூலமாக எனக்குச் சொத்து வரும் என்று நினைத்தேன். அதற்கும் இடமில்லாமல் ரங்கதுரை குறுக்கே வருகிறாரென்று

தெரிந்தபோது எனக்கு அவர்மீது ஆத்திரம் வந்தது. என்...டமும் அப்போது பணம் காசு கொஞ்சங் கூடக் கிடையாது. எல்லாம் வேஷம்தான். அவருக்குச் சொத்து ஒன்றும் கிடையாது என்று தெரிந்தபோது ஏமாற்றமாக இருந்தது. அதனால் ஏற்பட்ட கோபத்தை நான் ரங்கதுரையின் கடிதங்களின் மீது காட்டினேன். காசு பணம்தான் இல்லை. உன்னையாவது ஒரு சினிமா நடிகையாக்கிப் பணம் சேர்க்கலாம் என்று ஒரு சபலம் தட்டியது. நான் நினைப்பது கொஞ்சங் கூடச் சரியில்லை என்று ஒரு பக்கம் தெரிந்துதான் இருந்தது. ஆனாலும் ஏன் அப்படிச் செய்தேன் என்று இது வரை எனக்கே புரிய வில்லை."

"குமார் எத்தனை கடிதங்கள் அவர் எனக்கு எழுதினர்?"

"ரங்கதுரை போய் மூன்று மாதங்களுக்குள் ஆறு அல்லது ஏழு கடிதங்கள் வந்திருக்கும். அதன் பிறகு குறைந்து போயிற்று. பிறகு மாதம் ஒன்று வந்தது. அதிலெல்லாம் தொனித்த ஏமாற்றத்தைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஒரு பக்கம் கஷ்டமாக இருக்கும். போகப் போகக் கடிதங்களை உன்னிடம் கிடைக்கச் செய்து விட்டால் என்ன என்றுகூட நினைத்தேன். ஆனால் சொல்வதற்குத் தைரியம் வரவில்லை. நீ ஒரு கடிதம் என்னிடம் கொடுத்தாயே? அதைக்கூட நான் தபாலில் சேர்க்க வில்லை. ரங்கதுரையின் விலாசத்தைக் கூட நான் குறித்து வைத்துக் கொள்ளாமல் போய் விட்டேனே என்று இப்போது ரொம்ப வருத்தமாக இருக்கிறது. இதற்குப் பிராயச்சித்தமாக நான் உன்னை அவருடன் சேர்த்து வைத்தால்தான் எனக்கு மனச் சாந்தி கிடைக்கும். எப்பாடு பட்டாவது ரங்கதுரையைத்



"தேடிக் கண்டு பிடித்து விடுகிறேன். அவர் இந்தியாவுக்குப் பத்திரமாக வந்து சேர்ந்திருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று தமது நீண்ட பேச்சை முடித்தார்.

என் இதயத்தில் ஒருவித அமைதி நிலவியது. ரங்கதுரை எனக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தார் என்கிற நினைப்பே கடிதங்களைப் படித்தது போன்ற இன்ப உணர்ச்சியை அளித்தது. இந்த இன்ப நீர் பாய்ந்ததும் என்னுடைய வாடியிருந்த அன்புப் பயிர் தழைத்து வளர்ந்தது. மறுபடியும் அதற்கு யாரேனும் நெருப்பு வைத்து விடுவார்களென்று அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

எனக்கு உடம்பு சீக்கிரத்தில் சரியாகி விட்டது. ஓய்வு எடுத்துக் கொண்டதே மருந்தாக இருந்தது. ஒரு வாரத்துக்கெல்லாம் நான் மறுபடியும் படப் பிடிப்புகளுக்குப் போக ஆரம்பித்தேன்.

படத்தின் முதல் பாகம் புஷ்பாவும், சுந்தரும் மணந்து கொள்வதும், அவர்களுக்குக் குழந்தைகள் பிறப்பதும் தான். அதற்குப் பிறகு எடுக்க வேண்டிய காட்சிகளைச் சென்னைக்குப் போய் எடுக்க வேண்டுமென்று டைரக்டர் பாஸ்கரன் கூறினார். எனக்கு இதைக் கேட்டதும் சந்தோஷம், பயம் இரண்டும் உண்டாயின. சென்னைக்குப் போனால் ரங்கதுரையைப் பற்றி விசாரிக்க வசதியாக இருக்கும். ஆனால் ஈசுவரமூர்த்தி, வக்கீல் பத்மநாபன் இவர்கள் கண்களில் படாமல் தப்ப வேண்டுமே என்று தோன்றியது.

கடைசியில் சென்னைக்குப் போய்த்தான் ஆக வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டது. கவுண்டர் தமது மனைவியையும், வள்ளியையும் வீரத்தான் பட்டி வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தார்.

அவருடைய துணை இல்லாமல் போவதில்லை என்று நிச்சயித்திருந்தேன். நான் சொன்ன உடனேயே அவர் இப்படி ஏற்பாடு செய்து விட்டுப் புறப்பட்டார்.

ஸ்டுடியோ ஆட்கள் பல பேர் வந்தார்கள். "வெற்றி வேல் ப்ரொடொக்ஷன்ஸ் ஸ்பெஷல்" என்றுகூட அன்று அந்த ரயிலைக் கூறியிருக்கலாம். அத்தனை ஆட்கள் சென்னைக்கு வந்தார்கள். நானும் இன்னும் இரண்டு உப நடிகைகளும், கவுண்டரும் ஒரு இரண்டாவது வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்தோம்.

அன்றிரவு எனக்குச் சிறிதும் தூக்கம் வரவில்லை. கொஞ்ச நாட்களுக்கு முன் நான் தன்னந் தனியாக ரயிலேறி வந்ததை நினைத்துக் கொண்டேன்.

என்னிடம் கருணையோடு நடந்து கொண்ட அந்த டிக்கட் பரிசோதகர் என் கண் முன்னால் வந்தார். நானும் ரங்கதுரையும் சேர்ந்து ரயில் பிரயாணம் செய்தது போல் ஸ்டேஷனில் கனவு கண்டது ஞாபகம் வந்தது. இப்படிப்பட்ட சிந்தனைகளுடன் வெகு நேரம் விழித்திருந்து விட்டுச் சற்றுக் கண்ணயர்ந்தேன்.

அப்பப்பா! என்ன பயங்கரமான கனவு? ஏன் தூங்கினேனென்று வருத்தமாக இருந்தது. "நான் ஒரு அடர்ந்த காட்டின் வழியே போய்க் கொண்டிருக்கிறேன். ரங்கதுரை எங்கிருந்தோ என்னைக் கூப்பிடுகிறார். அவரைத் தேடுகிறேன். 'மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே' என்ற பாடலை அவர் பாடுவது கேட்கிறது. தேடிக் கொண்டே அலையும் போது ஒரு வேரின் மேல் காலை வைக்கிறேன். ஐயையோ! வேரா அது? மலைப் பாம்பல்லவா? என்னை அப்படியே சுற்றிக் கொண்டு விட்டது. 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கதறுகிறேன். அந்தப் பாம்பின் முகம் என் முகத்துக்கு நேராக வருகிறது. அதன் உடல் என்னை அழுத்திக் கட்டியிருக்கிறது. அந்த அருவருப்பு உணர்ச்சியும், பயமும் சேர்ந்து ரத்தமே உறைந்து விட்டது போலத் தோன்றுகிறது. திடீரென்று பாம்பு சிரிக்கிறது. அதன் முகம் வழுக்கை விழுந்த ஈசுவரமூர்த்தியின் முகமாக மாறுகிறது." நான் திடுக்கிட்டு விழித்தேன்.

முனிசாமி கவுண்டர், "ஏனம்மா? இந்த ஏன் கத்தினாய்? கெட்ட கனவு கண்டாயா? எழுந்து கொஞ்சம் தீர்த்தம் சாப்பிடு, அம்மா!" என்று சொல்லிக்கொண்டிருந்தார். அவர் கூஜாவிலிருந்து எடுத்துக் கொடுத்த தண்ணீரைப் பருகிக் கொண்டே, கனவை அவரிடம் சொன்னேன்.



நீங்கள் ஏன் ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளை உபயோகிக்க வேண்டும்

- அவைகள் மிகவும் கூர்மையானவை—சுலபமாகவும் மழு மழுப்பாகவும் க்ஷவரம் செய்கின்றன.
- ஒவ்வொரு ப்ளேடும் பல க்ஷவரங்களுக்கு வரும்—ஆதலால் ஸெவன் ஓ'க்ளாக் பணத்தை மிச்சமாக்குகிறது.
- ஸெவன் ஓ'க்ளாக் உங்களை சுத்தமாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கச் செய்கின்றன.

மட்டரக ப்ளேடுகளில் பணத்தை விரயமாக்காதீர்கள்—தினமும் ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளால் க்ஷவரம் செய்து கொள்ளுங்கள்.

7 o'clock BLADES

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள்



"நீ பயப்படாதே, அம்மா! உன் மனம் பயத்தால் குழம்பிப் போயிருக்கிறது. கனவெல்லாம் நம்முடைய மனத்தில் தோன்றும் எண்ணங்களின் பிரதிபலிப்புத்தான். இதை நினைத்து நீ கவலைப்படாதே" என்றார்.

அதன் பிறகு நான் விடிய விடியத் தூங்கவில்லை. என் தந்தை காசிலிங்கத்தைச் சிறைக்கு அனுப்பிய படுபாதகனான ஈசுவரமூர்த்தியை நினைத்து நினைத்து ஆத்திரப்பட்டேன். என் தாயார் அவரால் அடைந்த கஷ்டங்களையும், அந்தப் பாவிகளால் அவள் மனமொடிந்து போனதையும் நினைக்கும்போதெல்லாம் என் ரத்தம் கொதித்தது. இந்தப் பாதகர்கள் மட்டும் என் பெற்றோர்கள் வழிக்குப் போகாமல் இருந்திருந்தால், அவர்கள் எப்படியாவது சுகமாக இருந்திருப்பார்கள். என் தந்தையும் இப்படி உலகத்துக்குப் பயந்து கொண்டு ஒளிந்து வாழும் நிலைமை ஏற்பட்டிருக்காது. நானும் இப்படி அனாதரவாக அலையும்படி நேரிட்டிருக்காது. என்னதான் இத்தனை பேருக்கும் மத்தியில் நான் பிரதானமாக வாழ்ந்தாலும் எனக்கென்று ஒரு சிறிய குடும்பம் இருப்பதற்கு ஈடாக முடியுமா? மனத்துக்கு சாந்தி கிடைக்கவில்லையே. வேதனை தணியவில்லையே? ஏதோ மனத்தை முறுக்கிப் பிழிவது போலவே இருக்கிறதே! இது என்ன வேதனை? எப்போது தணியப் போகிறது? இதய தாபம் என்று அடங்கப் போகிறது?

ஆகா! என்ன சுயநலமான எண்ணங்கள்? என் தாய் தந்தையர் சௌக்கியமாக இருக்கவில்லையே என்பது கூட எனக்கு வருத்தமில்லை. ஆனால் அவர்கள் சுகமாக இருந்தால், நானும் சுகமாக இருக்கலாமே என்பது தான் எனக்கு எண்ணம். சே! மனிதர்களுடைய மனமே சுயநலம் தானோ?

ரங்கதுரை விஷயத்தில் கூட என்னுடைய உணர்ச்சிகளெல்லாம் தன்னல நோக்கத்தினால் எழுந்ததுதானோ? உள்ளத்தில் மலர்ந்த அன்புதான் அப்படியே இருக்கிறதே. அது கெட்டுப் போய் விடவில்லையே? அந்த அன்பை வைத்துக் கொண்டு ஏன் என்னால் சந்தோஷமாக இருக்க முடியவில்லை? ஒருவர் அருகில் இருந்தால் தான் அன்பு பூரணத்துவம் அடையுமா? ஏன் எனக்கு மனச் சாந்தி கிடைக்கவில்லை? ஏன் மன நிறைவு வரவில்லை? கடவுளே! ஒன்றுமே புரியவில்லையே? எண்ண அலைகள் மோதிக் கொண்டு வந்து என்னை நிலை கலங்க வைத்தன.

அத்தியாயம் 38

இருள் விழுங்கியது!

ஒருவாறு சென்னை வந்து சேர்ந்தோம். ராஜாராம் இரண்டு நாட்கள் முன்னதாகவே சென்னை சென்றிருந்தபடியால் எங்களை ரயில் வண்டி நிலையத்தில் வரவேற்றார். நாங்கள் இறங்குவதற்கு வேண்டிய ஜாகை வசதிகளைச் செய்திருந்தார். நான் ஹோட்டல்கள் எதிலும், இறங்க மாட்டேனென்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தபடியால் எனக்கு ஒரு சிறிய வீடு அமர்த்தியிருந்தார். அங்கே எனக்கு வேலை இல்லாதிருந்த போது நானே சமையல் செய்து விடுவேன். ஸ்டுடியோ வேலை இருந்த சமயங்களில் ஹோட்டலில் இருந்து சாப்பாடு தருவித்துக் கொள்வோம். இந்த ஏற்பாடு சௌகரியமாகவே இருந்தது. படவேலைகள் முடிவடையச் சுமார் மூன்று மாத காலத்துக்கு மேல் ஆகலாமென்று எதிர்பார்த்தார்கள். வழக்கம் போல் மூன்று மாதம் நான்கு மாதங்களாயிற்று. ஏதோ காரணத்தால் தாமதம் ஏற்பட்டு வந்தது.

ஸ்டுடியோ வேலை இல்லாத சமயங்களில் எனக்குப் பொழுது போவது மிகவும் கஷ்டமாக இருந்தது. மனத்தை அடக்க முடியாமல் தவித்தேன். பத்மநாபன் வீட்டைப் போய்ப் பார்க்க வேண்டும் போல் இருக்கும். ரொம்பக் கஷ்டப் பட்டு அந்த ஆசையை அடக்கிக் கொண்டேன். சுலோசனாவைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் தோன்றும். கையும் காலும் துருதுருவென்று அலையும்.

அதே சமயத்தில் என்னை வீட்டை விட்டு வெளிக் கிளம்பாமல் தடுத்து

நிறுத்தி வந்தது, ஈசுவர மூர்த்தியின் நினைவுதான். அவர் கண்களில் தட்டுப் படாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை என்னை அரித்தெடுத்துக் கொண்டிருந்தது.

என்னுடைய கவலைக்குச் சில காரணங்கள் இருந்தன. ஸ்டுடியோவுக்கு நான் போகும் போதெல்லாம் சாம்பல் நிறமுடைய கார் ஒன்று பின்னாலேயே வரும். ஸ்டுடியோவில் கார் திரும்பியதும் நேரே சென்று விடும். நான் புறப்படும்போது இருக்காது. ஆனால் வீட்டில் இறங்கும் போதும் இருக்காது. ஆனால் வீட்டில் இறங்கிய இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் அதே கார் வீட்டு வாசலைத் தாண்டிப் போகும்.



நான் சென்னை போய்ச் சேர்ந்து இரண்டு மாதங்கள் ஆகி விட்டிருந்தன. ஆரம்பத்தில் இம்மாதிரி ஒரு கார் பின்னால் வந்து கொண்டிருக்கவில்லை. ஆனால் எப்பொழுது முதல் அது தொடர்கிறது என்பதை நான் கவனிக்கவில்லை. தினசரி பதினைந்து நாட்கள் எந்த நேரத்தில் போனாலும் ஒரே மாதிரியான கார் தொடர்வது எனக்கு ஏதோ மனதுக்குக் கஷ்டமாக இருந்தது.

இந்த ஞாபகம் வரும்போதெல்லாம் "தேவி! ரக்ஷி" என்று சொல்லி விட்டுத்தான் வேலை செய்வேன். நல்ல வேளையாக நான் எங்கு போனாலும் முனிசாமி கவுண்டர் இல்லாமல் கிளம்புவதில்லை என்று தீர்மானமாக வைத்துக் கொண்டிருந்தேன். அல்லது ராஜாராமாவது வந்து தீரவேண்டும்.

ஒரு நாள் இந்தக் கார் விஷயத்தைச் சோதனை செய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. ராஜாராமிடம் விஷயத்தைச் சொன்ன போது சிரித்தார். ஆனால் அன்று கட்டாயப்படுத்தி என்னோடு அழைத்துக் கொண்டு கிளம்பினேன்.

புறப்பட்டு ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் இந்தக் காரை ராஜாராமிடம் காட்டினேன். பிறகு ரொம்ப தாகமாக இருக்கிறதென்று ஒரு சோடா வாங்கிக் கொண்டு வரச் செய்தேன். அங்கு பத்து நிமிஷங்கள் காத்திருந்தோம். நான் கார் வருகிறதா என்று பார்க்கச் சொன்னேன். வரவில்லை. கடைசியில் புறப்பட்டோம். புறப்பட்ட பத்து நிமிஷங்களுக்கெல்லாம் அதே சாம்பல் நிறவண்டி எங்கள் பின்னால் வந்தது.

அதன் பிறகு ராஜாராமுக்கும் சந்தேகமாகப் போய் விட்டது. 'இது சாதாரணமான விஷயமாக இருக்க முடியுமா?' என்று யோசிக்கத் தொடங்கினார். எப்படியிருந்தாலும் அதை நிரூபிப்பது இயலாத காரியம். ஆகவே நாங்கள் ஜாக்கிரதையாக இருப்பது என்று தீர்மானித்தோம். இருந்தாலும், ஏதோ ஒரு வித பயம் என்னை உலுக்கிக் கொண்டிருந்தது.

ராஜாராமை விட்டுப் பத்மநாபன் வீட்டைப் பற்றித் தகவல் விசாரித்து வரச் செய்தேன். பத்மநாபன் வீட்டில் ஒருவருமே இல்லையென்று முதலில் ஒரு மாதம் கூறி வந்தார். பிறகு ஒரு நாள் அவரை மறுபடியும் போய்ப் பார்க்கச் சொன்னேன்.

அந்தத் தடவை வீட்டில் வக்கீல் பத்மநாபன் மாத்திரம் இருப்பதை அவர்கள் வீட்டுத் தோட்டக்காரன் மூலமாகத் தெரிந்து கொண்டு வந்தார். ரமேஷ் கல்கத்தாவில் வேலையி லிருந்ததால் அனைவரும் கல்கத்தாவில்தான் வாசம். பத்மநாபன் மட்டும் இங்கும் அங்குமாக இருக்கிறார் என்பது போன்ற தகவல்கள் தெரிந்தன. அதன்பிறகு எனக்கு அந்த ஆவல் தணிந்து போய் விட்டது.

அதற்குப் பிறகுதான் ஒரு நாள் ஆச்சரியத்திலும் ஆச்சரியமான என்னை நிலை கலங்கச் செய்த சம்பவம் நடந்தது.

டைரக்டர் பாஸ்கரன் என்னை நிறையப் படங்கள் பார்க்கச் சொல்லி வற்புறுத்துவார். 'மற்றப் படங்களைப் பார்த்தால்தான் நமது குறைகளும், குணங்களும் நமக்கு விளங்கும்' என்று கூறுவார். அதற்காக நான் படங்கள் பார்க்கச் செல்வது வழக்கம். சென்னையிலும் நான் போனால் சொல்ல முடியாத கூட்டம் வந்துவிடும். பலர் சூழ்ந்து கொண்டு "அமரதாரா" என்று கத்துவார்கள். அதற்குப் பயந்து கொண்டு இரவுக் காட்சிகளுக்குத்தான் போய் வருவேன். அப்படி இல்லாவிட்டால், சினிமா தியேட்டர்களின் 'பால்கனி'யில் ஒரு சிறிய அறை இருக்கும். அதில் உட்கார்ந்து திரை போட்டுக் கொண்டு விடலாம். வெளியிலிருந்து பார்ப்பவர்கள் யாருக்கும் உள்ளே இருப்பவர் யாரென்று தெரியாது.



அப்படிப்பட்ட "பாக்ஸில்" உட்கார்ந்து நான் ஏதோ ஒரு ஆங்கிலப் படம் பார்த்துக் கொண்டிருந்தேன். படம் ஒரு சுவாரஸ்யமான கட்டத்தில் நின்றது. இடைவேளைக்காக விளக்குகள் எரிந்தன. முன்னால் தொங்கிய திரையை நான் இழுத்து விட்டு அதன் வழியாகப் பார்த்தேன்.

"ஆ! அதோ எழுந்து நிற்கிறாரே, அவர் யார்? ஏன் என் இதயம் இப்படித் துடிக்கிறது? கைகால்களெல்லாம் எதற்காக நடுங்குகின்றன? அதோ நிற்பவர் அவர்தானே? என் கண்கள் என்னை ஏமாற்றவில்லையே? ஸ்வாமி! பகவானே, என் பிரார்த்தனைகள் வீண் போகவில்லை. அவரை என்னிடம் சேர்த்து விட்டீர்களே. ஆம்! அவரேதான்; சந்தேகமே யில்லை. நடந்து வெளியே போகிறார். ஆனால் மேல்நாட்டுப் பாணியில் உடை அணிந்து கொண்டிருக்கிறார். அவ்வளவுதான் வித்தியாசம். அதே மந்தகாசமான வதனம். அதே கம்பீரமான நடை. கொஞ்சம் உடம்பு இப்போது நன்றாக இருக்கிறது! இத்தனையையும் நான் அவர் எழுந்து நடந்து வெளியே போகுமுன் நினைத்து விட்டேன்.

கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது. குருவி தன் சிறகுகளைப் படபட வென்று அடித்துக் கொள்வது போல இதயம் அடித்துக் கொண்டது. மூச்சுத் திணறிற்று. பேசக்கூட முடியாத ஒரு அதீதமான ஆனந்த நிலையை நான் அப்போது அடைந்தேன். உடலில் ஒவ்வொரு நரம்பும் துடித்தது, என் காதில் விழுந்தது. கைகள் ஜில்லிட்டுப் போயின. வியர்த்துக் கொட்டியது. நான் அடைந்த உணர்ச்சி ஆனந்தமா அல்லது ஆயரமா என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அன்று சோதனையாக என்னுடன் ராஜாராம் வரவில்லை. கவுண்டரும் இன்னும் சில உப நடிகைகளுமாக வந்திருந்தோம். இந்தப் படத்தைக் கண்டிப்பாக நாங்கள் பார்க்க வேண்டுமென்று டைரக்டர் பாஸ்கரன் சொல்லி யிருந்தார். அதனால்தான் வந்தோம். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. என்னுடைய தவிப்பைக் கவனித்த லக்ஷ்மி, "என்ன



ஜுலை 7ல் சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடந்தபோது அன்னதான சிவன் சங்கம், அங்கு விஜயம் செய்திருந்த மகாஜனங்களுக்கு அன்னம் இடும் அரிய கைங்கர்யத்தை அபாரமாகச் செய்தது. ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்குப் பாலும், பக்தர்களின் தாகம் நீக்கக் குளிர்ந்த தண்ணீரும் வரையாமல் வழங்கப்பட்டன. அன்று காலை 10-30 மணி முதல் மாலை 4 மணி வரையில் சுமார் பத்தாயிரம் மக்களுக்கு மிகவும் அமைதியாகச் சாப்பாடு போட்டு நிர்வகித்த மேற்படி சங்கம் மிகவும் பாராட்டுக் குரியது.

விமலா? ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? உடம்பு சரியில்லையா?" என்று கேட்டாள். "ஆமாம்" என்று தலையசைத்தேன். கவுண்டர் அரைத் தூக்கத்தில் இருந்தார். அவரை அனுப்பிப் பார்க்கச் சொல்ல முடியாது. நானும் எழுந்து போக முடியாது. போனால் நிச்சயமாக யாராவது 'அமர தாரா' என்று கத்துவார்கள். என் பாடு திண்டாட்டமாகி விடும். அவரை எப்படிப் பார்க்க முடியும்?

இத்தனையையும் நினைத்துக் கொண்டே அவர் வெளியே சென்ற வழியைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அதோ அவர் வருகிறார். தான் எழுந்த இடத்துக்கு அருகில் வந்து நிற்கிறார். யாரிடமோ பேசுகிறார். எதையோ கொடுக்கிறார். 'ஐயோ! இது என்ன? அது ஒரு பெண்மணி அல்லவா? மிக நாகரிகமாக அலங்கரித்துக் கொண்டிருக்கிறாளே. அவருடைய மனைவியோ?' அந்த எண்ணம் எழுந்தபோது எனக்கு ஏற்பட்ட மன வேதனைக்கு, அதுவரை நான் பட்ட எல்லாக் கஷ்டங்களும் சமம் என்று வைத்துக் கொள்ளலாம்.


நன்றாக உற்றுக்கவனித்தேன். அவள் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். எனக்குத் தேள் கொட்டிய மாதிரி இருந்தது. அவள் சிரித்துக் கொண்டே பின்பக்கம் திரும்பினாள். 'அட! அது சுலோசனா அல்லவா? அவள் எப்படி ரங்கதுரையுடன் இங்கு வந்தாள்? நல்ல வேளை! சுலோசனாதான். விளக்கு அணைந்ததும் அந்த இடத்தில் போய் அவரைக் கூப்பிட்டுப் பேசினால் என்ன? ஆனால் சுலோசனாவுடன் அவர் தனியே சினிமாவுக்கு வரக் காரணம் என்ன???' இந்தக் கேள்விக் குறி என் கற்பனைக்கு எட்டிய வரையில் பெரிதாக வளர்ந்து நின்றது. அதற்குப் பதில் சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லை.

திடீரென்று என் கண்கள் அவர்கள் உட்கார்ந்திருந்ததற்குப் பின் வரிசையைக் கவனித்தன. அங்கே உட்கார்ந்திருப்பவரைப் பார்த்தால் ஈசுவர மூர்த்தியைப் போலத் தோன்றியது. எனக்கு அதற்குப் பிறகு ஒன்றுமே தோன்றவில்லை. தலைக்குள் ஒன்றுமே இல்லாத மாதிரி ஒரு உணர்ச்சிதான் இருந்தது. சடாரென்று விளக்குகள் அணைந்தன. என்னுடைய கலவரமான நிலையில் அந்த இருள் என்னை விழுங்குவதுபோன்ற பிரமை உண்டாகவே, 'ஐயோ' என்று கத்தி விட்டேன். லக்ஷ்மி உடனே என் கையைப் பிடித்துக் கொண்டாள். "எழுந்திருங்கள். மாமா! விமலாவுக்கு உடம்பு சரியில்லை. வீட்டுக்குப் போவோம்" என்று சொல்லிக் கொண்டே என்னை எழுப்பி அணைத்தவாறு கீழே அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்தாள். ஸ்டுடியோ கார் எதிரில் நின்றது. உள்ளம் தெளியாத நிலையிலேயே வீடு வந்து சேர்ந்தேன். (தொடரும்)

இரு இணையற்ற 35 mm மினியேச்சர் காமிராக்கள்


... நடுத்தரமான விலைகளில்

★ துரிதமான லென்ஸ்கள், சமீபகாலத்திய காம்பூர் ஷட்டர்கள்
★ மிக நூதனமான சீர்திருத்தங்களுடன் கூடிய அமைப்பு




கோடக் 'ரெடினெட்' காமிரா
முற்றிலும் புதிய டிசைன் f/3.5 லென்ஸ் மற்றும் காம்பூர் ரபிட் 1/500 ஷட்டர். உங்கள் கட்டை விரலின் ஒரு தட்டு ஷட்டரை கொக்குகிறது, பிலிமை சுருட்டுகிறது மற்றும் எக்ஸ்போஷரை எண்ணுகிறது.

எல்லா அளவு எண்களை மேல் பக்கத்திலிருந்தே படிக்க முடியும். அந்தப் பெரிய வியூபைண்டர் மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டிருப்போருக்கு விசேஷ சௌகரியமானது. பலவகை உபகரணங்கள் கிடைக்கும். எவர்ரெடி கேஸ் உள்பட ... ... ரூ. 225/-
'கோடாப்ளிட்ஸ்' பிளாஷ்ஹோல்டர் ... ரூ. 47/8




கோடக் 'ரெடினா' Ib காமிரா: நான்கு துண்டுகள் சேர்த்து உண்டாக்கப்பட்ட துரிதமான f/2.8 லென்ஸ்—எல்லா நிறங்களும் சரிக்கக்கூடியது. எல்லா வகை பிளாஷுடனும் உபயோகிப்பதற்கு ஏற்றதான சின்க்ரோ—காம்பூர் ஷட்டர். பிலிம் சுற்றும் விசை காமிராவின் மீது அமைந்திருப்பதால், துரிதமாக திருப்புவதற்கு வசதியானது.

ஒரு புதிய விசேஷ அம்சம்! ஷட்டரும் அப்பர்ச்சரும் இணைப்பு உள்ளவை. எனவே, காட்சியின் எக்ஸ்போஷர் நேரத்தை நிர்ணயித்தபிறகு, இவற்றில் ஒன்றை சரிப்படுத்திக் கொண்டால் போதும் (வேண்டுமானால், இரண்டையும் தனித்தனியாகவும் சரிப்படுத்திக் கொள்ளலாம்).
எவர்ரெடி கேஸ் உள்பட ரூ. 380/-
'கோடப்ளிட்ஸ்' பிளாஷ்ஹோல்டர் ... ... ரூ. 47/8



கோடக் 'போனி' 828 காமிராவின் ஒவ்வொரு பிலிமின் விலையும் குறைவுதான். ஒரு சிறந்த பிரிஸிஷன் மினியேச்சர்; 'கோடக்' அல்லது 'கோடக்ரோம்' 828 பிலிமில் எட்டு ஸ்னாப்புகள் எடுக்கலாம். இதனால் இருவகை அனுகூலங்கள் உண்டு. ஒவ்வொரு பிலிம் சுருளும் விலைகுன்றலானது—தவிர, அநேகமாக உடனேயே பிலிமைக்கழுவி, அச்சிட்டு படத்தையே பார்த்து விடலாம். f/4.5 லென்ஸ் 1/150 செகண்டுவரை வேகமுடைய ஷட்டர்.
தோல் கேஸ் உள்பட ... ... ரூ. 245/-
பிளாஷ்ஹோல்டர்: ... ... ரூ. 55/-



அருமையான வர்ணப் படங்கள்!
'கோடக்ரோம்' 135 பிலிமை உபயோகித்து அழகிய இயற்கை வர்ணப்படங்கள் பிடிக்க முடியும். உபரி செலவின்றி கோடக் லிமிடெடில் பிலிமை புரோஸஸ் செய்து கொடுப்பார்கள்; நேராக பார்ப்பதற்கும் அல்லது திரையில் புரொஜெக்ட் செய்வதற்கும் உகந்தது.

மேல் விலைகளில் விற்பனைவரி சேராது.

கோடக் லிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது) பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா

4. விடுதலை

அவன் ஒரு சிறுவன்! ஆம், அவனுக்கு வயது பதின்மூன்று பதினாலுக்கு மேல் இருக்காது. ஆனாலும், நன்றாக வளர்ந்திருந்தான்.

“டேய், ரிக்ஷா இழுக்க உனக்கு யாரடா லைசென்ஸ் கொடுத்தது? கையிலே லைசென்ஸ் வில்லை கட்டியிருக்க வேணுமே! எங்கே அது?” என்று அவனை அதட்டிக் கேட்டார் போலீஸ்காரர்.

அந்த ரிக்ஷாக்காரப் பையன் திருதிருவென்று விழித்தான். “இது என் ரிக்ஷா இல்லை. வேறு ஒருவருடையது. பசிக் கிறக்கத்தில் விட்டு விட்டேன்” என்று தயக்கத்தோடு கூறினான்.

“என்ன! வேறு ஒருவனுடையதா? நீ எப்படி இழுக்கலாம்? நட ஸ்டேஷனுக்கு” என்று கூறி அவனை ரிக்ஷாவுடன் பக்கத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றார் போலீஸ்காரர். செல்லும் போதே கீழே விழுந்தவரைப் பார்த்து, “நீங்களும் வாருங்கள். இவனைச் சும்மா விடக் கூடாது” என்று கூறி அவரை அழைத்தார்.

அந்தப் பையனைப் பார்த்தவுடனே மதுரநாயகத்துக்கு அவனிடம் ஓரளவு அநுதாபம் ஏற்பட்டு விட்டது. “இந்த வயதில் இவன் ஏன் ரிக்ஷா இழுக்க வேண்டும்? எப்படி இவனுக்கு இந்த ரிக்ஷா கிடைத்தது?” என்றெல்லாம் எண்ணினார். கடைசியில், “சரி, நாமும் இவர்களோடு போய், என்ன நடக்கிறது என்றுதான் பார்ப்போமே!” என்று நினைத்துக் கொண்டே அவர்களின் பின்னால் சென்றார். போலீஸ் - ஸ்டேஷனுக்குச் சென்றதும், சப்-இன்ஸ்பெக்டருடைய அறை ஜன்னல் ஓரமாக நின்று கொண்டு நடப்பதைக் கவனித்தார்.

சப் - இன்ஸ்பெக்டரிடம் நடந்ததைச் சுருக்கமாகக் கூறினார் போலீஸ்காரர். உடனே சப் - இன்ஸ்பெக்டர் ரிக்ஷா இழுத்த சிறுவனைப் பார்த்துக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவன் கூறிய பதில் இதுதான் :

“நான் பிறந்தவுடனே என் அம்மா ஜன்னி கண்டு இறந்து போனாள். என் அப்பாவும் ஆறேழு மாதங்களுக்கு முன்பு ஒரு வெறி நாய் கடித்துச் செத்துப் போனார். வேறு உற்றார் உறவினர் இல்லாததால் நான் அனாதையானேன். என் அப்பாவும் பணம் எதுவும் சேர்த்து வைக்கவில்லை. அதனால், எட்டாவது வகுப்பைப் பாதியிலே முடித்துக் கொண்டு ஊர் ஊராக வேலைக்கு அலைந்தேன். ஒன்றிரண்டு இடங்களில் வேலை கிடைத்தது. ஆனாலும், அங்கெல்லாம் அதிக நாள் இருக்க முடியாமல் போய் விட்டது. கடைசியாக இந்தப் பட்டணத்துக்கு வந்தேன். வந்து ஒரு மாதம் ஆகிறது. இங்கும் வேலை கிடைக்கவில்லை. அதனால், கூலி வேலை பார்த்தாவது காலத்தைக் கழிக்கலாம் என்று நினைத்தேன். அதில் தினம் இரண்டணாக் கிடைத்தது. அதைக் கொண்டு அரை வயிறும், கால் வயிறும் நிரப்பி வந்தேன். வயிறு நிறையச் சாப்பிட எனக்கு ஒரு வழி சொல்லித் தந்தார், எனக்குத் தெரிந்த ஒரு ரிக்ஷாக்காரத் தாத்தா. அவர் பகலெல்லாம் ரிக்ஷா இழுப்பார். விளக்கு வைத்த பிறகு அவருக்குச் சரியாகக் கண் தெரியாது. வெள்ளெழுத்தாம்! அதனால், அவர் என்னிடம் இந்த ரிக்ஷா வைத் தந்து இரவு



பொம்மையின் முன் பக்கம் திருப்பினால் தலைப்பாகை வைத்திருப்பவரின் பின்பக்கம்!

நேரங்களிலே இழுக்கச் சொன்னார். கிடைக்கும் கூலியில் அவருக்குப் பாதி கொடுத்து விடுவேன். நாலு நாட்களாக இந்தமாதிரி செய்து ஒரு ரூபாய் மிச்சம் பிடித்து வைத்திருந்தேன். அதை நேற்று ராத்திரி நான் தூங்கும்போது எவனோ ஒருவன் திருடிப் போய் விட்டான்! அதனாலே இன்றைக்கு முழுவதும் பட்டினி! பட்டினியோடே ரிக்ஷா இழுத்தேன். இப்படி விபரீதம் நேர்ந்து விட்டது.



நான் செய்தது தப்புத்தான். ரிக்ஷாவிலே வந்த பெரியவரையும், உங்களையும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவுசெய்து என்னை மன்னித்து விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

இதைக் கேட்ட சப்-இன்ஸ்பெக்டர், ''பேச்சு நன்றாகத்தான் பேசுகிறாய். இருந்தாலும்......சரி, உனக்கு இப்போது என்ன வயது?'' என்று கேட்டார்.

''பதின் மூன்று.''

''என்ன! பதின் மூன்றுதானா! ரிக்ஷா இழுக்க வேண்டுமானால், 17 வயது முடிந்து 18-வது வயது ஆரம்பமாகியிருக்க வேண்டும். தெரியுமா? லைசென்ஸ் இல்லாமல் ரிக்ஷா இழுத்ததே குற்றம்.''

''எனக்கு இது தெரியாது, சார். பொய் சொல்லுவது, திருடுவது, ஏமாற்றுவதுதான் குற்றம் என்று நினைத்தேன். இப்போதுதான் இதுவும் குற்றமென்று தெரிகிறது.''

''சரி, உன்னுடைய ஊர் எது. உன்னுடைய பெயர் என்ன?''

''என் ஊர் வேலங்குறிச்சி. மதுரைக்குப் பக்கத்திலே இருக்கிறது. என் பெயர் ரமணி.''

"பெயரெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும், நீ லைசென்ஸ் இல்லாமல் இழுத்தது ஒரு குற்றம். இந்தப் பெரியவரைக் கீழே தள்ளியது இரண்டாவது குற்றம். இந்த இரண்டுக்கும் சேர்த்து உனக்குச் சரியான தண்டனை வாங்கித் தர வேண்டியது தான்."

இதைக் கேட்டதும் அவன் திடுக்கிட்டான். "சார், சார்! தெரியாமல் செய்து விட்டேன், சார்! தயவுசெய்து என்னை மன்னித்து விட்டு விடுங்கள், சார்!" என்று கெஞ்சினான்.



இந்தக் காட்சியைக் கண்ட மதுரநாயகத்தின் மனம் இளகி விட்டது. உடனே அவர் மெதுவாக சப்-இன்ஸ்பெக்டரின் அறைக்குள்ளே நுழைந்தார். "சப்-இன்ஸ்பெக்டர் சார், நமஸ்காரம்!" என்று ஒரு கும்பிடு போட்டார்.

"யாரது? என்ன விஷயம்?" என்று கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

"ஒன்றுமில்லை. உங்களிடம் ஒரு வேண்டுகோள்......"

"வேண்டுகோளா? அது என்ன? நீங்கள் யார்?"

"ஸ்ரீமுருகன் பால நாடக சபா என்று கேள்விப்பட்டிருப்பீர்களே..."

"ஆமாம். இப்போதுகூட துருவன் நாடகம் நடத்தப் போகிறார்களே...?"

"ஆமாம், ஆமாம். நான்தான் அந்த நாடக சபாவின் மானேஜர். பெயர் மதுரநாயகம்...."

"அடடே! அந்தச் சபாவின் மானேஜரா! மிஸ்டர் மதுரநாயகம், இப்படி உட்காருங்கள். நின்று கொண்டே பேசுகிறீர்களே?" என்று எதிரே இருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னார் சப்-இன்ஸ்பெக்டர்.

மதுரநாயகம் நாற்காலியில் உட்கார்ந்ததும், "உங்கள் சபாவுக்கு நான் இரண்டு மூன்று முறை வந்திருக்கிறேன். குழந்தைகளெல்லாம் மிகவும் பிரமாதமாக நடிக்கிறார்கள். என் குழந்தைகளுக்கு உங்கள் நாடக மென்றால் ரொம்ப ரொம்பப் பிடிக்கும். என் சின்னப் பையன் ஆனந்தன் 'கிருஷ்ண லீலா'வை மட்டும் மூன்று தடவைகள் பார்த்திருக்கிறான்" என்று புகழ ஆரம்பித்து விட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

"ரொம்ப சந்தோஷம்" என்றார் மதுரநாயகம்.

"ஆமாம், நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லவில்லையே!" என்று கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

"இந்த ரிக்ஷாக்காரப் பையனைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. ரிக்ஷா இழுத்தாவது யோக்கியமாக வயிறு வளர்க்க நினைத்திருக்கிறான். அவன் துர் அதிர்ஷ்டம் இப்படி ஆகி விட்டது. தயவு செய்து அவனை மன்னித்து விட்டால், அதுவே தாங்கள் எனக்குச் செய்யும் பெரிய உதவி. தங்களை நான் மறக்கவே மாட்டேன்" என்றார் மதுரநாயகம்.

ரிக்ஷாவில் ஏறிக் கீழே விழுந்த பெரியவருக்கும் இரக்கம் உண்டாகி விட்டது. "ஆமாம், சார்! இரவு நேரத்தில் ஆளைச் சரியாகப் பார்க்காமல் ரிக்ஷாவில் ஏறி விட்டேன். என்னைப் போன்றவர்களை வைத்து இந்தப் பொடியனால் இழுக்க முடியுமா? ஏதோ தெரியாமல் செய்து விட்டான். இவனை விட்டு விடுவதில் எனக்கும் சம்மதமே!" என்று பரிந்து பேசினார்.

சப்-இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் யோசனை செய்தார். பிறகு அந்தப் பையனைப் பார்த்து, "சரி, ஏ பையா, இனி ஒரு தடவை நீ இந்த மாதிரி செய்தாயோ, தண்டனை நிச்சயம்தான். இப்போது உன்னை விட்டு விடுகிறேன்" என்று கூறி விட்டு, "என்ன மிஸ்டர் மதுரநாயகம், உங்களுக்குத் திருப்தி தானே?" என்று கேட்டார்.

"மிகவும் நன்றி" என்று கூறிவிட்டு சப்-இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தார் மதுரநாயகம். ரமணியும் அவர் பின்னால் வந்தான். வெளியே வந்ததும், "சார், நீங்கள் தெய்வம் போல வந்தீர்கள். உங்களை மறக்கவே மாட்டேன்" என்று கண் கலங்கக் கூறினான் ரமணி.

"அது போகட்டும். இனி நீ இப்படியெல்லாம் செய்யாதே. நாளைக் காலையில் ஏழு மணிக்கு என் வீட்டுக்கு வா. விலாசம் இதோ இருக்கிறது" என்று கூறித் தம்முடைய தோல் பையிலிருந்த 'விசிட்டிங் கார்ட்' ஒன்றை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டுப் புறப்பட்டார் மதுரநாயகம். (தொடரும்)

வர்த்தகர்களும் வினோபா அடிகளும்

சுரேஷ் ராம்

வினோபா அடிகள் ஊர் ஊராக நடந்து செல்கிறார். அவரது யாத்திரையில் எத்தனையோ பேரைச் சந்திக்கிறார். எத்தனையோ வகை மனிதர்களைப் பார்க்கிறார். அவர்களிடம் தான் எத்தனை வகை அபிப்பிராயங்கள்! கொள்கைகள்! ஆனால் பெரும்பாலும் வினோபாவைச் சந்திப்பவர்கள் தங்கள் சொந்த சுகதுக்கங்களைத்தான் அவரிடம் சொல்லுகிறார்கள். அதைவிட்டால் பூதானத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். சமீபத்தில் கிராமமாகவும் பட்டணமாகவும் இராத ஒரு இரண்டுங்கெட்டான் ஊரில் வினோபா தங்கியபோது சில வர்த்தகர்கள் வினோபாவைச் சந்திக்க வந்தனர். அந்தக் குழுவில் இளைஞர்களும் இருந்தனர்; அனுபவம் பெற்ற வயோதிகர்களும் இருந்தனர்.

அவர்களில் துடியாயிருந்த ஒரு இளைஞர் கேட்டார். "தாங்கள் ஜமீன்தார்களும் நிலம் படைத்தவர்களும் நிலதானம் செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்கள். அம்மாதிரி எங்கள் வர்த்தக சமுதாயமும் ஆற்றவேண்டிய கடமை ஏதாகிலும் உண்டா? எங்களுக்கென்று திட்டம் ஏதாகிலும் வைத்திருக்கிறீர்களா! இன்று எங்கள் தருமம் என்ன!" என்று வினவினார்.

"ஓ! உங்களுக்கும் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். ஆரம்பத்தில் ஒன்றரையாண்டு அடிப்படை பிரச்னையான நிலப் பிரச்னையில் கவனம் செலுத்தி வந்தேன். பின்னர் சம்பத்தி தானத்தைப் பரப்பத் தொடங்கினேன். இதன் அடிப்படைக் கொள்கை என்னவெனில், ஒருவன் தன்னிடம் வைத்துள்ள பொருளைப் பிறருடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்பதே! கையில் நூறு ரூபாய் வைத்துக் கொண்டு அதில் காலணாவோ ! எட்டணாவோ கொடுத்து விடுவது தர்மமாகாது. அதனால் நீங்கள் கொடுப்பதை யோசித்துப் புத்திசாலித்தனமாகக் கொடுங்கள் என்று சொல்லுகிறேன்."

இப்போது வர்த்தகர்கள் கவனமெல்லாம் வினோபா அடிகளிடமே சென்று விட்டது. மேலும் வினோபா கூறினார்:

"நமது சாஸ்திரங்கள் வியாபாரத்தை, விவசாயத்தைப் போலவே தெய்வ பூஜைக்கு ஒப்பாகக் கூறுகின்றன. இன்று வர்த்தகம் அப்படியில்லை. ஏன்!

"ஒருபுறம் மக்கள் ஏழ்மையில் உழன்று நலியும் போது மற்றொரு புறம் வர்த்தகர்கள் கண்டபடி பணத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். இது வல்ல வர்த்தகம் தெய்வ வழிபாட்டுக்கு ஒப்பானது என்று கூறியதின் பொருள். தியாக உணர்ச்சி, சுயநலமற்ற தொண்டு, நேர்மை யாவும் வியாபாரியிடம் இருக்க வேண்டும். இந்த நோக்கத்தோடு தான் பகவத் கீதை அவ்வாறு கூறியது.

"ஒரு காலத்தில் வியாபாரி நாட்டின் காவலனாகவே கருதப்பட்டு வந்தான். ஜனங்கள் தங்கள் ஊரை விட்டு எங்கேயாவது தீர்த்த யாத்திரை போகும் போது தங்கள் விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் வியாபாரியிடம் ஒப்படைத்து விட்டுப் போவார்கள். திரும்பி வந்து பெற்றுக் கொள்வார்கள். திரும்பி வரும் வரையில் அந்த வர்த்தகர் பொருள்களை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வைத்திருந்து கொடுப்பார். அவர் உயர் பண்பைக் கண்டு திரும்பி வந்தவர் மெய்யுருகிப் போவார். அவ்வளவு நம்பிக்கை வர்த்தகர்களிடம் மக்கள் வைத்திருந்தார்கள்.

"இன்று நான் வர்த்தகர்களின் அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்று விரும்புகிறேன். நீங்கள் தேசத்தில் நிகழ்ந்த பல நற்காரியங்களுக்கெல்லாம் உதவியிருக்கிறீர்கள். உங்கள் உள்ளத்தில் அன்பும் அனுதாபமும் இருக்கின்றன. நீங்கள் பண்டிகைகளிலும் க்ஷேத்திராடனங்களிலும் ஏராளமாகச் செலவழிக்கிறீர்கள். அப்போது செய்யப்படும் தானம் சமுதாயத்துக்கு என்னத்தனையாகிலும் பிரயோஜனம் உண்டா! ஆகவே, இனி நீங்கள் செய்யும் உதவியை ஒரு திட்டம் வகுத்துப் புத்திசாலித்தனமாகச் சமுதாயத்துக்குப் பயன்படும் வகையில் செய்யுங்கள். எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதியுங்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் நீங்கள் வீட்டுக்காகச் செய்யும் செலவில் ஒரு பங்கு எனக்கும் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன். சாப்பாட்டுக்கு, துணிமணிகளுக்கு, மருந்துக்கு, பண்டிகைகளுக்கு, குழந்தைகளின் கல்விக்கு என்று செலவழிக்கிறீர்கள் அல்லவா! அதில் எனக்கும் ஒரு பகுதி ஒதுக்குங்கள். என்னையும் உங்கள் குடும்பத்தில் ஒருவனாகக் கருதுங்கள்.

"இன்று நிலமற்ற விவசாயிக்கு நிலம் பிரித்து வழங்கப் படுகிறது. அத்துடன் முடிந்து விட்டதா காரியம்! அவனுக்கு விதை, எருதுகள், ஏர், நீர்ப்பாசன வசதிகள் எல்லாம் செய்து தர வேண்டுமல்லவா! நாம் அவர்களைத் தங்கள் சொந்த பலத்தில் நிற்கச் செய்ய வேண்டுமல்லவா! அதனால் தான் சம்பத்திதானம் ஏற்பட்டது. நீங்கள் சம்பத்தி



வினோபா அடிகள்

தானமாக எனக்கு என்ன கொடுத்தாலும், அவை உங்களிடமேதான் இருக்கும். ஆனால் நான் அதை எப்படிப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறேனோ அப்படிப் பிரித்துக் கொடுக்க வேண்டும். நான் பணத்தைக் கையால் தொட மாட்டேன். ஏனெனில் ஆண்டவன் கட்டளை எப்பொழுது வேண்டுமானாலும் எனக்கு வரலாம். அதை நிறைவேற்றத் தயாராய் நான் இருக்க வேண்டும். சிக்கலில் உங்களை மாட்டி வைக்கவும் நான் விரும்பவில்லை. என்னை உங்கள்குடும்பத்தில் புதிதாகச் சேர்ந்த அங்கத்தினனாகக் கருதி எனக்கு ஒரு பங்கு ஒதுக்கி வையுங்கள். பிறகு எல்லாம் சுலபமாகி விடும். சிரமமிராது. நீங்கள் நால்வரானால் என்னை ஐந்தாவது நபராகக் கருதுங்கள். ஆறுபேரானால் ஏழாவது நபராகக் கருதுங்கள். இப்படிப் பகிர்ந்தளித்து வாழ வேண்டும். இது தான் என் கோரிக்கை."

இதைக் கேட்ட வர்த்தகர்கள் பதில் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். சற்று நேரம் அமைதி நிலவியது. அவர்களை ஏதாவது சந்தேகமிருந்தால் கேட்கும்படி விநோபா தூண்டினார்.

அப்பொழுது வயது முதிர்ந்த வர்த்தகர் ஒருவர் தலையைக் குனிந்தவண்ணம் கேட்டார்: "அரசாங்கத்துக்குத்தான் வருமான வரி செலுத்துகிறோம் என்றால், இப்பொழுது நீங்கள் வேறு ஒரு புதிய வரியைப் போடுகிறீர்களே!" என்றார்.

"உங்கள் பிள்ளையை, வரி என்று கருதினீர்களானால், பின்னர் இதுவும் உங்களுக்கு ஒரு வரிதான். இப்படியெல்லாம் நீங்கள் நினைக்கக்கூடும் என்றுதான் நான் உங்களுக்கு மிகச் சுலபமான வழியைச் சொன்னேன். என்னை உங்கள் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, நீங்கள் சாப்பிடும் உணவில் ஒரு பங்கு எனக்கும் கொடுங்கள் என்றேன். உங்களிடம் அதிகமாக இருந்தால் அதிகமாகக் கொடுங்கள். குறைவாக இருந்தால் குறைவாகக் கொடுங்கள். உங்கள் பெற்றோரும் பிள்ளைகளுமே வரிச் சுமையானால், பின் விநோபாகூட ஒரு வரிதான்! நான் உங்கள் கஷ்டத்திலும் சுகத்திலும் பரிபூரணமாகப் பங்கு பெறுபவன். என்னை வேற்று மனிதனாகக் கருதாமல் உங்களில் ஒருவனாகவே கருத வேண்டும்."

இதைக் கேட்ட ஒரு சாமர்த்தியசாலியான வர்த்தகர், "எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் எங்கள் குடும்பத்துக்காக வேலை செய்கிறார்; கஷ்டப்படுகிறார். ஆனால் இந்தப் புது நபரோ வேலை எங்கே செய்கிறார்! அனுபோக பாத்தியதை மட்டும்தானே கேட்கிறார்!" என்றார்.

இதைக் கேட்ட மற்றவர்கள் முகம் சற்றுப் பிரகாசமடைந்தது.

"இது மிகவும் சரியான கேள்விதான்" என்று கூறிக் கொண்டே விநோபா சொன்னார்: "நீங்கள் எழுப்பியுள்ள பிரச்னை மிகவும் பொருத்தமானதுதான். ஆனால் சற்று யோசித்தீர்களானால் பொதுவாக நீங்கள் உங்கள் குடும்பத்தில் சேரும் புது நபருக்காக அதிகமாகச் செலவழிக்க நேரும். அவர் பொருட்டு அதிக கஷ்டமடையவே நேரும். ஆனால் எனக்கு நீங்கள் உங்கள் குடும்பத்தில் ஒரு ஸ்தானத்தை அளித்தீர்களானால் அது உங்கள் கௌரவத்தை அதிகரிக்கச் செய்யாதா! அதனால் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த எந்த அங்கத்தினரையும் விட விநோபா அதிக உபயோகமாகவே இருப்பார்!"

மீண்டும் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் குலைத்தது நடுத்தர வயதுள்ள ஒருவரின் குரல். அவர், "இப்பொழுதெல்லாம் வியாபாரிகள் ரொம்பவும் நொடித்துப் போய் விட்டார்கள்......" என்றார்.

"விவசாயிகளின் நிலை அதைவிட மோசம். தர்மம் செழிக்கும் போது அது சமுதாயம் முழுவதையுமே செழிக்கச் செய்கிறது. ஆகவே, ஒன்று நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தானம் கொடுப்பவர்கள் சந்தோஷமாகத் தரவேண்டும். கொடுக்காதவர்களைப் பழித்துப் பேசக் கூடாது. இன்றைக்கு ஒருவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று தோன்றவில்லையென்றால், அவனைச் சும்மா விட்டு விடுங்கள். அவனிடம் வெறுப்போ கசப்போ காட்டாதீர்கள். அன்பு ஒன்றே காண்பியுங்கள். அது ஒன்றுதான் என்றும் நிலைப்பது. ஒவ்வொருவர் வீட்டிலும் எனக்குச் சேர வேண்டிய பணம் இருக்கிறது. அதற்குக் கணக்கு வைக்க வேண்டும். அதை எப்படிச் செலவழிக்க வேண்டும் என்று நான் சொல்வேன். வருஷக் கடைசியில் நீங்கள் கணக்கு அனுப்ப வேண்டும். இது தெய்வத்துக்குப் பிரியமான காரியமாகும்."

"முதலில் ஒருவர் சம்பத்தி தான பத்திரத்தைப் பூர்த்தி செய்து கொடுத்து விடுகிறார். பிறகு அவர் அந்த வாக்குறுதியைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் என்ன செய்வீர்கள்!" என்று ஒருவர் கேட்டார்.

"அவரைக் கடவுள் பார்த்துக் கொள்வார். நான் அவருடைய வாக்குமூலப் பத்திரத்தைக் கிழித்தெறிந்து விட்டு நிம்மதியாக இருப்பேன். ஆம், இந்த வாக்குமூலப் பத்திரம் உண்மையிலேயே நீங்களும் கடவுளும் செய்து கொள்ளும் ஒப்பந்தம்தானே!"

இந்தத் தெளிவுரை அவர்கள் சிந்தனையைக் கிளறி விட்டது. அவர்களில் ஒரு இளைஞன் கேட்டான்:

"உங்களை எங்கள் குடும்பத்தில் ஒருவராகக் கருதச் சொல்லுகிறீர்கள். அதாவது நாங்கள் ஐந்து பேராக இருந்தால் உங்களை ஆறாவதாகக் கருதச் சொல்லுகிறீர்கள். ஆனால் சில ஆண்டுகள் கழித்து நாங்கள் எட்டுப் பேராகி விட்டால் அப்பொழுதும் நீங்கள் பழையபடியே ஆறில் ஒரு பங்கு கேட்பீர்களா!"

"நிச்சயமாகக் கேட்க மாட்டேன். அப்பொழுது நான் உங்கள் குடும்பத்தில் ஒன்பதாவது நபராகி ஒன்பதில் ஒரு பங்கு தான் கேட்பேன்" என்றார்.

இதைக் கேட்டு அவர்களுக்குச் சந்தோஷம் கலந்த வியப்பு ஏற்பட்டது. அவர்கள் மனத்திலிருந்த பாரம் குறைந்தாற் போலிருந்தது. ஜனத் தொகையைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டனர். "இன்று நம் நாட்டிலுள்ள பெரும் ஜனத்தொகையே இந்த வறுமை நிலைக்குக் காரணம் அல்லவா!" என்றார் ஒருவர்.

"நான் அப்படி நினைக்கவில்லை. நமது வறுமைக்குக் காரணம், நமது சோம்பலும் மன

உறுதியின்மையுந்தான் என்று நினைக்கிறேன்'' என்றார் வினோபாஜி.

இதைத் தொடர்ந்தாற்போல் சுவாரஸ்யமான கேள்வி மற்றொன்று வந்தது: "நீங்கள் வீட்டுச் செலவில் ஒரு பங்கு கேட்கிறீர்கள். வருமானத்தில் பங்கு கேட்பதில்லை. எத்தனையோ பேருக்கு ஏராளமான வருமானம் கிடைக்கிறது. ஆனால் அவர்கள் வீட்டுச் செலவோ மிகக் குறைவாக இருக்கிறதே! அவர்களைச் சம்பத்தி தானம் பண்ணும்படி கேட்கக் கூடாதா! ஏழைகளை ஏன் கேட்கிறீர்கள் !'' என்றார்.

"வாஸ்தவம்; ஆனால் அந்த வருமானம் எல்லாம் எங்கே யிருக்கிறது! பாங்கிகளில் தானே இருக்கிறது!''

" ஆமாம்!''

"பின், அது யாருக்காகவோ எதற்கோ எங்கோ உபயோகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றுதானே பொருள். நமது வேலை என்ன! ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று அவர்களை இந்த மகத்தான வேள்வியில் பங்கு கொள்ளச் செய்வதே யல்லவா!''

இந்தப் பேச்சு ஒரு மாதிரி முடியும் கட்டத்துக்கு வந்தது. அப்போது கடைசியாக ஒருவர் ஒரு சந்தேகம் கேட்டார்.

"நிலம் படைத்தவர்களிடம் நிலத்தையும் சம்பத்தி தானத்தையும் ஏன் கேட்கிறீர்கள்!''

"கேட்டால் என்ன! அதிகமாக நடும் செய்வதனால் நரகத்துக்குப் போய் விடுவோம் என்பதில்லையே!'' என்றார் வினோபா.

இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். வினோபா தொடர்ந்து கூறினார்: "நில உரிமையைத் துறப்பது தான் இந்த இயக்கத்தின் அடிப்படைத் தத்துவம். ஏனெனில் உற்பத்திக்கு முக்கியமான சாதனம் நிலம். அதனால் நிலம் படைத்தவருக்கு இந்த இரண்டு தானங்களும் செய்யும் அரிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதே போல் உங்களுக்கும் இரண்டு தருமங்கள் சொல்கிறேன். சம்பத்தி தானத்தைத் தவிர உங்கள் வர்த்தகத்தில் யோக்யமாக நடந்து கொள்வது பெரிய தருமமாகும். இதை நீங்கள் கடுமையாக அனுசரிக்க வேண்டும். ஆனால் முதலில் உங்கள் வீட்டுக்குள் நான் கொஞ்சம் இடம் பிடித்துக் கொள்ளுகிறேன். பிறகு மற்றவையெல்லாம் தானாக நடந்து விடும்'' என்றார்.

"அப்படியானால் நீங்கள் குடிகாரனிடமிருந்துகூடச் சம்பத்திதானம் பெறத்தயாரா!''

"நீங்கள் கேட்டது ரொம்ப சரி. நான் அவனைக் குடிப் பழக்கத்தைவிடும்படி கேட்டுக் கொள்வேன். அதற்கு முன் என்னுடைய இந்தப் புதிய தருமத்தை அங்கீகரிக்கும்படி வற்புறுத்துவேன். அவன் அங்கீகாரம் பெறுவேன். அவன் என்னை ஏமாற்றிவிட முடியாது. அதை நீங்கள் நிச்சயம் நம்பலாம். என் தாடியே அவனைப் பயமுறுத்தி விடும்.''

இதைக் கேட்டு அவர்கள் எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

கடைசியாக வினோபா அடிகள், "நான் கூறிய விஷயங்களை நீங்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். உங்கள் மனச்சான்றுக்கு ஏற்ப நடக்கக் கடவுள் தைரியம் அருள்வாராக'' என்று ஆசி கூறி முடித்தார்.



எத்தனைதான் சமாதானம்செய்துகொண்டு, மறைக்க முயன்றாலும், சரோஜாவின் உள்ளத்திலிருந்து பீறிட்டுக் கொண்டு வந்த அழுகை, அவளையும் மீறி வெளி வரத்தான் செய்தது. தன்னை ஒவ்வொரு கோணத்திலும் கசித்துக் கொண்டிருக்கும், தன் மன்னியின் பேச்சு அவள் மனத்தை வாள் கொண்டு வெட்டியது. ஆனால் அதற்காக மன்னியின் செய்கையைப் பிறரிடம் கூறி அவளுக்குக் கஷ்டத்தை விளைவிக்கவும் சரோஜாவின் மனம் ஒப்பவில்லை. தன் தலைவிதி அப்படியிருக்கும்பொழுது பிறரைக் குறை கூறி என்ன பயன் என்றே அவள் எண்ணினாள்.

வழக்கம் போல் அன்று சாப்பாட்டுக்குப் பிறகு தன் அறைக்குச் சென்று சரோஜா எதையோ தைத்துக் கொண்டிருந்தாள். தையல் மிஷினிலிருந்து எழும்பிய கட கட வென்னும் ஓசை பக்கத்து அறையில் படுத்திருந்த சுசிலாவின் கோபத்தைக் கிளறி விட்டது. தன் மன்னி தலைவலியால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறாள் என்பதைச் சரோஜா எவ்விதம் அறிவாள்? "இப்பொழுது தைக்க வேண்டாம்" என்று ஒரு வார்த்தை கூறியிருந்தால் அவள் மிஷினை மூடி வைத்திருக்கமாட்டாளா? ஆனால், அந்த அற்பக் குற்றத்துக்காக, அன்று அவள் தன் மன்னியிடம் வாங்கிய வசவு! அப்பப்பா! சொல்லவும் வேண்டுமா?

அன்று சாயங்காலமே பஜ்ஜிக்காக மாக் கரைத்துக் கொண்டிருந்த சரோஜாவுக்கு மீண்டும், ஒரு முறை மண்டகப்படி கிடைத்தது; அத்தனை நேரமும் அவளது பின்னலைப் பிடித்திழுத்துப் பின்புறம் நின்று விளையாடிக் கொண்டிருந்த முரளி ஓடி, கடுகிற அடுப்பில் விரலை வைத்து விட்டு வீடே அதிரும்படி அலறி அழுதது தான் அதற்குக் காரணம்.

சரோஜா கையைத் துடைத்துக் கொண்டு குழந்தையைத் தூக்குவதற்குள் சுசீலா ஓடி வந்து தூக்கிக் கொண்டு விட்டாள். அப்பொழுது அவள் முகத்தில் ஆத்திரம் அனலாக வீசிக் கொண்டிருந்ததைப் பார்க்க வேண்டுமே!

"ஐந்து நிமிஷம் குழந்தையை வைத்துக் கொண்டு அடுப்புக் காரியம் செய்யத் துப்பில்லாதவர்களுக்கு, ஆசையாவது இல்லாமல் இருக்கணும். வயசு இருபதாகிறது. முழுசாக வாழ்ந்தால் நாலு பிள்ளைகள் பிறந்திருக்கும்!" என்று ஆரம்பித்த சுசிலா வார்த்தைகளைப் பொரிந்து தள்ளினாள். அவள் இடுப்பிலிருந்த முரளி நிறுத்தாமல் தாயாருக்குச் சுருதி போட்டுக் கொண்டிருந்தான். பாவம், வலியின் வேதனை அவனுக்கு! ஆனால் அதைவிடப் பன்மடங்கு நன்றாகப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளை அவன் தாயார் சரோஜாவின் உள்ளத்தில் செருகிக் கொண்டிருந்தாள்! அக்கொடிய சொல்லம்புகளின் வேதனை தாள முடியாமல் சரோஜாவின் உள்ளம் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

"மன்னி! நான் என்ன, வேண்டுமென்றா குழந்தையை அடுப்பண்டை விட்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்? பிள்ளை குட்டி பெறாதவளானாலும், ஒரு குழந்தையிடம் அன்பு காட்டும் இதயம் கூடவா இல்லாமல் போய்விடும்? எல்லாம் தெரிந்த நீங்களே இப்படிப் பேசினால்......"

சோகம் அவளது சொற்களை மென்று விழுங்கி விட்டது!

தன்னையும் மீறி முகத்தைப் புதைத்துக் கொண்டு உள்ளத்துப் பாரம் குறையும் மட்டும் விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள். அந்த அழுகை சுசிலாவின் ஆத்திரத்தை மேலும் தட்டி எழுப்பி விட்டது.

"இப்பொழுது உன்னை யார் என்ன சொல்லி விட்டார்கள்? எதற்காக இப்படி அழுது அமர்க்களப்படுத்துகிறாய்? அது தான், ஒன்றுக்குப் பத்து பதில் சொல்லி

யாகி விட்டதே! இன்னும் அழுகை வேறு என்ன வேண்டிக் கிடக்கிறது. அழுகை? சும்மாவா ஆண்டவன் ஆட்டுக்கு வால் அளந்து வைத்திருக்கிறான். வாழாவெட்டியாக இருக்கும்போதே உனக்கு இத்தனை வாயிருந்தால், நாலு பேரைப் போலிருந்து விட்டால், என்னதான் சொல்வாயோ? அப்பப்பா உன்னை,............'' என்று இன்னும் என்ன என்னவோ சொல்ல வாயெடுத்த சுசீலா மறுகணம் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

எப்பொழுது அவள் கணவர் அங்கு வந்தார்? எத்தனை நேரமாக அவர் அங்கே நின்று கொண்டிருக்கிறார்? விவரம் தெரியாத அவள் உள்ளத்தை விவரிக்க இயலாத ஒருவித பயம் பிடித்துக் கொண்டது; குற்றமுள்ள நெஞ்சு படபடத்தது.

அதற்குமேல் அந்த இடத்தில் ஒரு நிமிஷம்கூட நிற்க மனம் பொறுக்காத ராகவன் 'விர்'ரென்று தன் அறைக்குச் சென்று விட்டான்.

சாய்வு நாற்காலியில் கிடந்த ராகவனின் உள்ளத்தில் ஏற்பட்ட கோர இரைச்சல் இன்னும் அடங்கியபாடில்லை. சுசீலா அவன் தங்கையிடம் எப்படி நடந்து கொள்கிறாள் என்பதை அவன் அன்று பூரணமாக அறிந்து கொண்டு விட்டான். அன்பு காட்டி ஆறுதல் கூறவேண்டிய தன் மனைவியே, சரோஜாவை வாழாவெட்டி என்று இடித்துக் காட்டுவதைக் காதால் கேட்ட அவனுக்கு மனத்தை என்னவோ செய்தது பாவம், சுசீலாவின் சுடு சொற்கள் அப்பேதைப் பெண்ணின் நைந்த உள்ளத்தை என்ன பாடு படுத்தியிருக்குமோ? இதை எண்ணிப் பார்த்தபோது அவனது கண்கள் தாமாகவே நீரைச் சொரிந்தன.

பேயறைந்தவன் போல் தளர்ந்து போய் அந்தச் சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடந்தான் ராகவன். அவனது மனக்கண் முன்பு, தன் மனிதர்களாலேயே, தாக்கிப் பேசப்படும் அவனது அன்புத் தங்கை சரோஜா சோகமே உருவாக நின்று கொண்டிருந்தாள். களையான அவளது அழகிய முகத்தில், இத்தனை கவலைகளும், கஷ்டங்களும் குடிகொண்டனவா, அவன் அவளை அத்தனை அரும்பாடுபட்டு மணம் செய்து வைத்தான்! துன்பத்தின் சாயை படாமல், தன் தங்கை, இன்பமாக வாழ வேண்டுமென்று அவன் எவ்வளவோ ஆராய்ந்து அலசிப் பார்த்து அவளுக்குக் கணவனைத் தேர்ந்தெடுத்தானே! எல்லாம் இப்படிப் பாலைவனத்தில் பொழிந்த பால் நிலவாக வேண்டுமா?

தன் கல்லூரித் தோழன் சந்திரசேகரனின் உயர்ந்த பண்பும், நிறைந்த குணமும்





ராகவன் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. சென்னையில் பிரபலமான கம்பெனியொன்றில் கை நிறையச் சம்பாதித்துக் கொண்டிருந்த அவனை விடத் தன் தங்கைக்கு ஏற்ற வரன் வேறு எங்கும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

தன் பிள்ளையின் விருப்பத்துக்குத் தாயாரிணங்கினாள். தன் அண்ணாவின் அழகே உருவான ஆப்த நண்பனை மணந்து கொள்ளச் சரோஜாவும் பூரண சம்மதம் தெரிவித்தாள். சந்திரசேகரன் ராகவனுக்கு ஒரு தங்கை இருக்கிறாள் என்பதைத் தெரிந்து வைத்திருந்தானே தவிர அவள் இப்படியொரு அழகுப் பொக்கிஷமாக இருப்பாள் என்பதை எதிர்பார்க்கவில்லை. எனவே, நல்லதொரு சுபவேளையில் சந்திரசேகரனும் சரோஜாவும் கணவனும் மனைவியுமாகக் காட்சியளித்தனர்.

சரோஜாவுக்கு விவாகமான ஆறு மாதத்துக் கெல்லாம் ராகவனுக்கும், பம்பாய் போலீஸ் அதிகாரி பத்மநாபனின் பெண் சுசீலாவுக்கும் விவாகம் நடந்தது. அத்துடன் ராகவனுக்குப் பம்பாயிலேயே ஒரு உத்தியோகமும் கிடைத்தது.

மணமான புதிதில், கணவனோடு புதுக் குடித்தனம் ஆரம்பித்த சரோஜா ஒரு வருஷம் கழித்துப் பிறந்தகம் வந்து சேர்ந்தாள். சந்திரசேகரன் தான் அவளைப் பிறந்தகம் கொண்டு விட்டுச் சென்றான். ஆனால் அவன் அப்புறம் திரும்பி வந்து அவளை அழைத்துச் செல்லும் பேச்சையே எடுக்கவில்லை.

'மூன்று மாதங்களாகியும் மாப்பிள்ளை சரோஜாவை அழைத்துப் போகவில்லை. அதனால் சரோஜா என்னுடனேயேதான் இருக்கிறாள்' என்கிற செய்தியைத் தாங்கித் தாயாரிடமிருந்து கடிதம் வரவே, ராகவனின் உள்ளத்தில் எல்லையற்ற துயரமும், ஏமாற்றமும் ஏற்பட்டன.

சந்திரசேகரனை நேரில் கண்டு காரணம் கேட்பது என்று தீர்மானித்த ராகவன் லீவு எடுத்துக் கொண்டு சென்னை வந்தான்.

சந்திரசேகரன் அவன் எதிர்பார்த்தபடி அந்தக் கம்பெனியில் இல்லை. உற்றார் பெற்றோர் இல்லாத அவனை ராகவன் எங்கேயென்று சென்று தேடுவான்? விவரிக்க இயலாத வேதனையுடன் வீடுதிரும்பினான். உயிருக்குயிராயிருந்த தன் நண்பன் இப்படித் தன் சகோதரியை ஒரேயடியாக மோசம் செய்வான் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை.

தாயாருக்கும், சோகத்திலே புரளும் தன் சகோதரிக்கும் வேண்டிய ஆறுதல்களைக் கூறிவிட்டு உடைந்த உள்ளத்துடன் ராகவன் மீண்டும் பம்பாயை அடைந்தான். ஆனால் அந்த இடைக்காலம் முழுவதும் அவன் சிந்தனையனைத்தும், சந்திரசேகரனைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியிலேயே லயித்திருந்தது.

இரண்டு வருடங்களுக்குப் பின்னர், சந்திரசேகரன் சென்னையில் இருப்பதாகச் செய்தி கிடைத்தது. ராகவன் தன் மனைவி குழந்தையுடன் உடனேயே பம்பாயை விட்டுத் தன் சொந்த ஊர் வந்து சேர்ந்தான். ஆனால் அவன் ஊரில் தங்கிய அந்தச் சொற்ப நாட்களுக்குள் சுசீலா தன் தங்கையிடம் நடந்து கொள்ளும் விதம் ராகவனின் மனத்தைப் பெரிதும் புண்படுத்தியது. ஊர், உலகம் தூற்றுவது போதாதென்று, எல்லாவற்றுக்கும் மேல் தன் மனைவியே சரோஜாவை வாழாவெட்டியென்று வாய் கூசாமல் கூறக் கேட்டதும் அவனது அடங்கிய ஆத்திரமெல்லாம் ஒன்று திரண்டு, இத்தனைக்கும் ஆதிகாரணமான சந்திரசேகரன் பக்கம் திரும்பியது. ஆகவே இன்றே தன் தங்கையின் நல்வாழ்வைப் பற்றி இரண்டில் ஒரு முடிவுக்கு வருவதென்று அவனது உள்ளம் ஒரு நிலையில் வந்து நின்றது.

தனக்கு வேண்டிய சாமான்களுடன் அன்றிரவு வண்டிக்கே ராகவன் சென்னை புறப்பட்டான். நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்கும் நண்பனுக்கு நல்வரவு கூறி மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றான் சந்திரசேகரன். ஆனால், அப்போதிருந்த மன நிலைமையில் ராகவனுக்கு அவையொன்றும் வேண்டியிருக்கவில்லை. ஒரு பாவமும் அறியாத தன் தங்கையைக் கொண்டு பிறந்தகம் தள்ளிவிட்டு இத்தனை காலம் தலைமறைவாக வாழ்க்கை நடத்திய அவன் முகத்தைப் பார்க்கக் கூட ராகவனுக்குப் பரம வெறுப்பாயிருந்தது.

"ஏன், ராகவன் உட்காராமல் நின்றுகொண்டேயிருக்கிறாய்?" என்கிற சந்திரசேகரனின் குரல் அவனைச் சுய உணர்வுப் படுத்தியது. ஆனால் அவனுடைய உபசரிப்பு ஆத்திரத்தையே கிளப்பி விட்டது.





புதுமை
பெறுங்கள்!

மிருதுத்
தன்மை பெறுங்கள்!



நீடித்த
இனிமையுடன் இருங்கள்!

புதுமை பெறுங்கள்! முதலில் ஸ்நானம் செய்ததும் சார்மிஸ் டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவுங்கள். எத்தகைய புதுமை உணர்ச்சி அது அளிக்கும் தெரியுமா?

மிருதுத்தன்மை பெறுங்கள்! உடலில் சுரணையுள்ள இடங்களிலும் பவுடரை நன்றாக தடவிவிடுங்கள். அது பட்டைப்போல படர்ந்து எரிச்சல் வராமல் பாதுகாக்கிறது.

நீடித்த இனிமையுடன் இருங்கள்! சார்மிஸ் டால்கம் பவுடரை தாராளமாக அடிக்கடி உபயோகியுங்கள். அது செலவில்லாமல் பெருவாழ்வு அளிக்கும் சாதனம். அழகிற்கும் காதல் கவர்ச்சிக்கும் இதுவே சிறந்த ரகசியம்.



சார்மிஸ்

டால்கம் பவுடர்

பரவசப்படுத்தும் மனோஹரமான
நறுமண முள்ளது.

உங்கள் நரம்புகள்!

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும் — அதுவும் ஓய்வில்லாத உழைப்பும் ஒழியாத கவலையும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

அஸ்வான்

நீண்ட காலமாய் மனோ பலமும் தேக திடனும் வியர்த்தமாகி யிருந்தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக் கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எப்போதும் கையிருப்பாக வைத்திருங்கள்



சிறியோர்

•

முதியோர்

•

நோயாளிகள்

யாவருக்கும்

உகந்தது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

•

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்

ஆர். எல். கேனடர் & கோ.
59, பந்தர் தெரு - சென்னை

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்

சத்ய நாராயண பார்மஸி
குமர் தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்

"சந்திரசேகரன்! நான் இங்கு உட்காருவதற்காக வரவில்லை. என் தங்கையின் வாழ்வுக்கு என்ன பதில் சொல்லுகிறாய்?"

ராகவனது வார்த்தைகளிலே கடுமையும், கண்டிப்பும் கலந்து தொனித்தன. ஆனால் அதை லட்சியம் செய்யாமல் சந்திரசேகரன் நிதானமாகவே பதிலளித்தான். "ராகவன்! உன் தங்கையை மீண்டும் அழைத்துக் கொள்வதற்காக நான் கொண்டு போய் விடவில்லை. இனிமேல் அவள் என்னுடன் சேர்ந்து வாழ முடியாது. நான் அவளை மறந்து எவ்வளவோ நாட்களாகி விட்டன" என்றான்.

ராகவனது உடல் தாங்க முடியாத கோபத்தினாலும், ஆத்திரத்தினாலும் துடித்தது. 'இனிமேல் அவள் என்னுடன் சேர்ந்து வாழ முடியாது' என்கிற வார்த்தைகள், ஆயிரமாயிரம் தடவைகள் ராகவனது காதுகளில் பேரிடிபோல் முழங்கின.

"சந்திரசேகரன்! இதுதான் உன்னுடைய இறுதியான முடிவா? இதற்கு என்னுடைய தங்கை செய்த குற்றம் என்ன?" என்று கேட்ட ராகவனது குரலிலே உஷ்ணம் உச்ச நிலையை அடைந்திருந்தது.

"அதைப் பற்றி யெல்லாம் உனக்கு நான் விளக்கத் தயாராக இல்லை. சரோஜாவை எனக்குப் பிடிக்கவில்லை" என்று சந்திரசேகரன் கூறி முடிக்கும் முன்னர், பைத்தியம் பிடித்தவனைப் போல் அருகிலிருந்த நாற்காலியை எடுத்துச் சந்திரசேகரனை நோக்கி வீசினான். ஒருவித ஆவேச வெறி ராகவனை அந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. மறுகணம் சந்திரசேகரனது உடல் ரத்த வெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்தது.

மொட்டை மரமாக நின்றாலும், என்றாவது ஒருநாள் பூத்துக் காய்க்கும் என்கிற ஒரு மனச்சாந்தியும், நம்பிக்கையுமாவது இருக்குமே! ராகவன் இன்று அந்த மரத்தையே அல்லவா வெட்டி வீழ்த்தி விட்டான்! அவன் தன்னுடைய தங்கைக்கு எத்தனை பெரிய கொடுமை இழைத்து விட்டான்! அவள் வாழ்வை மலர வைக்க வந்தவன், அவள் வாழ்வையே அல்லவா மாய்த்து விட்டான்! — இதை நினைக்கையில் அவன் தன்னையும் மீறித் தாங்க முடியாத துயரத்தில் "சரோஜா! சரோஜா!" என்று பலமாக அலறி விட்டான்.

"அண்ணா! அண்ணா!" என்று தட்டி எழுப்பிய சரோஜா தன் கையிலிருந்த டிபன் தட்டையும், காப்பியையும் அருகிலிருந்த மேஜைமீது வைத்து விட்டு ராகவன் பக்கம் திரும்பினாள். ஒரேயடியாக வெளிறிப் போயிருந்த அவனது முகத்தில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாக அரும்பியிருந்தன.

"என்ன அண்ணா, இந்தக் கொஞ்ச நாழிகைக்குள்ளே பகலிலே அப்படி ஒரு குட்டித் தூக்கம்? அதிலே கனவு வேறா? எதற்காக அண்ணா என் பெயரைச் சொல்லி இப்படி ஒரேயடியாகக் கத்தினாய்?"

அவள் சரமாரியான கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போனாள். ராகவன் வாயைத் திறந்து எவ்வித பதிலும் கூறவில்லை. அத்தனை நேரம் அவன் அநுபவித்த கோரக் கனவின் குலைநடுக்கம் அவன் மனத்தை விட்டு மறைந்திருந்தால்தானே?

"ஏன் அண்ணா இப்படி என்னையே பார்க்கிறாய்? சீக்கிரம் டிபனைச் சாப்பிடு. காப்பி ஆறிப் போகிறது!" என்று அவள் அன்புடன் கடிந்து கொண்டாள்.

"அதிருக்கட்டும். போய் மன்னியை இங்கே கொஞ்சம் வரச் சொல்லு."

"மன்னி இப்போது வரமாட்டாள். நான் தலைவாரிப் பின்னித்தான் அவளை அனுப்புவேன்" என்று சொன்ன சரோஜா அப்புறம் அங்கே நிற்கவில்லை.

ராகவன் ஒருகணம் தன் மனத்துக்குள்ளேயே சிந்தித்துக் கொண்டான். தன்னைத் தூற்றிய மன்னியிடம் கூடச் சரோஜா காட்டும் அன்பை நினைத்தபொழுது அவன் நெஞ்சம் நெகிழ்ந்தது.

மறுநாள் பொழுது விடிந்தது. அடுப்பிலே வேலையில் முனைந்திருந்த சரோஜா தபால்காரரின் குரலைக் கேட்டு வாசலுக்கு ஓடி வந்தாள். தபால்காரர் கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்.

"அன்புள்ள சரோஜா!

நீண்ட காலத்துக்குப் பின் வரும் என் இந்தக் கடிதம் கிடைக்கும் பொழுது உன் உள்ளம் எந்த விதமான மனோபாவத்தில் இருக்குமோ, நான் அறியேன். ஆயினும் என்னுடன் வாழ்ந்த அந்தச் சிறிது காலத்தில் உன்னிடம் நான் கண்ட அந்தப் பெருங் குணங்கள், உன்னை விட்டு ஒரு நாளும் விலகியிருக்க முடியாது என்கிற நம்பிக்கையில் நான் இந்தக்கடிதத்தைஉனக்கு எழுதுகிறேன்.

உடலும் உயிருமாக ஒன்றுபட்டு இருந்த உன்னை நீண்ட காலம் எவ்விதக் காரணமும் கூறாமல் பிரிந்து வைத்தேன். காரணம், 'கிடைத்தற்கரிய அன்புப் பொக்கிஷமாகிய உன்னை இழந்துவிடக் கூடாது' என்பது தான். அதை நான் விவரமாகச் சொல்கிறேன்.

நமக்கு மணமான புதிதில் எனக்கு ஒருவித பயங்கர இருமல் வந்தது உனக்கு நினைவிருக்கலாம். அதை நீ உஷ்ணத்தின் மேல் ஏற்பட்டது என்று கூறி எத்தனையோ கைப்பக்குவமான மருந்துகளின் மூலம் விரட்டியடித்து விட்டாய். ஆனால் அந்த இருமல் எனக்கு மீண்டும் வந்தது. காரியாலய நண்பர்கள் உடனே நல்ல டாக்டரிடம் காண்பிக்கும்படி வற்புறுத்தினார்கள். டாக்டர் என்ன சொன்னார், தெரியுமா? "கொடிய காச நோய் ஆரம்பமாகி இரண்டு வருஷமாகிறது!" என்றார். நோய் குணமாகிற வரையில் தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபடக் கூடாது என்றும் நிபந்தனை விதித்தார். டாக்டரின் வார்த்தைகளை நான் அலட்சியப்படுத்த விரும்பவில்லை.

எனக்குள்ள வியாதியைப் பற்றி உன்னிடம் நான் உண்மையைக் கூறாததற்குக் காரணம், நான் கூறிவிட்டால் நீ என்னை விட்டு எந்த நிலையிலும் பிரிந்து வாழ ஒப்புக் கொள்ள மாட்டாய் என்பதுதான்.

ஆகவே, நான் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மதனப்பள்ளிக்குச் சென்று விட்டேன். வாழ்வில் வெற்றி பெற்றால் மீண்டும் உன்னைச் சந்திப்பது. இல்லையேல் அந்த மண்ணிலேயே மறைந்து விடுவது என்று முடிவு கட்டிக் கொண்டு கிளம்பி விட்டேன். ஆனால் சரோஜா, உன்னைச் சிறிது காலம் பிரிவின் வேதனைக்கு இலக்காக்கினேன் என்றாலும், என் பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்த்து விட்டான்.

உன்னுடன் அதே அன்பு வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்கிற எனது அசையாத நம்பிக்கை வீண் போக வில்லை. கவிழ்ந்த கார்முகில் கலைந்து விட்டது. கருக விருந்த காதல் வாழ்வு மலர்ந்து விட்டது. சரோஜா, நான் இப்போது பூரண குணம் அடைந்து விட்டதாக டாக்டர் கூறி விட்டார். நாளை மெயிலில் அவ்விடம் வந்து உன்னைச் சந்திக்கிறேன். உன் அன்பை மறவாத

சந்திரசேகரன்."

கடிதத்தைப் படித்த சரோஜா துள்ளிக் குதித்தாள். இழந்த திருஷ்டியை மீண்டும் பெற்றது போன்ற ஆனந்த உணர்ச்சி அவள் உள்ளத்தில்பாவோடியது. அவளது உள்ளும் புறமும் கணவனது வருகையை எண்ணிப் பூரித்து நின்றன.

"மன்னி!" என்று அழைத்தவண்ணம் சுசீலாவின் கையில் அந்தக் கடிதத்தை கொடுத்து விட்டு ஒரே ஓட்டமாகப் பூஜை அறையை அடைந்தாள் சரோஜா. ஆறாக வழிந்தோடிக் கொண்டிருக்கும் அந்தப் பேதைப் பெண்ணின் ஆனந்தக் கண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது, அவள் வணங்கும் தெய்வம்.

டி.கே.சி.யின் கடிதங்கள்

மீனம்பாக்கம், சென்னை.
14 — 1 — 41

அறிஞர்கள் எல்லாரும் இலக்கணத்தைப் படித்திருக்கிறார்கள், மனப் பாடம் பண்ணியிருக்கிறார்கள். "வழக்கு" என்று ஒரு விஷயம் இலக்கணத்தில் இருக்கத்தானே செய்கிறது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற சூத்திரத்தையும் படித்துக் கொண்டாடியிருக்கிறார்கள். இருந்தாலும் அவைகளுக்கு மாறாய் இருக்கிற வகைகளைத்தானே பாராட்டுகிறார்கள். வழக்கு என்றால் செத்துப் போனவன் ஒரு காலத்தில் பேசி வந்ததுதானா? உயிரோடிருக்கிறவன் பேசினால் வழக்கல்ல என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? கால் தள்ளாடுகிறது, கொஞ்சம் கை கொடுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக "காறள்ளாட்டின் கை கோடலே விழைவர்ம்" என்று அறிஞர் சொன்னாரானால் அவர் பாடு அதோ கதிதானே?

அறிஞர்கள் தான், இலக்கணத்தில் சொல்லப்படுகிற இலக்கணம் அதாவது 'வழக்கு' — வேண்டாம் என்கிறார்கள். நாமோ வழக்குத்தான் வேண்டும். அதாவது இலக்கணந்தான் வேண்டும் என்கிறோம்.

கம்பராமாயணச் செய்யுள்களில் அயோத்தியா காண்டத்தில் விட்டது விடாதது எல்லாவற்றையும் கணக்குப் பார்த்தால் அதில் 627 செய்யுள்களை நீக்க வேண்டும்.

என்னுடைய கிராமத்தில் (தென்காசியில்) நல்ல நீர்வளமுள்ள புஞ்சை ஒன்று; ஒரு அடிக்குக் கீழ் தண்ணீர். அதில் பூர்வமாக வளர்ந்த பனைகள் காடாய் நின்றன. பிறகு பனைகளுக்கிடையில் தென்னங் கன்றுகளை வைத்தார்கள், சரியான முறையிலேயே முப்பது அடிக்கு ஒன்றாக வைத்தார்கள். தென்னைகள் உண்டாய் விட்டன. தென்னை வைத்து இருபது வருஷம் ஆய் விட்டது. காய்ப்பே இல்லை. நான் முதல் முதலாகப் போய்ப் பார்த்த போது இப்படி இருந்தது. சரி. இதற்குப் பனைகளையெல்லாம் வெட்ட வேண்டியது என்றேன். கணக்குப் பிள்ளை, காவற்காரர் எல்லாரும் ஆதிகாலத்துப் பனையை வெட்டலாமா என்று ஆக்ஷேபித்தார்கள். அவைகள் தென்னைகளைக் காய்க்கவிடாமல் செய்து கொண்டு நிற்கலாமா என்று கேட்டு, உடனே பனை வெட்டுக்காரனுக்கு அச்சாரம் கொடுத்து விட்டேன். ஒரு வாரத்தில் பனைகளை அப்புறப்படுத்தி விட்டார்கள். அது முதல் தென்னை வீரியமாய் வளர ஆரம்பித்தன. சுற்று வட்டகையில் அவ்வளவு வளமான தோப்பும் இல்லை; காய்ப்பும் இல்லைதான்.

களையாய் இருக்கிறவைகளைக் களைத் தெரியாமல் என்ன செய்கிறது. 627 'களை' இருந்தது. களைத் தெரிந்தாய் விட்டது என்று சந்தோஷப்பட வேண்டியதுதானே. மிஞ்சிய 584 கவிகளும் வாடாத கற்பகத் தருக்கள் அல்லவா!

என்றும் வாசனைதான். இதயத்தைப் போஷிப்பது தான்.

[illegible]

டி. கே. சிதம்பரநாதன்

'அனஸின்'

வில்லைகளில் கலந்துள்ள நான்கு மருந்துகளால் உங்கள் வலியை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்



'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசைநார்களில் நோவு இவற்றை நீக்கும்.

அனஸினில் அடங்கிய மருந்துகள் :—

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமுள்ளது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப் பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில்ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் நிறுத்துவதற்கு உபயோகமுள்ளது.

அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாகுவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல் வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A. 4?



ஜானகி ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தாள். அவள் எதிரே மேஜைமீது அன்றையத் தபாலில் வந்த கடிதங்கள் கிடந்தன. அவற்றில் ஒன்றுதான் அவளை அப்படிச் சிந்திக்கச் செய்தது. அந்தக் கடிதம் அவளை முதல் வாரம் வந்து 'பெண்' பார்த்து விட்டுப் போன ஹரிராமன் எழுதியது. அவன் 'ஜானகியைத் தனக்குப் பிடிக்கவில்லை' என்று பட்டவர்த்தனமாகக் கூறாமல் 'தான் ஜானகிக்குத் தகுந்த வரன் அல்ல' என்று தன்னையே தாழ்த்திக் கொள்வது போல் நாசுக்காக எழுதியிருந்தான். ஜானகிக்கு அக் கடிதம் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. இத்தனை நாள் அவள் தன்னை ஒருவனுக்குப் பிடிக்காமல் போகலாம் என்று நினைத்ததுகூட இல்லை. ஜானகிக்குத் தன் அழகிலும், அறிவிலும், ஆற்றலிலும் கர்வமில்லாவிட்டாலும் மிகுந்த நம்பிக்கை உண்டு. தான் ஒரு உயர்ந்த லட்சிய மனைவியாக நடந்து கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கை அவளுக்கு இருந்தது. உண்மையில் அவள் ஒரு லட்சியக் கணவனைத்தான் தேடிக் கொண்டிருந்தாள். எவ்வளவோ உயர்ந்த இடங்களிலிருந்தெல்லாம் வரன்கள் வந்து அவளைப் பார்த்தனர். அவர்களில் யாரையும் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவர்களையெல்லாம் நிராகரித்ததற்குக் காரணம் அவளுக்கே தெரியாது. அம்மா தூண்டித் துருவிக் கேட்டபோதும் 'என்னமோ எனக்குப் பிடிக்கவில்லை' என்பதற்கு மேல் அவளுக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

அம்மா ஜானகியின் மனத்தைப் புரிந்து கொள்ள முயன்றாள். ஆனால் முடியவில்லை. அவள் பிரத்யட்ச நிலைமைக்கேற்ப அனுசரித்துப் போகப் பழக்கப்பட்டவள். லட்சியம், ஆதர்சம் முதலிய வார்த்தைகளே அவளுக்குப் புதிதாக இருந்தன. அவளுடைய அந்த அறியாமை முழுதும் ஜானகிமீது கோபமாகப் பரிணமித்தது. அது ஒரு தாயாரின் நியாயமான கோபம் என்று ஜானகிக்குத் தெரிந்தது. தன் குழந்தைகள் காலத்தில் கல்யாணம் செய்து கொண்டு கணவன் மனைவியாகச் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று எந்தத் தாய்தான் ஆசைப்பட மாட்டாள்? ஆசைப்பட்டால் அது தவறாகுமா? ஆனால் அவள் செய்யக் கூடியது ஒன்றுமிருக்கவில்லை. பொழுது விடிந்தால், பொழுது போனால் தன்னையே நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. "வந்த பிள்ளைகளையெல்லாம் அண்ணனும் தங்கையுமாகச் சேர்ந்து பழித்து விரட்டுகிறீர்கள். கடைசியில் ஏதாவது ஒரு நிக்குவாயனோ, ஒன்னரைக் கண்ணனோ வந்து சேரப் போகிறான்!" என்று சலித்துக் கொள்வாள்.

இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டும், அம்மாவின் வருத்தத்தை வளர்க்கக் கூடாது என்பதற்காகவே ஹரிராமனை மணக்கச் சம்மதம் தெரிவித்திருந்தாள் ஜானகி. அவனானால் அவளைப் பிடிக்கவில்லை என்று எழுதி விட்டான்! விதி அவர்களைப் பிணைக்க விரும்பவில்லை போலிருக்கிறது! ஆமாம்! அழகியான அவளை ஹரிராமனுக்குப் பிடிக்காமற் போக வேண்டும் என்றால், ஒன்று அவன் கண்களில் குற்றமிருக்க வேண்டும்: அல்லது விதிதான் அவளை அவனுக்குப் பிடிக்காமற் செய்திருக்க வேண்டும்.

இப்பொழுதெல்லாம் அவளுக்கு விதியிலும் பிராப்தத்திலும் நம்பிக்கை விழ ஆரம்பித்தது. மனிதன் முயற்சியில் ஒன்றுமே அடங்கியிருக்கவில்லை. அவை அவை தமக்கென வகுக்கப்பட்ட



ஏதோ ஒரு வழியில்தான் நடக்கின்றன என்று திடமாக எண்ண ஆரம்பித்தாள்.

நிறையப் படித்து அவள் மூளை குழம்பி விட்டது என்று அம்மா குறை கூறுவது உண்மை தானா என்று அவள் பயந்தாள். கண்ணை மூடிக் கொண்டால், திறந்தால், தூங்கினால், கனவு கண்டால் பத்துப் பதினைந்து பெண்கள். எல்லோரும் அவள் வயதுள்ளவர்கள் தான். அவளைச் சூழ்ந்து நின்று கொண்டு, 'எங்களை யெல்லாம் பழித்தாயே! ஒதுக்கினாயே!! அந்தப் பாவம் உன்னைச் சும்மா விடுமா? நீ அழகு என்று எவ்வளவு கர்வப்பட்டாய்! படித்தவள் என்று என்ன பெருமை! அடேயப்பா! நாங்கள் பாடிக் காட்டியபொழுது உனக்குச் சிரிப்பு எப்படி அடக்க முடியாமல் வந்தது! எத்தனை கர்வத்துடன் எங்களைக் கழித்து ஒதுக்கினாய்? எல்லாம் பொருந்திய உன்னை மட்டும் பார்க்க வந்தவன் உடனே கொத்திக்கொண்டா போய் விட்டான்? எங்கள் வயிற்றெரிச்சல் வீண் போகாது. நாங்கள் பட்ட துன்பத்தை நீயும்அனுபவித்துப் பார்!' என்று இடித்து இடித்துக் காட்டுவது போலிருந்தது.

'ஐயோ! கர்வத்தினால் நான் அவர்களைப் பழிக்கவேயில்லை. அவர்கள் மனத்தைப் புண்படுத்தும் நோக்கமும் எனக்குக் கிடையாது. என் அண்ணாவுக்கு எல்லா விதத்திலும் சிறந்த ஒரு மனைவி வர வேண்டும் என்ற சுயநலம் பாராட்டியதைத் தவிர, நான் ஒரு குற்றமும் செய்தவளில்லையே! ஒரு பெண், தன் சகோதரன் சுகமாக வாழ வழி தேடுவது சுயநலமாகுமா?' என்று அவள் நெஞ்சு கதறியது. கண்களில் கசிந்த நீரை மெல்லத் துடைத்துக்கொண்ட ஜானகி, அடுத்த கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

ராகவன் என்பவன் எழுதியிருந்தான். அவன் தனக்குப் பெண் பார்க்க வரும் விவகாரமே பிடிப்ப இல்லையென்றும் அதனால் தனக்குப் பதில் தன் மதனியை அனுப்புவதாகவும், தன் ருசி, மனம் அறிந்த அவளுக்குப் பெண்ணைப் பிடித்திருந்தால், அடுத்த முகூர்த்தத்திலேயே, தான் கல்யாணம் செய்து கொள்ளத் தடையில்லை என்றும் எழுதி யிருந்தான்.

ஜானகியும் முதல் நாள் அதையேதான் தன் அண்ணாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். "பார்க்க வருகிறதும், பாடிக் காட்டுகிறதும் இந்தக் கூத்தொன்றும்எனக்குப்பிடிக்கவே இல்லை. இனிமேல் பெண் பார்க்க என்று ஒருவரையும் அழைத்து வராதே" என்றாள்.

"அதெப்படி முடியும்? பிள்ளையும் பெண்ணும் வருஷக் கணக்கில் பழகிக் காதல் கல்யாணம் செய்து கொள்ளும் காலத்தில் ஒருவரை ஒருவர் பார்க்காமலே கல்யாணம் என்றால் சிரிப்பார்கள்!" என்றான் அவள் அண்ணா.

"ஒரு நிமிஷம் பார்ப்பதில் ஒருவரைப் பற்றி என்ன அறிந்துவிட முடியும்? அந்த ஒரு நிமிஷம் பார்க்காமல் இருந்து விட்டால்தான் என்ன முழுகிவிடும்? முன் காலத்தில் பெண்ணும் பிள்ளையும் பார்க்காமலேயே கல்யாணம் செய்து கொள்ளவில்லையா? அவர்கள் சந்தோஷமாக இருக்கவில்லையா? எப்படியானாலும் சரி. எனக்கு யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை. நீ பார்த்து நிச்சயம் செய். நான் மறுக்கவில்லை. எனக்கு உன் மேல் பூர்ண நம்பிக்கை இருக்கிறது."

இன்று இந்த ராகவன் எழுதியிருக்கும் கடிதத்தைப் பார்த்தால் 'பெண் பார்க்கும் படலம்' பெண்களுக்கு மட்டுமில்லாமல், பார்க்க வரும் பையன்களுக்கும் எரிச்சலைத் தான் தருகிறது என்பது தெரிந்தது. தன் அண்ணாவுக்காகப் பெண் பார்க்கப் போன இடங்களில் நேர்ந்த கசப்பான அனுபவங்களும், அப்பொழுதெல்லாம் அவள் அண்ணா படும் தர்ம சங்கடமும் நினைவுக்கு வரவே ஜானகி இலேசாகச் சிரித்துக் கொண்டாள்.

"என்னடி நீயே சிரித்துக் கொள்கிறாய்? தபால்காரன் இன்னும் வரவில்லையா?" என்று சமையல் கட்டிலிருந்து வந்த அம்மா அங்கே கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

"அந்தப் பிள்ளை ராகவனுக்குப் பெண்ணைப் பார்க்க வருவது என்றாலே பிடிக்காதாம். அதனால் பெண் பார்க்கத் தன் மன்னியை மட்டும் அனுப்பப் போவதாக எழுதி யிருக்கிறான்" என்று கூறினாள்.

"இதென்ன கூத்து? அவன் பார்க்க வேண்டாமோ? கல்யாணம் செய்து





மதுரை சமஸ்கிருத கல்லூரி பிரின்ஸ்பால் ஸ்ரீ வி. சுப்ரமணிய அய்யர், எம்.ஏ. எல். டி. அவர்களின் குமாரர் சிரஞ்சீவி எஸ். வெங்கட சுப்ரமணியம், B. Com. A. C. A.-க்கும், சென்னை இண்டீகரல் கோச் பேக்டரி ஆபீஸ் சூப்பரெண்டெண்டு ஸ்ரீ ஜி. சுப்ரமணிய அய்யர் குமாரி சௌ ராஜேசுவரிக்கும் சென்னையில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க, மணமக்கள்!

கொள்ளப் போவது அவனா. அவன் மன்னியா? இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கே ஏன்தான் புத்தி இப்படிப் போகிறதோ!'' என்று ஆச்சரியப்பட்டாள் தாயார். ''வரும் மகராஜிக்கு உன்னைப் பிடித்திருக்க வேண்டுமே? அவன் எப்படிப் பட்டவனோ, என்ன மாதிரியோ?'' என்று வேறு விசாரப் பட்டாள்.

ஜானகிக்கு உள்ளூற ராகவன் மீது பெரும் மதிப்பு ஏற்பட்டு விட்டது. இந்த வரன் முடிந்து விடும் என்று அவளுக்குள் ஏதோ ஒன்று சொல்வதாக எண்ணினாள். வருகிற பெண்மணிக்குத் தன் மீது நல்ல அபிப்பிராயம் விழும்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மனத்துள் அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

மாலையில் ராகவனின் மதனி வந்தாள். அவளை எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறதே என்று ஜானகியின் அண்ணா திகைத்தான். ஒன்றும் நினைவு வராமற் போகவே வரவேற்பில் ஈடுபட்டான்.

ஜானகி வந்தவளைச் சட்டென்று அடையாளம் தெரிந்து கொண்டு விட்டாள். அந்தக் கணத்திலேயே ராகவனின் மனைவியாக ஆகும் நம்பிக்கையை ஜானகி இழந்து விட்டாள். அவள் நெஞ்சை இருள் சூழ்ந்து கொண்டது.

ராகவனின் மதனி வேறு யாருமில்லை. ஜானகியின் அண்ணாவும் அவளும் முதன் முதலில் போய்ப் பார்த்து விட்டு, பிடிக்கவில்லை என்று அவர்களால் மறுக்கப்பட்ட சேலத்துப் பெண் சண்பகம்தான். ஆறு வருடங்களுக்கு முன்னால், கன்னம் கதுப்பெல்லாம் ஒட்டி, முன் பல் சற்றே உயர்ந்து, கருவேப்பிலைக் கொத்து போல் ஒடிந்து விழுகிற மாதிரி நின்ற அதே சண்பகம்தான் இவள் என்று நம்புவது கடினமாக இருந்தது. கன்னங்கள் மாம் பழக் கதுப்புகள் போல் சதை பிடித்து முகம் நல்ல களையுடன் விளங்கியது. சண்பகத்தின் உயர்ந்த பற்கள் கூட அமுங்கி விட்டாற் போலிருந்தது. கறுப்பெல்லாம் உதிர்ந்து நல்ல நிறமாக இருந்தாள். காலம் அழகைக் கெடுத்துக் குரூபமாக்கும் என்று ஜானகி அறிவாள். ஆனால் காலம் குரூபிக்கு அழகு பெருகிடவும் வல்லது என்று அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் சண்பகத்தை அன்று பழித்தே இருக்க மாட்டாள். கட்டாயப்படுத்தி, எப்பாடு பட்டாவது அண்ணனை ஏற்கச் செய்திருப்பாளே!

கடிதம் போடுவதாகச் சொல்லிக் கால தாமதம் செய்வானேன் என்று, சிறுபிள்ளைத்தனமாக நேரிலேயே, 'உங்கள் பெண்ணை எங்களுக்குப் பிடிக்கவில்லை' என்று முகத்திலடித்தாற்போல் சொல்லி விட்டு வந்தபொழுது சண்பகத்தின் மனம் எத்தனை துன்பப்பட்டிருக்கும்! ஜானகிக்கு அன்று இதெல்லாம் ஏனோ நினைவு வரவில்லை!

அத்தனைக்கும் இன்று சண்பகம் வட்டியும் முதலுமாகச் சேர்த்துப் பழி வாங்கி விட மாட்டாளா? தன்னைச் சண்பகம் எப்படி அவமானப்படுத்தப் போகிறாளோ என்று நடுங்கினாள் ஜானகி. நிம்மதியில்லாமல் அவள் மனக்கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

ஆனால் சண்பகம் அவளைப் புரிந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. புதிதாகப் பார்ப்பவள் போலவே நடந்து கொண்டாள்.

சண்பகம், ஜானகியின் தாயாரிடம், ''எனக்கு ஜானகியை ரொம்பப் பிடித்திருக்கிறது, மாமி. அவள் என் தங்கை மாதிரி. நான் சொன்னால் ராகவன் தடையே சொல்ல மாட்டார். நாளைக்கு ராகவனையும், அவர் அண்ணாவையும் கூட்டிக்கொண்டு வருகிறேன். உங்கள் பிள்ளையை முகூர்த்தம் பார்த்துக் கொண்டு வரச் சொல்லுங்கள். நிச்சயம் செய்து விடலாம்'' என்று கூறிவிட்டு ஜானகியை நோக்கிப் புன்னகை புரிந்தாள்.

அவள் பார்வையைச் சந்திக்க முடியாமல் ஜானகி தலை கவிழ்ந்தாள். அவள் பாதங்களில் இரு நீர்ச் சொட்டுக்கள் உதிர்ந்து விழுந்தன.



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர்: ரா. பி. சேதுப்பிள்ளை

30. தென்காசி (தொடர்ச்சி)


தென்காசி நகரிலே தென்றல் வீசுகின்றது. மன்னன் மாளிகையில் தன்னந் தனியளாய் இருக்கின்றாள் அரசமாதேவி; மேடையிலே தவழ்கின்ற மெல்லிய பூங்காற்றிலே வாடுகின்றாள். சோலையிலே ஆணும் பெண்ணுமாய்க் கூடிக் குலாவும் அன்னங்களைக் கண்டு அகம் குழைகின்றாள். "மதுரைக்குச் சென்ற என் மன்னர் என்று வருவாரோ?" என்று மயங்குகின்றாள். செந்தமிழ் இன்பத்திலே இளைத்திருக்கும் அவர் நெஞ்சம் இங்கே இளைத்து வாடும் என்னையும் நினைக்குமோ என்று ஏங்குகின்றாள்.

"என்னை இவ்வாறு அவர்மறந்தும்
யான்அவரை மிகநினைந்திங்கு
இருந்து வாட
முன்னைவினைப் பயன்தானோ
இப்பிறப்பில் செய்ததவம்
முடிந்த வாறோ
கன்னன்மதன் அபிராமன்
வரதுங்க ராமன்இயற்
காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்காள்
இனிஎவ்வாறு உயிர்தரித்திங்கு
ஆற்று மாறே"

(குருகு - அன்னம்)

என்று தன் உணர்ச்சியை யெல்லாம் தமிழ்ப் பாட்டிலே உருக்கி ஆற்றாமையை மாற்ற முயல்கின்றாள். "அன்பின் சுவையறிந்த அன்னங்காள்! என் காதலராகிய காவலர் செஞ்சொற் கவிஞர். அவர் அருந்தமிழ் நூலொன்று இயற்றினார். தேமதுரத் தமிழோசை நிரம்பிய அந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றக் கொண்டு சென்றார். சின்னாளில் வருவேன் என்று சொல்லிச் சென்றவர் பன்னாளாகியும் வரக் காணேன்! இங்கு அவரையே நினைந்து நான் இருக்க, அங்கு தமிழிலே தோய்ந்து அவர் இருக்க நேர்ந்தது பழவினையின் பயனோ? பாவியேன் செய்த தவறோ?" என்று மனம் உருகிப் பேசுகின்றாள்.

இவ்வாறு பாடிய பாவை வரதுங்கராம பாண்டியன் தேவி. அம்மன்னன் எடுத்த வேலின் வெம்மையும் இயற்றிய நூலின்



செம்மையும் ஒரு பழம் பாட்டால் விளங்குகின்றன.

" கரங்குத்திரைப் பெருங்கடல்சூழ்
அவனி புரந்து இகல்கடந்து
கலியை மாற்றி
மறம்த்தகழ இலங்கிலேவேல்
வரதுங்க ராமன்இயல்
மதுரைச் சங்கம்
சிறந்தஅறு கார்பீடம்
தவில்பிரமோத் தரகாண்டம்
தேன்சொல் ஆக்கி
அறந்தழைக்கும் கவிஞர்செவிக்கு
ஆரமுத மாகஅரங்
கேற்றி னனே "


(அவனி-உலகம், இகல்-பகை, மறம்-வீரம்)

என்ற பாட்டால் அவன் படைத் திறமும் கவித் திறமும் புலப்படுகின்றன. இம் மன்னன் தென்காசிக்கு அருகேயுள்ள கருவையம்பதியிலே காதல் கொண்டு திருவாசகத்திற்கு நிகரான அருமையான பாட்டுடைய பல அந்தாதி மாலைகளும் பாடியுள்ளான்.

இப் பாண்டியன் காலத்தில் அதி வீர ராம பாண்டியனும் வாழ்ந்தான். அவனும் சிறந்த கவிஞன்; செந்தமிழ்ப் புலமை பெற்று விளங்கியவன். நைடதம் என்ற நூல் இயற்றி அழியாப் புகழ் அடைந்தவன் அவனே. "வெற்றி வேற்கை வீர ராமன், கொற்கையாளி" என்று குறுந்தொகை அவன் புகழ் பாடிற்று.

பிற்காலப் பாண்டியர்கள் என்று தென்னாட்டு வரலாற்றிலே பேசப்படுகின்ற பராக்கிரமன் முதலாய பாண்டியர்கள் நற்றமிழ்ப் புலமையோடு சிற்பக் கலையிலும் சிறந்த ஆர்வம் உடையராய் இருந்தனர் என்பது தென்காசித் திருக் கோயிற் பணியினால் தெரிகின்றது. அங்குள்ள கற்றூண்களில் வடிக்கப்பட்டுள்ள உருவங்களைக் கண்டால் கண் களிக்கும்; கருதினால் மனம் தித்திக்கும்.

கல்லிலே நின்று காட்சியளிக்கின்றான் ஒரு மங்கை; அவள் மேனிலத்தும் நானிலத்தும் மிக்க எழில் உடையாள்; அழகு துள்ளும் முகத்தினள்; கமுகை வென்ற கழுத்தினள்; சின்னஞ் சிறிய இடையி



ளுள்; வண்ணச் சேலை உடையினள்; கருவ மிருக்கும் மங்கைப் பருவத்தாள். ஒரு கையிலே கண்ணாடியை வைத்துக்கொண்டு மற்றொரு கையை வண்ணமாக வளைத்து நெற்றியிலே பொட்டிட நிற்கின்றாள் அப்பூவை.

"இருண்ட மேகம்சுற்றிச் சுருண்டு
சுழியெறியும் கொண்டையாள்—குழை
ஏறியாடி நெஞ்சைச் சூறையாடும்
விழிக் கெண்டையாள்
திருந்து பூமுருக்கின் அரும்பு
போலிருக்கும் இதழினள் —வரிச்
சிலையைப் போல்வளைந்து பிறையைப்
போல்இலங்கும் நுதலினள்"

என்று குற்றாலக் குறவஞ்சிக் கவிஞர் எழுதிய சொல் ஓவியம் அக்கல் ஓவியத்தைத் தழுவி எழுந்ததாகத் தோற்று கின்றது.

ஆங்கில நாட்டுக் கம்பெனியார் இங்கு அரசாண்ட காலத்தில் காசா மேசர் என்பவர் தென்காசி நாட்டில் ஒரு வர்த்தகக் கர்த்தராக நியமிக்கப்பட்டார். அவர் தென்காசி நகரின் அருகே ஒரு குடியிருப்பு அமைத்து, திருக் குற்றால மலையிலே தோட்டப் பயிரிடத் தொடங்கினர். தெற்கு மலைத் தோட்டம் முதலிய பத்துத் தோட்டங்களை உருவாக்கினர் அவர். அம் மலையில் இரு பெரும் பாறைகள் குடை போற் கவிந்துள்ள இடத்தில் இயற்கையாக அமைந்திருக்கின்றது ஒரு குகை. அக் குகையிலே ஒரு முனிவர் நெடுங் காலம் இருந்து தவம் புரிந்தார். அது கண்ட பொது மக்கள் "பரதேசி குகை" என்று அதற்குப் பெயர் இட்டனர். பழைய எழுத்துக்கள் பதிந்து இன்றும் அங்கே காணப்படுகின்றன. அவற்றை ஆராய்ந்து அறிந்தால் அக்குகையைப் பற்றிய குறிப்புக்கள் கிடைத்தல் கூடும்.

'பரதேசி குகை'யைச் சுற்றி ஒரு தோட்டம் வகுத்தார் காசாமேசர். நாட்டு மக்கள் அதற்குப் "பரதேசி தோட்டம்" என்று பெயரிட்டார்கள். காசாமேசர் அதனைச் சற்றே திரித்து "பாரடைஸ் எஸ்டேட்" (Paradise Estate) என்று ஆங்கிலத்தில் அமைத்தார். பரதேசியார் காலத்தில் அருள் விளைந்த இடம் காசா மேசர் கைவைத்தவுடன் பொருள் விளையும்



திருநெல்வேலி திரு எஸ். என். சோமயாஜுலு எம். எல். ஏ., அவர்களின் புதல்வி சௌ சீதா வுக்கும் பச்சைமலை எஸ்டேட் டைச் சேர்ந்த திரு சீதாராமன் அவர்களின் புதல்வர் திரு எஸ். சுப்பிரமணியம் அவர்களுக்கும் திருநெல்வேலியில் ஜுன் மாதம் 24-ந் தேதி வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க, சீதா — சுப்பிரமணியம் !

சுவர்க்க பூமியாயிற்று. இன்றளவும் ஆங்கிலத்தில் "பாரடைஸ் எஸ்டேட்" என்ற பெயரே அதற்கு வழங்கி வருகின்றது.

ஆறு ஆண்டுகள் காசாமேசர் பரிவாரங்களோடு தங்கியிருந்த இடம் ஒரு சிற்றூர் ஆயிற்று. பேர் ஆசை கொண்ட அவ்வர்த்தகக் கர்த்தர் "காசாமேசர் புரம்" என்று அதற்குப் பெயர் கொடுத்தார். ஆனால் காசி என்னும் பெயரின் வாசியறிந்த தென்காசியார் அதைக் "காசிமேசபுரம்" என்று வழங்கலாயினர். முன் பின் அறியாத பரதேசியைச் சுவர்க்கத்தில் மாட்டிய வெள்ளையற்கும் வீடளிக்கக் கருதி அவர் பெயரை முத்தி தரும் காசியாக மாற்றினர் போலும் தென்காசிவாசிகள் !

தொன்று தொட்டுப் பொருளும் அருளும் பொருந்தித் திகழ்வது தென்காசி நன்னகரம். அதைச் சார்ந்த மேலகரம், திருக் குற்றாலக் குறவஞ்சி நாடகத்தைத் தமிழகத்தார்க்குத் தந்தது. அந்த அகரத்திலே, குறவஞ்சிக் கவிஞர் குடும்பத்திலே பிறந்தருளினார் ஒரு பெருமகன். செந்தமிழையும் சிவநெறியையும் கண்ணெனக் கருதி வளர்க்கும் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்து, தவ ஒழுக்கத்தில் தலைசிறந்து திகழ்ந்தார் அப்பெருமான். மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் என்னும் அவர் பெயரை அறியாதார் இந்நாட்டில் அறியாதாரே ! ஆவடு துறை ஆதீனத் தலைவராக அவர் அமர்ந்திருந்த காலத்தில் தமிழ் மொழியின் நிலை உயர்ந்தது ; கலை சிறந்தது.

"நல்லார்தம் இதயமலர் நவில்பவர்,சுப்
பிரமணிய நல்லோய் ! நீதான்
கல்லாத நூலிலை,நீ காணாத
பொருளிலை,பல் கவிஞர் நின்மேல்
சொல்லாத பாவிலை,நீற் றறியாத
மன்னரிலை, தூய நின்கண்
இல்லாத குணமிலை, ஆயிரம் நாவு
ஆனாலுமுன்சீர் இயம்பற் பாற்றே"

என்று அவரை வியந்து பாடினார் கிறிஸ்தவக் கவிஞராகிய வேதநாயகம். 'மாசற்றவர் மனக் கோயிலில் வாழும் மாதவனே ! நீ கல்லாத நூல் இல்லை; காணாத பொருள் இல்லை. நின்பால் இல்லாத குணம் இல்லை. பாவேந்தரும் பூவேந்தரும் பாராட்டிப் போற்றும் நின் நலமனைத்தையும் என் ஒரு நாவால் உரை செய்ய ஒண்ணுமோ ?" என்று அக மகிழ்ந்து போற்றினார் அக் கவிஞர்.



ரவிசந்திரிகா

17. சிலம்பப் பள்ளிக்கூடம்

அப்புலிங்கம் அந்தப் புஸ்தகத்தில் மூழ்கி மூழ்கிப் போயிருந்தான்.

சீன தேசத்தில் கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் "யின்-யாங்" நிபுணர்கள் என்று அழைக்கப்பட்ட பேரறிஞர்கள் சிலர் இருந்தார்கள். அவர்கள் இயற்கையையும் அதன் போக்குகளையும், மனிதர்களையும் அவர்களுடைய செயல்களையும் ஆராய்ந்து பார்த்து ஒரு ரஸமான முடிவுக்கு வந்தார்கள். டாக்டர் ஸ்காட் என்ற அறிஞர் 'யீனிஸம்' என்று வர்ணிக்கப்படுகிற அந்த இரகசியங்களையெல்லாம் விரிவான ஒரு ஆராய்ச்சியாக எழுதியிருக்கிறார். அதை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தான் அப்புலிங்கம்.

அப்புலிங்கத்துக்கு மனத்தில் நிம்மதி இல்லை என்றால், ஒன்று சங்கீதம் கேட்கப் போவான்; அல்லது இந்த மாதிரி அறிவுக்கு உணவூட்டும் ஆராய்ச்சிப் புத்தகங்களை எடுத்துப் படிப்பான். இன்று அவன் எடுத்துப் படித்த புத்தகத்தில் அவனுடைய உள்ளத்தில் எழுந்து குமைந்து கொண்டிருந்த சந்தேகங்களுக்கு எல்லாம் ஒரு விளக்கம் இருந்தது.

இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சீனர்கள் உலகத்தின் ஆதார சக்திகளை இரண்டாகப் பிரித்து அவற்றை 'யின்' என்றும் 'யாங்' என்றும் பெயரிட்டார்கள். 'யாங்' என்பது சூரியனைப் போன்ற பிரகாச சக்தி. 'யின்' என்பது அதன் நிழல். உலகில் நல்ல விஷயங்களுக்கெல்லாம் ஆதாரமாக நிற்பது 'யாங்'. கேடுகளுக்கெல்லாம் வித்தாக இருப்பது 'யின்'! இந்த உண்மையைச் சூரியனும் அவனுடைய நிழலுமாகக் கண்டு சித்திரித்தார்கள் சீனர்கள். இந்த இரண்டும் ஒன்று சேர்ந்தே உலகம் இயங்குகிறது என்றார்கள். இதுவே 'யின்யாங்' சித்தாந்தம்.

இதைப் படித்தபோது அப்புலிங்கத்துக்கு வியப்பும் தெளிவும் ஒன்று சேர்ந்து ஏற்பட்டன. ரவீந்திரனும் சந்திரிகாவும் ஒரு ஒளி வட்டம் போலவும், அந்த ரவி சந்திரிகாவை விழுங்க வரும் நாகரத்தினமும் குப்புசாமியும் ராகு, கேதுவாகவும் மனத்துக்குள் நினைத்துக் கொண்டான்.

ராகு கேது என்பது ஏதோ மூட நம்பிக்கையினால் நம்மவர்கள் சொல்கிற அறியாமை என்று எண்ணுவது தவறு. நுட்பமான கருத்து அந்தச் சிந்தனைக்குள்ளே பொதிந்து கிடக்கிறது என்று அப்புலிங்கத்துக்குப் பட்டது.

சோமு

இப்படி அவன் எண்ணமிட்டுக் கொண்டிருந்த போதுதான் ரவீந்திரனுடைய வீட்டுக்குள்ளே சர்ப்பம் நுழைந்திருந்தது. அதைவிடக் கொடிய சர்ப்பமான நாகரத்தினம்



அதேசமயத்திலேதான் பகேரான் வீட்டுக்குள்ளே யிருந்து விஷப் பல்லி கன்றுகத் தீட்டிக் கொண்டு வெளியே வந்தான்!

ஆமாம்; காலையில் பகேரான் வீட்டுக்குள்ளே நுழைந்த நாகரத்தினம் அன்று இருட்டும் வரை அங்கேயே இருக்க நேர்ந்தது! இருந்து தீர்த்தான்!

காலையில் அத்தனை கர்ம சிரத்தையோடு பகேரான் வீட்டுக்குள்ளே நுழைந்தான் அல்லவா, நாகரத்தினம்! அப்பொழுது நிலைமை 'எக்கச் சக்கமாக' அல்லவா இருந்தது. அது காரணமாக அவன் பகல் முழுதும் அங்கேயே தங்க நேரிட்டது.

நாகரத்தினம் உள்ளே நுழைந்ததும், சிறுவன் 'மெஸ்மெரிஸ'த்தினுல் மயங்கி விழுந்ததும் ஒரே சமயத்தில் நடந்த சம்பவங்கள். உள்ளே சென்ற நாகரத்தினம் சற்று ஒதுங்கி நின்றான். பகேரானே அவனைப் பார்த்து விட்டான்.

"யார் நாக ரத்தினமா?" என்று கேட்டுக்கொண்டே, கீழே மயங்கி விழுந்த சிறுவனைத் தூக்கி எடுத்து அசைக்காமல் மேஜையிலே படுக்கப் போட்டான் பகேரான்.

"பகேரான்! நீ எத்தனை நாளாக இந்த மெஸ்மெரிஸ வேலையில் இறங்கி யிருக்கிறாய்?" என்று கேட்டான் நாகரத்தினம்.



"அதெல்லாம் இப்பொழுது பேச நேரமில்லை. பையனுடைய மயக்கம் எல்லாம் முக்கால் மணி நேரம் தான்! தெரியுமா! அதற்குள் எத்தனையோ. காரியம் செய்து முடிக்க வேணும். நீ போய் அது வரையில் மாடியில் உட்கார்ந்திரு. நான் கொஞ்ச நேரத்தில் மேலே வருகிறேன்!" என்றான் பகேரான். மெதுவாகத் தன்னைக் கத்தரிக்கிறானே என்று எண்ணித் தயங்கினான் நாகரத்தினம். உடனே "ஜிகிஜம்! ஜிங்கிஜம்! ஜிகிஜாங்கிஜம்......" என்று சொல்லியவாறு கண்களை ஒரு மாதிரி வைத்துக்கொண்டே நாகரத்தினத்தைப் பார்த்தவண்ணம், "சரி, நீ மேலே போய்க் காத்திருக்கலாம்!" என்றான் பகேரான்! அவனுடைய அந்த நிலையைப் பார்த்தால், நாகரத்தினம் இன்னும் சற்றுத் தாமதிக்கும் பக்ஷத்தில் அவனையும் 'மெஸ்மெரிஸம்' செய்து கீழே விழுத்தட்டி விட்டுவிடுவான் போலிருந்தது! நாகரத்தினம் மெதுவாக அந்த மெஸ்மெரிஸ அறையை விட்டு வெளியே வந்தான்.

'பேசாமல் வந்த வழியே திரும்பிப் போய்விட்டால் என்ன! இங்கே இந்த ஜிங்கிட ஜம் வந்து குறுக்கே நிற்கிறதே!' என்று ஒரு கணம் நினைத்தான் நாகரத்தினம். அடுத்த கணம் 'காத்திருக்கச் சொல்லியும் போய்விட்டாயே!' என்று பகேரான் தன் மீது சீறினால், எல்லாத் திட்டமும் வீணுகி விடுமே என்று கிலேசமும் உண்டாயிற்று.

"அட ஜிங்கிட ஜம்மே! ஜிங்கிட ஜிங்கிட ஜம்மே" என்று தலையில் அடித்துக்கொண்டே மாடிப் படிகளிலே மெதுவாக ஏறினான் நாகரத்தினம்.

இரவெல்லாம் தூக்கம் விழித்த களைப்பு. எடுத்த முயற்சிகள் எல்லாம் ஒவ்வொன்றுகத் தோற்றுக் கொண்டே வருவதால் ஏற்பட்ட சலிப்பு. ராமநாதன் வீட்டுத் திண்ணையிலே போய் ஒதுங்கப் போக, அவன் இவனைப் பார்த்துவிட, அதன் பிறகு நேர்ந்த விபரீதங்களால் ஏற்பட்ட அதிர்ச்சி, அக்காள் கல்யாணியின் கோபமான வார்த்தைகள், எல்லாவற்றிற்கும் மேலாக மீரானின் பகைமை — இப்படிப் பல குழப்பங்

களும் சேர்ந்து தலையைச் சுற்றின. பகேரான் வீட்டு மாடியிலே கிடந்த நார்க் கட்டிலின் மேல் துண்டை விரித்துப் படுத்தான். அப்படியே உறங்கி விட்டான்.

நாகரத்தினம் மறுபடி கண் விழித்த போது பகேரான் வீட்டுக் கடிகாரம் மூன்று மணி அடித்தது. அந்தக் கடிகாரத்தைப் பார்த்தான். அதில் ஒரு பெண் மணியின் படம் ஒட்டப்பட்டு பெண்டுலத்தின் இயக்கத்திலே அது அங்கும் இங்கும் நகரும்போதெல்லாம் கண்களைச் சிமிட்டி ஒரே பயங்கர மெஸ்மெரிஸமாகக் காட்சி தந்தது. பக்கத்தில் கிடந்த ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் பகேரான் ஏதோ ஒரு மாஜிக் புஸ்தகத்தைக் கையில் வைத்து அதில் வரைந்திருந்த பயங்கரமானபடங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன நாகு! ராத்திரி யெல்லாம் தூக்க முழிப்பா?" என்று கேட்டான் பகேரான்.

"ஆமா தம்பி! அது விஷயமா ஒரு முடிவுக்கு வரத்தான் இப்போ இங்கே வந்திருக்கிறேன்!" என்றான் நாகரத்தினம்.

"வந்து ஒரே கவலையோடு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறாய்!" என்றான் பகேரான்.

"களைப்பு அத்தனை அதிகம் தம்பி!" என்றான் நாகரத்தினம்.



இருவரும் விஷயங்களை அலச ஆரம்பித்தார்கள். நாகரத்தினம் மெதுவாகத் தனக்கும் அத்தான் ரவீந்திரனுக்கும் மனஸ்தாபம் உண்டானதைப் பற்றிச் சொன்னான்.

பகேரான் சொன்னான்: "நாகு, நீ ஏன் இத்தனை கஷ்டமான யோசனைகளை யெல்லாம் செய்கிறாய்? பேசாமல் ஆட்களை மட்டும் என்னிடம் இரகசியமாகக் காட்டி விடு! அப்படியே ஒவ்வொரு நபராக மெஸ்மெரிஸத்தில் கீழே விழத் தட்டி விடுகிறேன்!"

"அதெல்லாம் சரி தம்பி! ஆனால் விஷயம் அப்படி யெல்லாம் எளிதாக இல்லை! ஆமாம்!"

"நாகு, என்ன சொன்னாய்? மெஸ்மெரிஸத்தைப் பற்றி உனக்கு என்னடா தெரியும் என் அண்ணனே! கொஞ்சம் ஒரு நிமிஷம் பார்க்கிறாயா இப்பொழுது? — இந்தா இந்த உள்ளங்கையைப் பார் — இதோ சோத்துக் கையை — ஜிம், ஜிகிஜம், ஜிங்கிட ஜம், ஜிகிஜாங்கி ஜம்—"

"இந்தா தம்பி, தம்பி! சரியாப் போச்சு! என்னிடத்திலேயே ஆரம்பித்து விட்டாயா! நான் இப்பொழுது இருக்கிற நிலையில் மயங்கி விழவேண்டியது ஒன்றுதான் பாக்கி! அட கடவுளே!..."

"அதற்குச் சொல்லவில்லை நாகு! நீ என்னவோ மெஸ்மெரிஸம் என்றால் லேசாக நினைத்துத் தூக்கி எறிந்து பேசுகிறாயே?"

"பகேரான்! உன்னையோ உன்னுடைய மெஸ்மெரிஸத்தையோ நான் குறை சொல்லவில்லை. உன்னுடைய சக்தியைத் தான் நேருக்கு நேர் பார்த்தேனே. அந்தச் சின்னப் பையன்......"

"சின்னப் பையனா! எத்தனை பெரிய ஆளை வேண்டுமானாலும் கொண்டு வந்து நிறுத்தேன். ஒரு யானையை அப்படியே நாலு காலையும் சேர்த்துப் பீப்பாய்மேல் நிற்கும்படி சொல்லட்டுமா? எல்லாம் மெஸ்மெரிஸம் செய்கிற வேலையப்பா! அதிகம் எதற்கு? நீயே தான் கொஞ்சம் நின்று பாரேன். நிற்கக் கூட வேண்டாம். இதோ இந்த உள்ளங்கையைப் பார்—சோத்துக் கையை —எங்கே—ஜிம், ஜிகிஜம், ஜிங்கிட ஜம்......"

"தம்பி, தம்பி! பழையபடியும் ஆரம்பித்து விட்டாயே! நான் முழுதும் ஒப்புக் கொள்ளுகிறேன்—மெஸ்மெரிஸத்தினால் இந்த உலகத்தில் உள்ள எந்த மனிதரையும் உன்னால் மயக்கிக் கீழே தள்ளி விட முடியும்! ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் உள்ளங்கையைப் பார்க்கச் சொல்கிறாயே, சோத்துக் கையை, மனிதர்களை அப்படிப் பார்த்துக் கொண்டே எதிரே வந்து மௌனமாக நிற்கும்படி செய்ய வேண்டுமே! அது எப்படி சாத்தியம்? உதாரணமாக நம்முடைய உஸ்தாத் மீரானை உனக்கு எதிரே வந்து நின்று உன்னுடைய உள்ளங்கையைப் பார்த்துக் கொண்டு நிற்கும்படி சொல்ல முடியுமா?"

"என்ன உஸ்தாதா? உஸ்தாதா? அவரை எதற்கு இங்கே கொண்டு வரவேண்டும்? அவருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அல்லாவையே எதிர்க்கச் சொல்லுவாய் போலிருக்கிறதே! நாகரத்தினம், நீ ஒரு பேவகூப்! உன்னை என்ன செய்ய வேண்டும் தெரியுமா—இந்தா, இங்கே பார்—"

"பழையபடியும் ஆரம்பித்து விட்டாயா, சோத்துக் கையைப் பார்க்கச் சொல்ல!"

"அது இல்லேடா நாகு. சும்மா பார்க்கச் சொன்னேன். என்னைப் பார்த்துப் பேசு என்று சொன்னேன். உஸ்தாதைப் பற்றியே இப்படிப் பேச உனக்கு என்ன துணிச்சல் என்று பார்ப்பதற்காகச் சொன்னேன்—"

நாகரத்தினம் இந்த இடத்தில் மௌனமாக இருந்து நிதானித்தான்.

"என்ன யோசிக்கிறாய், நாகு?"

"இல்லே. எல்லாரையும் மயக்கித் தள்ளி விடுவதாகச் சொன்னாயே, உஸ்தாதையுங் கூடவா, என்று தெரிந்து கொள்வதற்காக அப்படிக் கேட்டேன். அதற்குள் நீ இத்தனை கோபப்பட்டு விட்டாயே! என்ன பகோரான் நீ! இப்படியா தப்பாக நினைப்பது ஒரு விநாடிக்குள்!"

பகோரானுடைய முகத்தில் மெதுவாக ஒரு சிரிப்பு வந்தது.

"அப்படிச் சொல்லு! அதுதானே பார்த்தேன். யாரையும் கீழே விழத் தட்டி விடலாம் என்று சொன்னால், கடவுளையே எதிரே கூப்பிடட்டுமா என்று கேட்பது? நாகு, உஸ்தாத் என்றால் எனக்கு அவர் நடமாடும் அல்லாஹ். என்னோடு பேசும் அல்லாஹ். அன்போடு சிரிக்கும் அல்லாஹ். எனக்குப் படியளக்கும் அல்லாஹ். என்னுடைய மெஸ்மெரிஸத்தையும், என்னுடைய சக்திகளையும் எல்லாம் கடந்த மனித தெய்வம் அது!"

நாகரத்தினம் அப்படியே இறங்கிப் போய் விட்டான். 'குரு பக்தி என்பது பகோரானுக்கு எத்தனை தீவிரமாக இருக்கிறது. தன்னுடைய சக்திகளைப் பற்றி எத்தனை தன்னம்பிக்கையோடு—ஏன் கர்வத்தோடு கூடச்—சொல்லிக் கொள்ளத் தயாராக இருக்கும் இந்த பகோரான், உஸ்தாத் என்றதும் கருடக் கொடியைக் கண்ட நல்ல பாம்பைப் போல அல்லவா படத்தைக் கீழே போட்டு விடுகிறான்! எப்படி அவனை ஒரு சிலம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கச் செய்து உஸ்தாதுக்கு விரோதமாகக் கிளர்ச்சி பண்ணும்படி தயாரிப்பது! நடவாத காரியம் போலிருக்கிறதே!' என்று சிந்தித்தான் நாகரத்தினம்.

"என்ன யோசனை பண்ணுகிறாய் நாகரத்தினம்? பகோரான் வெறும் வாய் வீச்சுக்காரன் என்றும் உஸ்தாத் என்றதும் இப்படி நடுங்குகிறானே என்றும் யோசிக்கிறாயா? தம்பீ, இல்லே, அண்ணே! கேளு விஷயத்தை. இந்த பகோரான் உலகத்தையே எதிர்த்து நிற்கவும் தயார். மெஸ்மெரிஸம் மட்டும் இல்லே. கையில் கம்பு பிடித்துச் சண்டைக்கு வந்தால் இந்தப் பகோரானுடைய குச்சி, அதற்குப் பதில் சொல்லும். சுருளி பிடித்தால் இந்தக் கையும் சுருளி பிடிக்கும். கோப்ட்டாவா அதற்கும் தயார். இல்லே, துப்பாக்கியா அதுக்கும் ரெடி! இந்தத் திருச்சியில்லே, சென்னைப்பட்டணம் இல்லே, தில்லிப்பட்டணம் இல்லே, இந்த உலகமே எதிர்த்து வந்தாலும், அல்லாஹ் கிருபையினால், உஸ்தாத் பேரைச் சொல்லி ஒரு கை பார்த்து விடுவேன்! ஆனால் இந்த உடம்பு நிமிர்ந்து நிற்காத இடம் இரண்டு உண்டு. ஒன்று அல்லாஹூ"த் தாலாவின் திருமுன்பு. மற்றொன்று உஸ்தாத் சந்நிதி. இல்லே யில்லே. அதை மாற்றிச் சொன்னாலும் குற்றமில்லே. ஒன்று உஸ்தாத். மற்றொன்று அல்லாஹ்!"

நாகரத்தினம் அசந்து விட்டான்!

"அதற்குச் சொல்ல வில்லே பகோரான்! உன்னுடைய திறமை எனக்குத் தெரியாதா என்ன! நான் நினைத்தது என்னவென்றால்—"

"என்ன நினைத்தாய்? அதைச் சொல்லாமலேயே ஏதேதோ பேசுகிறாயே!"

"அதைச் சொல்லத்தான் என்னை விடவில்லையே நீ!"

"சரி, சொல்லு. வாயை மூடிக் கொண்டு கேட்கிறேன்."

நாகரத்தினம் தொண்டையை இருமிக் கொண்டு பேச ஆரம்பித்தான். அவனுடைய மூளையானது சூழ்ச்சி வலையைப் பின்னிக் கொண்டிருந்தது.

"பகோரான்! நெடு நாளாக எனக்கு ஒரு ஆசை இருந்து வருகிறது. சிலம்பம் என்பது ஒரு மிக அருமையான வித்தை. நம்முடைய நாட்டில் படிப்படியாக அது மங்க ஆரம்பித்து விட்டது அல்லவா? இதை மங்க விடாமல் வளர்க்க வேண்டும் என்று ஆசைப் படுகிறேன். உஸ்தாதுக்கோ வயது ஆகிவிட்டது. அவரைக் கொண்டு இந்த ஆசையை நிறைவேற்றுவது என்பது இனிமேல் முடியாது. எனவே, உன்னைக் கொண்டு ஒரு சிலம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கச் செய்து, உனக்கு வேண்டிய பண உதவிகள் எல்லாம் செய்யலாம் என்று நினைத்தேன். இதைச் சொல்வதற்குள் நீ 'ஜிங்கிட ஜம்' ஆரம்பித்து விட்டாய்! என்ன செய்ய!"

பகோரானுக்கு இந்த யோசனையைக் கேட்டதும் முகத்தில் அப்படியே சந்தோஷம் மலர ஆரம்பித்தது.

"நாகு! அருமையான யோசனை சொன்னாய்! சபாஷ்!" என்றான் பகோரான். மீண்டும் தொடர்ந்து சொன்னான்:

"உஸ்தாதே என்னிடம் அடிக்கடி இந்த யோசனையைச் சொல்லியிருக்கிறார். அவரும் உடன் இருந்தே ஆரம்பித்துக் கொடுப்பார். அவருக்கு முதலில் தேங்காய் தட்டி மரியாதை செய்து விட்டே இந்தப் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கலாம்.

நாகு, எத்தனை பேஷான யோசனை சொன்னாய்! ஆண்டவன்தான் உன்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிறான். இங்கே பார்—"

"தம்பீ, அந்தப் பேச்சு மட்டும் வேண்டாம். உன்னையும் உன்னுடைய சோத்துக் கையையும் பார்க்கிற காரியம் மட்டும் நம்மிடம் வைத்துக் கொள்ளாதே-ஜிகிஜம்மா, ஜிங்கிடஜம்மா - அதை வேறு எங்காவது பார்த்துக் கொள். நமக்கு லால்குடியில் ஒரு குடும்பம் இருக்கிறது. ஏதோ கடவுள் புண்ணியத்தில் என்பார்களே, அப்படிக் கொஞ்சம் நிலபுலனும் இருக்கிறது. அவசியமானால் நம்முடைய சிலம்பப் பள்ளிக்கூட விஸ்தரிப்புக்காக அவைகள் பிரயோஜனப்படும். ஆகையால் 'இங்கே பார்' என்ற பேச்சை மட்டும் சொல்லாதே, தெரிந்ததா!"



பகேரான் சிரித்து விட்டான். ஏதோ நாகரத்தினம் பிரமாதமாக ஹாஸ்யம் பேசி விட்டான் என்றில்லை! அவனிடம் அந்த இரண்டு நிமிஷத்தில் இத்தனை பரிவு உண்டாகி விட்டது பகேரானுக்கு! சிலம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்பது அத்தனை தூரம் பகேரானுடைய நெடுநாளைக் கனவாக இருந்து வந்திருக்கிறது.

நாகரத்தினம் இதைக் கவனித்துக் கொண்டு தன்னுடைய சூழ்ச்சியை மேலும் விரிக்க ஆரம்பித்தான்.

"நாம் ஆரம்பிக்கப் போகும் பள்ளிக்கூடத்துக்குப் 'பகேரான் பள்ளிக்கூடம்' என்றே பெயர் வைக்க வேண்டும்—"

"நாகு, உஸ்தாதே அப்படித்தான் சொல்லுவாரப்பா!" என்றான் பகேரான்.

"ரொம்ப சரி. பீரான் பள்ளிக்கூடம் என்று ஒன்று இருப்பது போலவே, பகேரான் பள்ளிக்கூடமும் புகழோடு விளங்க வேண்டும். பீரான் பள்ளிக்கூடத்தில் இல்லாத விஷயம் ஒன்று நம் பள்ளிக்கூடத்தில் உண்டு. யாராவது கொஞ்சம் முறைத்துப் பார்த்தான் என்றால், ஜிகிஜம் இருக்கவே இருக்கிறது! என்ன பகேரான், நான் சொல்வது சரிதானே?"

பகேரான் சிரித்துக்கொண்டே சொல்லுவான்: "அதெல்லாம் சரி நாகு! ஆனால் அசந்து மறந்துகூட உஸ்தாதிடம் இந்தப் பேச்சை உச்சரித்து விடக் கூடாது. அவருக்கு மெஸ்மெரிஸம், மந்திர தந்திரம் இது ஒன்றும் பிடிக்காது. கையால் ஆகாதவன் செய்கிற காரியம் அதெல்லாம் என்று சண்டைக்கே வந்து விடுவார். அவருடைய மந்திரம் எல்லாம் அல்லா ஹுத்தாலாவின் திருநாமம் ஒன்றுதான். அதை இப்பொழுதே சொல்லிவைக்கிறேன், ஜாக்கிரதை!"

"அது சரி, பகேரான்! இன்னொரு முக்கிய விஷயமும் சொல்ல வேண்டும். பகேரான் பள்ளிக்கூடத்தில் பகேரான்தான் உஸ்தாத். நம்முடைய பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குப் பகேரான்தான் எல்லாம். எப்படி பீரான் பள்ளிக்கூடத்தில் பீரான்தான் உஸ்தாதோ, அப்படியே பகேரான் பள்ளிக்கூடத்தில் பகேரான்தான் உஸ்தாத். பகேரான் வைத்தது தான் வரிசை. இதையும் அதையும் குழப்பக் கூடாது!"

"ரொம்ப சரி; உஸ்தாதுக்கே அந்த மாதிரிக் குழப்புவது பிடிக்காது. சீடர்களை உஸ்தாதுகளாக்கிப் பார்க்கிறதில் உள்ள சுகத்தை நன்றாகத் தெரிந்தவர் ஆயிற்றே, நம்முடைய உஸ்தாத்! வாழையடி வாழையாகத் தாய் வாழையும் அதன் அருகிலே கன்றுமாக நின்று சீட பரம்பரை வளர வேண்டும் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறார் தெரியுமா அவர்!"

"பேஷ்! ஆகையினால் நம்முடைய சீடர்கள் முழுக்க முழுக்க நமக்குத் துணையாக, நமக்காக எதையும் கொடுக்கத் தயாராக இருப்பார்கள்!" என்றான் நாகு.

"எதையுமா? நம்முடைய பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் நம் பள்ளிக்கூடத்துக்காக உயிரையே கூடக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். அப்படியில்லாதவன் நமக்கு வேண்டியதில்லை!" என்றான் பகேரான். அந்தக் குரலிலே தான் எத்தனை தீர்மானம்!

"ஒருவேளை உஸ்தாத் பீரானுடைய சீடர்களே நம்மைப் பற்றி அவதூறாகப் பேசவோ, அல்லது நடக்கவோ ஆரம்பித்தாலுங்கூட நம்முடைய பிள்ளைகள்—"

"நாகு! என்ன சொல்லுகிறாய் நீ! உஸ்தாதின் சீடன் ஒருவனாவது, நம்மை

அவதூறாகப் பேசுவதாவது—அந்த மாதிரி நினைப்பே பைத்தியக்கார நினைப்பாயிற்றே!''

"அது சரி பகேரான்! ஒரு பேச்சுக்குச் சொல்லி வைத்தேன். அதாவது எந்தச் சந்தர்ப்பத்திலும் நம்முடைய பிள்ளைகள் நம்மைக் கைவிட்டு விடக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். இன்னொரு முக்கிய விஷயம் மறந்தே போய் விட்டேன்!''

"என்னப்பா அது?''

"இந்தப் பள்ளிக்கூடத்துக்கும் எனக்கும் உள்ள தொடர்பு வெளியே யாருக்கும் தெரியக் கூடாது. சிலம்பத்துக்காக நான் ஆயிரக்கணக்காகப் பணம் செலவழிக்கிறேன் என்று வெளியே தெரிந்தால் லால்குடியில் எங்கள் அப்பா பிரமாதமாகச் சண்டைக்கு வந்து விடுவார். வயதான மனிதர் பார். பணத்தாசை அதிகம். ஏதோ இன்னும் நூறு வருஷமா இருக்கப் போகிறார்? அது இல்லை. அவர் இருக்கிற வரைக்கும், இன்னும் கொஞ்ச நாளைக்கு அவருக்குப் பயந்த பிள்ளையாகத்தான் இருந்து விட்டுப் போவோமே!''

"ரொம்ப சரி நாகு. அப்பாவோடு என்னத்துக்கு வம்பு?...''

"அதனால் எனக்கும் உனக்கும் உள்ள சிநேகம் யாருக்குமே தெரியக் கூடாது. வெளிப் பார்வைக்கு எல்லாமே பகேரானுடைய காரியம் என்றுதான் இருக்க வேண்டும். உஸ்தாத் மீரானுக்குக்கூட இது தெரியக் கூடாது!''

"அதென்ன அப்படி?'' என்று ஆவலோடு கேட்டான் பகேரான்.

"உஸ்தாத் பழைய காலத்து மனுஷர். சூது வாது கிடையாது. நான் பணம் செலவழித்து இந்தப் பள்ளிக்கூடம் நடத்துகிறேன் என்று தெரிந்தால், அந்த சந்தோஷத்தில், அந்த உற்சாகத்தில் நாலு பேரிடம் இதைச் சொல்லி வைப்பார். சொல்லவேண்டாம் என்றால்கூடத் தம்மையும் மறந்து பேச்சு வாக்கில், ஆனந்தத்தில் சொல்லி விடுவார். பிறகு லால்குடிக்கும் நாகரத்தினத்துக்கும் அறுந்துபோய் விடும்! நம்முடைய திட்டம் எல்லாம் குட்டிச் சுவர்தான்!''

"குட்டிச் சுவரா! என்ன நாகு, நல்ல காரியத்தைப் பேசும்போதே இந்த வார்த்தையெல்லாம் சொல்லுகிறாய்....'' என்று ஓரே பக்தி சிரத்தையோடு கேட்டான் பகேரான்.

"அதற்கில்லை. நடப்பைச் சொன்னேன். அவ்வளவுதான். உஸ்தாதுக்கு என்னைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதானால் சொல்லு. நாளைக்கே எல்லா ஏற்பாடுகளும் செய்து விடுவோம்'' என்றான் நாகரத்தினம்.

"அதைப் பற்றிக் கவலைப்படாதே. காரியம் கெட்டு விடக் கூடாது என்பதற்காகத்தானே நீ இதைச் சொல்லுகிறாய். நியாயந்தான். உஸ்தாதிடம் உன்னுடைய தொடர்பையேசொல்லவில்லை. சரிதானா?''

"என் பேச்சே அங்கு இருக்கக்கூடாது. உஸ்தாத்துக்குக் கொஞ்சம் கோடி காண்பித்தாலும் கூட விஷயத்தைக் கண்டு பிடித்து விடுவார். மகா புத்திசாலியாயிற்றே அவர்!''

பகேரான் சொன்னான்:

"உஸ்தாதிடம் உன்னைப் பற்றிய பேச்சே இருக்காது, சரிதானா?''

"பேச்சா! நம்முடைய பெயரை அங்கே உச்சரிப்பது கூடக் கூடாது. காரியம் கெட்டு விடும். அதற்குத் தயார்தானே நீ?''

"நாகு, இன்னுமா உனக்குச் சந்தேகம்?'' என்று கேட்டான் பகேரான்.

"அப்படியில்லை, பகேரான்! உன்னுடைய குரு பக்தி அந்தளை தீவிரமாக

இருக்கிறது. அதை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது. அதனால்தான் இத்தனை சந்தேகம்!"

"குரு பக்திக்கும், இதற்கும் என்ன சம்பந்தம் நாகரத்தினம்? அதைப் பற்றி நீ கவலைப்படாதே. உன் பெயரையே உச்சரிக்க மாட்டேன். சந்தேகம் தீர்ந்ததா?"

"சபாஷ்! அத்தோடு நம்ப குப்புசாமி இருக்கிறானே —"

"யாரு சண்டியன் குப்புசாமியா?"

"ஆமாம், அவனும் நம்ப கட்சி!"

"கட்சியா, அப்படி யென்றால்...?" என்று கேட்டான் பகீரான்.

"அதாவது நம்முடைய பள்ளிக்கூடம் என்கிறேன்!"

"தொழில் தெரிந்த ஒரு ஆசாமிதான் குப்புசாமி. புலிவேஷத்தில் சிங்கம் ஆயிற்றே அவன்!"

"அவனைப் பற்றியும் உஸ்தாதிடம் சொல்லி வைக்காதே. அவனிடத்தில் ஏதோ கொஞ்சம் கோபம் போலிருக்கிறது, உஸ்தாதுக்கு!"



"குப்புசாமியிடந்தானே! யாருக்குத்தான் அவனிடம் கோபம் உண்டாகாது. தொழிலில் கெட்டிக்காரனே தவிர, முன் யோசனையில்லாத அசட்டுப் பயல் அவன். கிணற்றிலே குதி யென்றால், அடுத்த விநாடி கிணற்றுக்குள்ளே யிருந்துதான் குரல் கொடுப்பான். மடையன்!"

"பகீரான்! அப்படியெல்லாம் சொல்லாதே. உன்னை மாதிரி சரியான பச்சரிசி மாமரத்திலே குப்புசாமி போன்ற ஒரு நார் மாம்பழச் செடியை ஒட்டுவைத்தால், எவ்வளவு நன்றாகக் காய்க்கும், சொல்லவா வேண்டும். தவிரவும், நம்முடைய பள்ளிக்கூடத்துக்கு அவன் —"

"அதைப் பற்றி நான் தப்பாகச் சொல்லவில்லையே. சிலம்ப வித்தையில் அவனை அடிப்பதற்கு இந்த ஊரில் ஆள் இல்லை. அது தெரியாதா எனக்கு. நான் அவனுடைய புத்தியைப் பற்றி யல்லவா இப்பொழுது சொன்னேன்!"

"பகீரான்! அதெல்லாம் எதற்கு இப்பொழுது? குப்புசாமி நம்முடைய பள்ளிக்கூடத்துக்கு மாடாக உழைப்பான். சட்டாம்பிள்ளை என்று ஒரு பட்டத்தைக் கட்டிவிட்டால், காற்றிலே எவ்வியே பறந்து கொண்டிருப்பான்! நமக்கு அப்படி ஒரு ஆள் வேண்டும் பார்! அதனால் அவனைப் பற்றியும் உஸ்தாதிடம் ஒன்றும் சொல்லி வைக்காதே!"

"அது சரி. உஸ்தாத் கொஞ்சம் சாந்தமான பிறகு சொல்லிக் கொள்ளுவோம்."

"அதுவும் குப்புசாமியைக் கொண்டே உஸ்தாதிடம் சொல்லும்படி செய்யவேண்டும். நாம் ஒன்றும் அவனைப் பற்றி உஸ்தாதிடம் பேச வேண்டாம். தெரிந்ததா?"

"சரி!" என்றான் பகீரான்.

"பகீரான், நாளை உன்னை மறுபடி வந்து பார்க்கிறேன். முடிந்தால் குப்புசாமியையும் கூட்டிக் கொண்டு வருகிறேன். எப்படியும் நமது பள்ளிக்கூடம் ஈடு இணையில்லாமல் ஓங்க வேண்டும். தெரிந்ததா? அது வரை, இந்த ஜிங்கிட ஜம்மைக் கொஞ்சம் மறந்து வை!" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் நாகரத்தினம்.

"அது சரி; ஆனால் ஒட்டுமாங்கன்று என்று குப்புசாமியைச் சொன்னாயல்லவா? அந்த ஒட்டுமாங் கன்று, அதுபோய் ஒட்டிக் கொள்கிற நல்ல மரம் முழுவதையுமே பாழ்படுத்திவிடக் கூடாது! அதுவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்!" என்றான் பகீரான்.

"அப்படியென்றால்?" என்று சற்றுத் துணுக்கோடு கேட்டான் நாகரத்தினம்.

"அதாவது நல்லதும் கெட்டதும் சேரும் போது, கெட்டது நல்லதாகவும் கூடும், நல்லது கெட்டதாகவும் கூடும் அல்லவா!" என்று சொல்லிச் சிரித்தான் பகீரான்.

அந்த நேரத்தில் வெளியே "பகீரான்!" என்று குரல் கேட்டது. அப்படியே நாகரத்தினத்துக்கு உடம்பெல்லாம் பனிக்கட்டியாக ஜில்லிட்டது.

"பகீரான்!" என்று தெரு வாசல் படியிலே நின்று மறுபடியும் வந்தது அந்தக் கம்பீரமான குரல். அது வேறு யாருமில்லை, உஸ்தாத் மீரான்தான்! (தொடரும்)


Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram

தகப்பனாருக்கு பெருமிதமான சந்தர்ப்பம்!

இளம்பிராயத்தில் ஒரு பெரிய நிகழ்ச்சி — குழந்தையின் அன்னப்பிராசனம். குழந்தை வளர்ந்து கொண்டே வருகிறது. இருந்தும்கூட எவ்வளவு ஆதாரமாயிருக்கிறது. அவனை மிகவும் பாங்காய் கவனித்தல் வேண்டும். விசேஷமாக அவனுடைய மென்மையான சருமத்தை பாதுகாத்தல் அவசியம். ஜான்ஸன்ஸ் பேபி பௌடர் கெடுதலான அரிப்பை தடுத்து அவனுடைய சருமத்தை மெத்தெனவும், மிருதுவாயும் வைக்கும்.

ஜான்ஸன்ஸ் பேபி பௌடரை டாக்டர்கள் 70 ஆண்டுகளுக்கும் மேலாக சிபார்சு செய்து வருகிறார்கள். இன்றே ஒரு டின் வாங்குங்கள்!





Johnson's BABY POWDER

Regd. Trade Mark

ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்

சருமத்திற்கு ஹிதமளிப்பதில் உலகிலேயே நிகரற்ற பௌடர்

இலவசம்

குழந்தை பராமரிப்புப் புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள் — குழந்தையை சரியான முறையில் எப்படி பேணி வளர்ப்பது, பல் முளைக்கும்போது என்ன செய்ய வேண்டும், அவனை குளிப்பாட்டும் முறை, எப்படி நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக்கொடுப்பது முதலிய, பெற்றோருக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. இவ்விலாசத்திற்கு எழுதவும்

ஜான்ஸன் & ஜான்ஸன் (க்ரேட் பிரிட்டன்) லிட்., டிபார்ட்மெண்டு 21(எ), த. பெ. 1976 பம்பாய

JB. 994

REGISTERED NO. M. 4392
Registered as a newspaper in Ceylon